விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை (09.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(த-8972)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## மகாநாயக்கர்களின் கோரிக்கைக்கு சம்பந்தன் இணங்க வேண்டும்

### சுதந்திரக்கட்சி வேண்டுகோள்



(கொழும்பு)

மகாநாயக்கர்களின் முடிவுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வதில் அர்த்தமில்லை. மாறாக சங்க பீடங்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக கூட்டமைப்பு அறிவிக்க வேண்டும்.

தேர்தல் முறை மாற்றத்தினூடாக அரசியலமைப்பு திருத்தத்தை முன்னெடுக்கலாம் என சங்கபீடங்கள் கூறியுள்ளதால் அதனை பயன்படுத்தி அந்த 15☛



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது. அதனைப் படத்தில் காணலாம்.

நாளை வலம்புரியில் எதிர்பாருங்கள்...

மக்கள் கருத்து
வடக்கு மாகாண சபை தொடர்பில்...

புருசோத்தமன் எழுதும்...
தமிழர் தலைவிதி எப்படியாகும்?
தொடர்

# 3 உப ஜனாதிபதி பதவி

# சிறிய கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பில் சிறுபான்மை மக்களுக்காக மூன்று உப ஜனாதிபதி தெரிவுக்கான யோசனைகளை அரசியலமைப்பு உபகுழுவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை அமெரிக்கா மற்றும் இந்தியாவில் உபஜனாதிபதிமுறை இல்லை. அதேபோல் ஜனாதிபதியின் பாதுகாப்புசம்பந்தமாகஅமைச்சரவைக்கு மட்டுமே உரித்தாக்கப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு என்பதற்கு பதிலாக ஐக்கிய இலங்கை மக்கள் குடியரசு என பெயரிட வேண்டும் எனவும் இத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

மற்றும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு அரசியல் அமைப்பில் அவர்களுக்கான உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் யோசனை கூறிய அதேவேளை அவர்களுக்கும் காணி,பொலிஸ் அதிகாரம் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் கொடுக்கப்பட வேண்டும்.

மற்றும் இதன்பின் 04☛

## நேற்று திடீரென பெய்த மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு 7.30 மணியளவில் கடும்காற்று வீசியது அதனைத் தொடர்ந்து மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் மழை கொட்டித் தீர்த்தது. பின்னர் தூறலுடன் 15☛

## டெங்கினால் 230 பேர் பலி

(கொழும்பு)

நாடு முழுவதும் டெங்கு நோய் தொடர்ந்தும் வேகமாக பரவி வருவதாகவும் தற்பொழுது வரை இந்த நோயினால் 230 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. 15☛

## கோத்தா கைது கட்டுக்கதையாம்!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதாக வெளியான செய்தி வெறும் போலியாக சோடிக்கப்பட்ட கட்டுக்கதை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரி 15☛

## மக்கள் வறுமையில் அமைச்சர்கள் சொகுசா?

### மல்வத்து பீடம் கேள்வி

(கண்டி)

நாட்டில் காணப்படும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கம் அமைச்சர்களின் சொகுசு வாழ்க்கைக்காக கோடிக்கணக்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளமை வருந்தத்தக் 15☛

## மின் கட்டணம் அதிகரிக்காது!

(கொழும்பு)

மின்சார பாவனைக்காக செலுத்தப்படும் கட்டணம் எந்த தருணத்திலும் அதிகரிக்கப்படமாட்டாது என மின் சக்தி மற்றும் மீள்சுழற்சி சக்தி வலுத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பல்வேறு அனர்த்த நிலைமைகளின் போது மேலதிக செலவினங்களை 15☛

## முஸ்லிம் மீள்குடியேற்றத்துக்கு விக்னேஸ்வரனே தடையாம்!

(கொழும்பு)

வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவதற்கு அதிகாரத்திலுள்ள வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தடையாக உள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

மேலும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காது தடையாக உள்ளார்.

எனவே இந்தப்பிரேரணையின் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ளுங்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை முஸ்லிம் உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமை நாட்களில் தொழுகைக்குச் செல்லும் முன்னர் அவர்களின் பிரேரணை 15☛

## அரசை வீட்டுக்கு அனுப்ப நாடு பூராகவும் கருத்தரங்கு

(கொழும்பு)

இன்றைய அரசினை விரட்டியடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடளாவிய ரீதியில் மக்கள் கருத்தரங்குகள் வைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது என ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பிரசார செயலாளர் ரேணுக பெரேரா தெரிவித்துள்ளார். மேலும் இம்மாதம் 22-ம் திகதியிலி 15☛

## இளைஞனை காணவில்லை தாயார் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்து சென்ற மகன் ஒரு வாரமாகியும் வீடு திரும்பவில்லை என்றும், குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலே சந்தேகம் உள்ளதாக தெரிவித்து தாயார் ஒருவர் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

கிளிநொச்சி விசு 15☛

## இந்திய மீனவர்கள் வேலை நிறுத்தம்

(சென்னை)

எல்லை தாண்டி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கும் இலங்கை அரசாங்கத்தின் சட்டத்திற்கு எதிராக இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் இன்று தொடக்கம் காலவரையறையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் தமிழக மீனவர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கும் 15☛

## திடீரென தீப்பற்றி எரிந்த முச்சக்கரவண்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் முச்சக்கர வண்டியொன்று நேற்று நண்பகல் திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது. இது மீள் பாவனைக்கு உட்படுத்தமுடியாத நிலையில் முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளது.

திருநெல்வேலி 15☛



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lux Garden
# லக்ஸ் கார்டன்

யாழ் மண்ணின் நவீன யுகம்
மண்டபங்களின் பிரமாண்டம்

நல்லூர் மண்ணின் அமைதிச் சூழலில்...
கத்தோலிக்க தேவாலயங்கள்
இந்து ஆலயங்கள் அருகில்
உங்கள் இல்லத்தின் அனைத்து
மங்கள வைபவங்களையும் சிறப்புற நடத்திட

**பிரமாண்ட ஓர் இரண்டடுக்கு மண்டபம்**

ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா
அனைத்து நாடுகளின் அத்தனை வசதிகளுடன்
யாழ்.நகரின் ஒரே மண்டபம்

மேலைத்தேச, இந்திய, சீன, இலங்கை உணவு வகைகள் உட்பட உங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளுக்கும் சிறப்பு விற்பன்னர்கள் தயார் நிலையில்.

**தெரிவு உங்களது - சேவை எங்களது**

அனைத்து விபரங்களுக்கும் – மண்டப முன்பதிவுகளுக்கும்

No.32, Chetty Street Lane, Nallur, Jaffna. (9018)
0212223966, 0759396600
luxgarden32@gmail.com


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பேரின்பம் (ராசா)



வேல் விதி, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் 1ஆம் கட்டைச் சந்தி, ஜென்சி பாம் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பேரின்பம் (ராசா) கடந்த 06.07.2017 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னம்பலம்-அன்னலட்சுமி அம்மாவின் மூத்த புதல்வனும் செல்லத்துரை - கமலபாக்கியம் வேலும்மயிலும் - மதுரம் (மாம்பழம்) ஆகியோரின் அன்பு மருமகனும் மஞ்சுளா தேவியின் (இனிதா) அன்புக் கணவரும் பிரகாஷ், சோபா (பிரான்ஸ்), பிரசாத், அர்ஜனா (நெதர்லாந்து), பிரேம்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலன், றஜிதீப், ஜென்சி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீன், பிரதீஸ், பிரகீஸ், அக்ஷயா, அனோஜன், அனுசிக்கா, ராதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயிலிட்டித்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
வேல் வீதி, மயிலிட்டி.
தற்காலிக முகவரி:
1ஆம் கட்டைச் சந்தி,
ஜென்சி பாம்,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
ரகு - 0094772850180
கண்ணன் - 0094776999858
பிரபா - 0033782788093
சின்னப்பழம் - 0094770878137
அகிலன் - 0033651571786

(C-9015)


# அபிஷா தனியார் வைத்தியசாலை
## கற்குழி, வவுனியா.

**என்றும் எப்போதும் எம் மக்களுக்காக எமது சேவை முன்னிலை வகிக்கும்**

மருத்துவ சேவையில் மக்களின் மனதை கவர்ந்த வைத்தியசாலைகளில் ஒன்றாக எமது அபிஷா வைத்தியசாலை வன்னி பெருநிலப்பரப்பில் திகழ்கின்றது. வவுனியா கற்குழியில் அமைந்திருக்கும் எம் வைத்தியசாலையில் அனைத்து சேவைகளும் மக்களுக்கு கிடைக்கும் வகையில் மெருகூட்டப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு அறியத் தருகிறோம்.

எமது சேவைகள்


வெளிநோயாளர் பிரிவு


சத்திரசிகிச்சை பிரிவு


மகப்பேற்று பிரிவு


நிபுணத்துவ ஆலோசனைகள்


நவீன ஆய்வுகூடவசதி


குளிரூட்டப்பட்ட அறைகள்


இருதயநோய்கள் சிகிச்சை

இவ்வாறான சேவைகள் அனைத்தும் எம் வைத்தியசாலையில் எந்நேரமும் உங்களுக்காக தயார் நிலையில் இருக்கும் என்பதனையும் அறியதருகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கங்கள்:

முகவரி: இல 24A, கற்குழி வவுனியா. நிர்வாகம் அபிஷா வைத்தியசாலை | 024 222 1474, 024 222 4574, 077 310 3888

(C-8997)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதேச்சதிகார ஆட்சிக்கு இலங்கையில் இடமில்லை



## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

இலங்கையில் இனிமேல் எதேச்சதிகார ஆட்சிக்கோ இராணுவ ஆட்சிக்கோ இடமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

"கல்கமுவவில் நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனவரி 8ஆம் திகதியுடன் எதேச்சதிகார, இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது.

இனிமேல் ஒருபோதும், அத்தகைய ஆட்சிக்கு இலங்கையில் இடமில்லை.

சிலர் அதிகாரத்துக்கு வருவதற்காக செய்கின்ற சூழ்ச்சிகளை மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

முறைகேடு நடந்திருந்தால் அதனை வெளிப்படுத்துமாறு சிலர் சவால் விடுத்தனர். இப்போது, முறைகேடுகள் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன.

அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்று இப்போது எம்மால் மக்களுக்கு வெளிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கோத்தாவின் கைது குறித்து நான் எதுவும் கூறவில்லை

## மகிந்த அமரவீர மறுப்பு

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் இட்டுக்கட்டப்பட்டவை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து தன்னைக் கைது செய்யப் போவதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து முறைப்பாடு செய்ததற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கோத்தபா்ய ராஜபக்ஷ இந்நாட்டுக்காக பாரிய சேவை யாற்றிய ஒருவர் எனவும், அவரது கைது குறித்து தான் எதனையும் தெரிவிக்கவில்லையெனவும் அவ்வாறு வெளியாகியுள்ள செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையெனவும் அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அச்சுறுத்தலில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

"இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அச்சுறுத்தல் இல்லை" என புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு இலங்கை உள்ளாகியுள்ளதாக வெளியான தகவல் குறித்த கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில குழுக்கள் இப்படியான வதந்திகளை தமது நலனுக்காக பரப்பலாம். எவ்வாறிருப்பினும், அப்படியான ஒரு நிலை ஏற்படுமாயின், இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸார் ஆகியோர் அவற்றை எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலையில் உள்ளனரெனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (இ-7)


# பிறந்த இந் நன்னாளில் மனதார வாழ்த்துகின்றோம்

## திரு. அங்கஜன் இராமநாதன்

பாராளுமன்ற உறுப்பினர் யாழ்.மாவட்டம்.

அன்பு நிலை பெற்று ஆளுமை உயர்ந்து நிற்க
இன்பம் என்றும் நிலைத்து ஈடில்லா இனிய இந்நாளில்
உள்ளம் குழந்தையாய் ஊக்கத்தில் மேன்மையாய்
எண்ணத்தில் இமயமாய் ஏற்றத்தில் பெருமையாய்
ஐயம் என்பதற்கு அகத்தில் இடமின்றி ஒற்றுமை
உணர்வுடன் ஓர் வழி நின்று
ஔவை வழியில் அகிலத்தை நீ ஆள
அகவைகள் பல கடந்தும் அங்கஜன்
நீர் வாழ பிறந்தோர் எல்லாம் பேர் சொல்ல
வாழ்வதில்லை வாழ்ந்தோர் எல்லாம் வாழ்த்தும் வகையில்
வாழ்வதில்லை வையத்தில் நின் பிறப்பை
வானுயர வாழ்த்துகின்றோம்
பிறப்பின் அருமை உயிர்த்து
வாழ்வதில் வாழ்வின் பெருமை நேயம்
சூழ்வதில் மக்கள் மனங்களில்
மங்காப் புகழுடன் நீங்காமல் நீர் வாழ
வீழ்த்துகின்றோம் புது
அகவையிலே!



வாழ்த்துவோர்
அளவெட்டி அபிமானிகள்

(C-9015)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப் பெண் தேவை

நல்லூரில் உள்ள வீடு ஒன்றிற்கு நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. (C-9022)

தொடர்பு :
0768267697

## VACANCIES

இலங்கையின் முன்னனி கல்வி நிறுவனத்தின் 'Jaffna' வலையமைப்புடன் இனைந்து கொள்ளுங்கள்

**English Teacher**

Full Time / Part time

Sent cvs within one week through email

**BRITISH COLLEGE**

23, Kachcheri nallur Rd, Jaffna.
Email. : britishcollegekandy@gmail.com

(C-9021)

## கொக்குவில் இந்து வழமை போல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி வழமை போல்நாளை இயங்குமெனயாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களை பாடசாலைக்குச் செல்லவேண்டாமென பழைய மாணவர் சங்கத்தின் பெயரில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளன.

இந்நிலையில் நாளை திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி வழமைபோல் இயங்குமெனவும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்காக இடம்பெறுமெனவும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (மு)

## 3 உப ஜனாதிபதி ...

தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி இல்லாத குறிக்கப்பட வேண்டுமென இவர்கள் கூறியுள்ளனர்.

இதே வேளை புதிய அரசியல் அமைப்பு மாற்றத்தின்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பிரமுகர் ஒருவருக்கு துணைப்பிரதமர் பதவி வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

## VACANCIES

**Customer Service Executive**
(Male only)

**Requirements :**

1. Fluent in English (Writing & Speaking)
2. Computer Skills (Internet and Email)
3. Accommodation provided

Call only the person who have good Knowledge of English

Walk in Interview
0768578474, 021 222 7077
careers. penguin @ gmail.com (9736)

## இனிய அகவை நாள் நல்வாழ்த்துக்கள்

### கௌரவ அங்கஜன் இராமநாதன்



**அவர்கள் வாழ்க வளமுடன்**

முதிர்ந்த ஞானம், கடுமையான உழைப்பு இவைதான் கௌரவ அங்கஜன் இராமநாதன். அவர் தமிழ் மக்களின் விடிவெள்ளி. இளைய சமுதாயத்துக்கு ஒளி, ஒலி, வழி. எண்ணிலடங்கா சாதனைகளை படைத்தவர். எண்ணத்தால், செயலால் ஈடுஇணையற்ற இளைஞர்.

அவர் தொட்ட துறைகளிலெல்லாம் கசடறக் கற்றவர்; கற்ற துறைகளிளெல்லாம் ஓங்கு புகழ் பெற்றவர். அவரது அகவை நாள் தமிழ் மக்களுக்கு சிறந்த நாள். தமிழ் மொழி மலர்ச்சிக்கு உகந்த நாள். தமிழ் மக்கள் மேன்மேலும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் உடல்நலத்தோடு பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல கச்சாய் கண்ணகை அம்மனை பிரார்த்திக்கின்றோம். வாழ்க வளமுடன்...

வாழ்த்துபவர்கள்:
**கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினர்** (C-9017)

## பதவி வெற்றிடம்

AFRIEL இளைஞர் அமைப்பானது இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை வலுவூட்டுவதற்கு வினைத் திறனுடன் செயற்படும் ஒரு இளம் அமைப்பாகும். இலங்கையில் இளம் சமூகங்களுக்கு ஜனநாயக வழிமுறைகள் ஊடாக நீதிக்கும், நியாயத்திற்கும் செயற்படுவதற்கான கோட்பாடு ரீதியான அறிவையும், செயன்முறை அறிவையும் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் AFRIEL இளைஞர் அமைப்பினால் செயற்படுத்தப்படுகின்றது.

AFRIEL இளைஞர் அமைப்பினால் செயற்படுத்த எதிர்பார்க்கும் பயிற்சி வேலைத் திட்டங்களிலும், மக்கள் விழிப்புணர்வு செயற்றிட்டங்களிலும் இவ் வேலைத்திட்ட உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**வேலைத் திட்ட உத்தியோகத்தர் (பதவிகள் எண்ணிக்கை : 11)**

- வேலைத்திட்ட உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் முல்லைத்தீவு
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் வவுனியா
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் மன்னார்
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் கிளிநொச்சி
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் மாத்தளை, கண்டி
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை
- வேலைத்திட்ட உததியோகத்தர் அனுராதபுரழ், பொலநறுவை
- வேலைத்திட்ட உத்தியோகத்தர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை

**வேலைத்திட்டஉத்தியோகத்தர் பதவிக்குரிய கடமைகள்**

★ AFRIEL தொண்டு செயற்பாட்டாளர்களுக்கு மனித உரிமைகள், ஜனநாயகம், மோதல் தவிர்ப்பு, தேர்தல் முறைகள் மற்றும் கண்காணிப்பு செயல்முறை, வாக்குரிமை, இலஞ்ச ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் அமைப்புக்கள் பற்றிய அறிவினை பெற்றுக் கொடுக்கும் விரிவுரைகளை வழி நடத்துவது.

★ AFRIEL தொண்டு செயற்பாட்டாளர்களுக்கு மனித உரிமைகள், ஜனநாயகம், மோதல் தவிர்ப்பு, இலஞ்ச ஊழலுக்கு எதிரான சட்டமும் அமைப்புக்களுக்குமுரிய செயன்முறைப் பயிற்சியில் தெளிவான அறிவை பெற்றுக் கொள்ளும் வகையிலான வேலைத் திட்டங்களை அமைத்து செயற்படுத்துவது.

★ வேலைத்திட்ட உத்தியோகத்தரினால் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களின் அறிக்கையிடல் செயற்பாடுகள்.

➢ **எதிர்பார்க்கும் தகைமைகள்**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொண்ட பட்டம்.
- குறைந்தபட்சம் மனித உரிமைகள் விடயத்தில் இரண்டு வருட முன் அனுபவம்.
- நிர்வாக செயற்பாடுகளுக்காக போதிய அளவு கணினி சார்ந்த அறிவு.

◆ விண்ணப்ப பத்திரங்கள் hello@afrielyouthnetwork.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2017-07-15 இற்கு முன்பு அனுப்பிவைக்கவும்.
(சகல விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சை யொன்றுக்கு சமுகமளிக்க வேண்டியதுடன் அதில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் 15 நாட்கள் பயிற்சியின் பின் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.)

✶ **தொடர்புகளுக்கு :- 076-6802016** (C-9018)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அங்கஜன் இராமநாதன்




Best Wishes

**இனிய அகவை நாள்
நல் வாழ்த்துக்கள்
கௌரவ அங்கஜன்
இராமநாதன்
அவர்கள் வாழ்க
வளமுடன் ...**

**போதைகள் ஏறிடா
பாதைகள் மாறிடா - உன்
பக்குவப்பயணத்தில்
பயணிப்போர் ஏராளம் ...**

**தடுப்பில் இருந்தவரும்
தடுத்து வைத்தவரும்
உன்னால் இன்னொரு பிறப்புக்கு
உள்ளான கதைகள் பல ...**

**ஈழத்து அரசியலில்
இதுவரை யாரும் தான்
தானாக வடிவெடுத்து - உன்போல்
தளிர்த்து வளர்ந்ததில்லை**

**புலம் பெயர்ந்தவர் வாழ்ந்தாலும்
புலம் பெயரா உன்னன்பில்
உறைந்து வாழ்த்துகிறார்
வாழிய நீர் வாழியவே !!**

(C-9019)

சுவிட்சர்லாந்து வாழ் ஆதரவாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர், முதியோருக்கான பல்வேறு போட்டி நிகழ்வுகள்


(யாழ்ப்பாணம்)


ஹரி பொட்டர் (Harry Potter ) புத்தக வரிசையில் முதற்பதிப்பான "Harry Potter and the Philosopher's Stone" எனும் புத்தகம் வெளியிட்டு தற்போது 20 வருடங்கள் நிறைவுற்றமையையொட்டி British Council அதனை விழாவாக கொண்டாட தீர்மானித்துள்ளது.

இந்த விழாவானது , யாழ்ப்பாணம், கண்டி , கொழும்பு, Orion City ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. இதில் சிறுவர்கள், வயது வந்தவர்களுக்கான புதையல் தேடல்கள் , சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்குமான புத்தக வாசிப்பு , தொப்பிகளை வகைப்படுத்தும் நிகழ்வு , சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான கைவினை பொருட்களை தயாரிக்கும் நிகழ்வு மற்றும் வினாவிடை போட்டி ஆகிய நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இல. 70, றக்கா வீதியில் அமைந்துள்ள British Council நூலகத்தில் 09,23,30ஆம் திகதிகளிலும் மற்றும் ஓகஸ்ட் மாதம் 6,13ஆம் திகதிகளான வார இறுதி நாட்களான ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணிமுதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களை www.britishcouncil.lk/event எனும் இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். (4-8)

# சாவகச்சேரியில் கடும் காற்றுடன் மழை





நேற்று முற்பகல் கடும் காற்றுடன் பெய்த மழையினால் சாவகச்சேரியின் பல பகுதிகளிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் மின் கம்பிகளும் அறுந்து வீழ்ந்தன. கட்டடங்களின் மேல் இருந்த பாரிய விளம்பரப் பதாகைகளும் சரிந்து வீழ்ந்தன. (இ-89-101)

# மகாநாயக்க தேரர்களை இழிவுபடுத்த முயற்சி

(கொழும்பு)

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மாநாயக்க தேரர்களை இழிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

மூன்று பீடங்களினதும் மாநாயக்க தேரர்களை இழிவுபடுத்தும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் அமைப்பு திருத்தங்கள் அவசியமற்றது என மாநாயக்க தேரர்கள் கூறியது அரச சார்பற்ற நிறுவனங்களை ஆத்திரமடையச் செய்துள்ளது.

இந்த நிலையில் முக்கிய மாநாயக்க தேரர்களை முகநூல் ஊடாக இழிவுபடுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. (8-7)

# சைட்டத்திற்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக் கழக மாணவர்கள் மீதான அரசின் வன்முறையைக் கண்டித்தும் , கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படைச் சேவைகளின் தனியார்மயப்படுத்தலைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம் ஒன்று லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தை சைட்டத்திற்கு எதிரான பெற்றோர், மாணவர் இயக்கம் முன்னெடுத்துள்ளது.

இதன்போது தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

" கல்வியும் சுகாதாரமும் விற்பனைக்கு இல்லை" , "மாணவர்களை ஒடுக்கதே", "அரசியல் கைதிகளை விடுதலை செய்" , "மாணவர்களை விடுதலை செய்" போன்ற சுலோக அட்டைகளை மூன்று மொழிகளிலும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்திலீடுபட்டோர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளிக்க முற்பட்ட போது இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. இறுதியில் போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அலுவலக வாயிலில் ஒட்டிவிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)








உலக போசாக்கு தினத்தை முன்னிட்டு யாழ். சித்த மருத்துவ துறையின் 30 ஆம் அணி மாணவர்களின் இனிப்பின்றிப்புசிப்போம் கண்காட்சி நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை வளாகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுதேச வைத்திய ஆணையாளர் வைத்திய கலாநிதி சியாமா துரைரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக சித்த போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி பிரேமா சிவசண்முகராஜா , சித்த மருத்துவத்துறை தலைவர் வைத்திய கலாநிதி விவியன் சத்தியசீலனும் கலந்து கொண்டனர். (படங்கள்:- பரமேஸ்வரன்)

# எதிர்கால அரசியல் தொடர்பில் மகிந்தவுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி அமைச்சர்கள் எட்டுப் பேர் நேற்று முன்தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீல.சு.கட்சிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முடிவுறுகின்றது. இதன்பின்னர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் 18 பேர் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

நேற்று முன்தினமிரவு மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளதும் இவ்வாறான தீர்மானத்திலுள்ள சிலர் என்பதாகவும் கூறப்படுகின்றது. (7-8)

# இராசி பலன்

09.07.2017
(ஆனி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பூரணை முற்பகல் 10.12 மணிவரை
பூராடம் மாலை 5.48 மணிவரை
சுபநேரம் 8.58 - 10.28 மணிவரை
இராகுகாலம் 4.28-5.58 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி செவ் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம், திருவாதிரை<br>இரவு 1.23 மணிக்கு<br>மகர-சந் | | புதன் |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** திறமைகள் வெளிப்படும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன நன்மையுண்டு.

**மகரம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.


**விருச்சிகம்** தேவையற்ற விவாதங்களைத் தவிப்பது நல்லது, சிந்தனை மிகுதியான நாள், எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், பொறுமையாய் சாதிக்க வேண்டிய நாள்.

**துலாம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், [illegible] சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நயினை நாகபூஷணிக்கு நேற்று தேர்த்திருவிழா











## புதிய யோகா பயிற்சி நெறி இன்று நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகாஉலகம்அமைப்பின் புதிய யோகா பயிற்சி நெறி இன்று நல்லூர்த்தேரடி அருகே 63 நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும். இதற்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் பொதுச் செயலர் சோ. முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் யோகா எனும் தொனிப் பொருளிலும் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ். உமாசுதன் யோகா கலையின் சிறப்பு என்னும் விடயம் பற்றியும் கருத்துரை வழங்குவர். பிரணாயாமமும் குண்டலினியும் என்னும் நூலும் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

யோகா பயிற்சிநெறி-01 காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும், பயிற்சிநெறி - 02 பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும், மூன்றாவது பயிற்சிநெறி மாலை 6 மணி தொடக்கம் 7மணி வரையும் , நான்காவது பயிற்சி நெறி இரவு 7மணி தொடக்கம் 8மணி வரையுமாக நான்கு பயிற்சி நெறிகள் இரண்டு மாதங்கள் தினமும் நடை பெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான யோகாசனம், பிராணாயாமம் , தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபமுள்ள ஆசான்களால் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடு, சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயனடைமுடியுமென யாழ்.யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (3)

## ஆண்டு நிறைவு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும்

சிவபூமி பாடசாலையின் 14ஆம் ஆண்டுநிறைவு விழாவும் புதிய மேல்மாடி கட்டட திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் வழங்குவார்.

பிரதமவிருந்தினராக தொழிலதிபர் செல்வி றூபா அருளானந்தம். லண்டன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய நிபுணர் சு.ரவிராஜ், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் வைத்திய நிபு[illegible] ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## பாராட்டு விழா

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் பிரெஞ்சு சினிமாவில் தனது அடையாளத்தைப் பதித்த இலங் கையைச் சேர்ந்த இளையாள் சிறிதருக்கான பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கைதடி விநாயகர் மண்டபத்தில் DAN தொலைக்காட்சிப் பணிப்பாளர் குகநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் இந்தி யாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கீபோட் (Key BoarD) வாத்தியக்கலைஞர்ஜீவராஜின் இசை நிகழ்வும் இடம்பெறும். (3)

## பரிசளிப்பு விழா

யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் [illegible] ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## நிரம்பி வழிகிறது கழிவுநீர்த் தொட்டி



மருதனார்மட சந்தையின் கழிவு நீர்த்தொட்டி நிரம்பி வழிந்தோடி பெரும் சுகாதாரச் சீர்கேடு காணப்படும் நிலையில் இது குறித்து அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்தவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தைப் பகுதியில் உள்ள கழிவு நீரானது தொட்டி ஒன்றிற்குள் செல்கின்றது. இத்தொட்டி நிரம்பி வழிந்து கழிவு நீர் வெளியில் செல்லும் நிலையில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது.

இரண்டு தினங்களிற்கு மேலாக இவ்வாறு கழிவுநீர் வெளியேறுவது தொடர்பில் உரிய அதிகாரிகளோ அல்லது சுகாதாரப் பகுதியினரோ கவனம் எடுக்கவில்லை எனச் சந்தைக்கு வரும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (8-60)

## தேரும் தீர்த்தமும்

புத்தூர் கிழக்கு அருள்மிகு குருநாத சுவாமி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ.கந்தசத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்காத குழந்தைக்கு ஏன் சோதிடம்? கோத்தாவிடம் கடிந்த அநுநாயக்க தேரர்

(கொழும்பு)

பிறக்காத குழந்தைக்கு ஏன் சோதிடம் பார்க்கிறீர்கள் என்று இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தா பய ராஜபக்ஷவிடம், மல்வத்த பீடத் தின் அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமல தம்ம தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடாதி பதிகளைச் சந்தித்தபோது தம்மைக் கைது செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முற்படுவதாக அவர் மாநாயக்க தேரர்களிடம் முறையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மல்வத்த பீடத் துக்குச் சென்ற கோத்தபாய ராஜபக்ஷவிடம், மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரர், அரசியலமைப்புத் தொடர்பாக கூட்டு எதிரணியினர் வெளியிடும் எதிர்ப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

'உத்தேச அரசியலமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எந்த அடிப்படையும் அற்றது. இது பிறக்காத குழந்தைக்கு சோதிடம் பார்ப்பது போன்றது.

அரசியலமைப்பு வரைவு ஒன்று உருவாக்கப்படாத நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவது அர்த்தமற்றது.

நாடாளுமன்றத்தில் தினேஸ் குணவர்த்தன ஆவேசமாக ஆற்றும் உரைகளை நான் கவனித்து வருகிறேன். அதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. நாங்கள் ஜனாதிபதியை சந்தித்து, சாதாரண மக்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு வலியுறுத்தியிருக்கிறோம்.

விலைவாசி அதிகரித்து மக்கள் சாப்பிட முடியாத நிலையில் இருக்கின்றனர் என்பதை தெரியப்படுத்தியிருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7-8)

# நான் சட்ட விவகாரத்தில் தலையீடு செய்வதில்லை

## சாகல ரட்நாயக்க தெரிவித்தார்

(கொழும்பு)

சட்ட விவகாரங்களில் தாம் தலையீடு செய்வதில்லை என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார். சட்டம் ஒழுங்குத்துறை அதிகாரிகள் சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வித அரசியல் தலையீடுகளும் பிரயோகிக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஊடகங்களிடம் எதனையும் மறைக்க வேண்டிய அவசியம் எதுவும் தமக்கு கிடையாது என அவர் தெரிவித்தார். (இ-7)


## சிவபூமி பாடசாலை

SIVA POOMI SCHOOL

### 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய மேல்மாடி கட்டடத் திறப்பு விழாவும்

இறையருளாலும் உங்கள் அனைவரதும் நல்லாசியாலும் 14 ஆம் ஆண்டில் எமது பாடசாலை காலடி எடுத்து வைத்துள்ளது. எமது பாடசாலையில் தொழில்பயிற்சி பிரிவுக்கு அமரர் அருளானந்தம் நினைவாக அவரது குடும்பத்தவர்களால் அருளானந்தம் நினைவு மண்டபம் கட்டப் பெற்று ஆண்டு விழாவில் திறந்து வைக்கப்பட இறையருள் கைகூடியுள்ளது.

எமது பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட தாங்கள் அனைவரும் இவ் விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**இடம்:** சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
**காலம்:** 09.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

### நிகழ்ச்சி நிரல்

**தலைவர்**
"செஞ்சொற்செல்வர்"
கலாநிதி. ஆறு திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)

**பிரதம விருந்தினர்**
செல்வி. றூபா அருளானந்தம்
(தொழில் அதிபர், லண்டன்)

**சிறப்பு விருந்தினர்**
வைத்திய நிபுணர் சு. ரவிராஜ்
(பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்**
வைத்திய நிபுணர் ந. சரவணபவன்
(ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

**கலை நிகழ்ச்சிகள்**
சிவபூமி பாடசாலை மாணவர்கள்

(9727)

*மதிய விருந்து

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை.

021 222 7938 sivapoomi@gmail.com sivapoomi.com



## ST. JOHN'S COLLEGE, JAFFNA

**VACANCIES**

Applications are hereby invited from qualified persons for the following:

1. **Science (Tamil Medium/English Medium)** - Grade 6-11
2. **Western Music** - Grade 6-11
3. **Office Work/ Management Assistant**
(Good Command of English & Computer Literacy essential)

Please send your complete CV with contact details of two non related referees by post on or before 22nd Jully 2017 to the address below. Only shortlisted candidates will be called for interview.

The Principal,
St. John's College,
Jaffna.

(C-8989)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:33செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:கணனி பொறியியலாளர்<br>தொ.இ: B/6203 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா: 51<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1609 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 36<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>தொ.இ: B/6206 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 62<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1716 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 17செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/Lகனடா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/6202 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 15 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/1717 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 5<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6207 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 6 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2071 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## பழைய மாணவர் தினமும் வருடாந்த ஒன்றுகூடலும்-29.07.2017

OLD STUDENTS DAY AND ANNUAL GET TOGETHER

### மு/வித்தியானந்த கல்லூரி முள்ளியவளை

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 29.07.2017 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை கல்லூரி கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகும். கல்லூரியில் கல்வி கற்ற அங்கத்தவர் யாவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

தங்கள் வருகையை முற்கூட்டியே 20.07.2017 இற்கு முன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துக்கு தெரியப்படுத்தினால் ஒழுங்கு படுத்தலுக்கு வசதியாய் இருக்கும்.

தொடர்புகளுக்கு
திரு.க.சிவலிங்கம்-0094772880773 (அதிபர்)
திரு.செ.சிவராசா-0094777855463 (செயலாளர்)
e-mail: sivarajah0112@gmail.com
திரு.க.விஜிந்தன்-0094773[illegible] (பொருளாளர்)

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
வித்தியானந்த கல்லூரி.

(இ-8928)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முறையீடு

(கொழும்பு)

சில அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து. அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முறைப்பாடு செய்யவுள்ளது.

அரசாங்கத்தின் சில அமைச்சர்களின் எதேச்சதிகார செயற்பாடுகள் தொடர்பில் அனைத்து தூதரகங்கள் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் மகஜர் ஒன்றை ஒப்படைக்க அரசாங்க வைத்திய அதிகாரிகள்சங்கம்தீர்மானித்துள்ளது.

சில பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நாட்களில் தேசிய ரீதியில் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப் படும் என சங்கத்தின் முக்கிய உறுப்பினர் டாக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் வாரத்தில் டெங்கு ஒழிப்பு வாரமொன்றை தமது சங்கம்முன்னெடுக்க உள்ளதாகவும்அவர் தெரிவித்துள்ளார். (இ-7-8)

# புதிய இராணுவத் தளபதியுடன் அமெரிக்க ஆலோசகர் சந்திப்பு

(கொழும்பு)

விடைபெற்றுச் செல்ல இருக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்ணல் றொபட் நொக்ஷ் நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்துள்ளார்.

இராணுவத் தளபதியாக மகேஷ் சேனநாயக்க பதவியேற்றதன் பின்னர். முதல் தடவையாக சந்தித்த வெளிநாட்டு பிரதிநிதி லெப்டினன்ட் கேர்ணல் றொபட் நொக்ஷ் ஆவார்.

இருவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, அமெரிக்காவில் இடம்பெறும் பயிற்சிகளில் எதிர்வரும் காலங்களில் கலந்து கொள்வது தொடர்பாகவும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் இராணுவத் தளபதியிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க கெடெற் அதிகாரிகளுக்கு இலங்கை இராணுவத்தினர் வழங்கிய ஒத்துழைப்பையிட்டு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் அமெரிக்காவிலிருந்து பயிற்சியின் நிமித்தம் வருபவர்களுக்கு இந்த ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, அமெரிக்க தூதரக ஆலோசகர் இலங்கையில் சேவையாற்றிய காலப்பகுதிகளில் பூரண ஒத்துழைப்புடன் ஆற்றிய சேவையினை கௌரவிக்கும் முகமாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இராணுவத் தளபதியினால் அமெரிக்க தூதரக ஆலோசகருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## 07.2017 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 455 - அவிட்டஸ் மேற்கு ரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1357 - புனித ரோமப் பேரரசர் நான்காம் சார்ல்ஸ் பிராகா நகரத்தில் சார்லஸ் பாலத்திற்கு அடித்தளம் நாட்டினார்.
- 1755 - பென்சில்வேனியாவில் பிரெஞ்சு மற்றும் குடியேற்ற துணை இராணுவக் குழு பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தன.
- 1790 - பால்ட்டிக் கடலில் இடம்பெற்ற மோதலில் சுவீடனின் கடற்படையினர் ரஷ்யக் கப்பல்களை பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றினர்.
- 1816 - ஆர்ஜென்டீனா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஹட்சன் துறைமுகம் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது.
- 1868 - அனைத்து ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கும் முழுக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.
- 1903 - யாழ்ப்பாணத்தில் இந்து இளைஞர் அமைப்பு (YMHA) உருவாக்கப்பட்டது.
- 1918 - டென்னசியில் நாஷ்வில் என்ற இடத்தில் இரண்டு புகையிரதங்கள் மோதிக் கொண்டதில் 101 பேர் கொல்லப்பட்டு 171 பேர் படுகாயமடைந்தனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிசிலி மீதான தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1948 - பாகிஸ்தான் தனது முதலாவது அஞ்சல் தலையை வெளியிட்டது.
- 1956 - யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில், வண்ணார்பண்ணை சிவன் கோவில், பெருமாள் கோயில் ஆகியன தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டுக்காகத் திறந்து விடப்பட்டன.
- 1982 - ஐக்கிய அமெரிக்க போயிங் விமான லூசியானாவின் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 146 பேரும் தரையில் இருந்த 8 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1991 - 30 ஆண்டுகளின் பின்னர் தென்னாபிரிக்கா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- 1995 - யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
- 1995 - யாழ்ப்பாணத்தில் நவாலி பேதுருவானவர் தேவாலயம் மீது இலங்கை விமானப் படையினரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 141 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2002 - ஆபிரிக்க ஒன்றியம் அடிஸ் அபாபாவில் அமைக்கப்பட்டது. தென்னாபிரிக்க அதிபர் தாபோ உம்பெக்கி இவ்வமைப்பின் முதலாவது தலைவரானார்.
- 2006 - சைபீரியாவில் 200 பேரை ஏற்றிச் சென்ற பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 122 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - 2006 உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி பிரான்சை வென்று நான்காவது தடவையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

### பிறப்புகள்

- 1819 - எலியாஸ் ஓவே, தையல் இயந்திரம்; தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த அமெரிக்கர் (இ. 1867)
- 1858 - பிராண்ஸ் போவாஸ், செருமானிய-அமெரிக்க மானுடவியலாளர் (இ. 1942)
- 1866 - பனகல் அரசர், இந்திய அரசியல்வாதி (இ. 1928)
- 1923 - ரேமண்ட் ஆல்ச்சின், பிரித்தானியத் தொல்லியலாளர் (இ. 2010)
- 1927 - ஜே. சி. டேனியல், இந்திய இயற்கையியலாளர் (இ. 2011)
- 1930 - கே. பாலசந்தர், திரைப்பட இயக்குநர். (இ. 2014)
- 1966 - பி. உன்னிகிருஷ்ணன், இந்தியத் திரைப்பட, கர்நாடக இசைப் பாடகர்
- 1992 - டக்ளஸ் பூத், ஆங்கிலேய நடிகர்

### இறப்புகள்

- 2005 - ம. க. அ. அந்தனிசில், ஈழத்து எழுத்தாளர், பத்திரிகையாளர், அரசியல்வாதி

### சிறப்பு நாள்

- ஆர்ஜென்டீனா - விடுதலை நாள் (1816)





வண்ணை வீரமாகாளியம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற போது.... (படம்:-நதிபரன்)

# மகாநாயக்க தேரர்கள் நடுவு நிலையாக செயற்பட வேண்டும்

## முதலமைச்சர் விஜயலால் வலியுறுத்து

(கொழும்பு)

மகாநாயக்க தேரர்கள் நடுவு நிலையாக செயற்பட வேண்டுமென தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார். ஆட்சி பொறிமுறைமை உள்ளிட்ட நாட்டின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பீடங்களின் மகாநாயக்க தேரர்கள். நடுவு நிலையான கொள்கைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக பௌத்த மதத்திற்கு உரிய இடம் அளிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ள அவர் மகாநாயக்க தேரர்கள் பக்கச்சார்பாக கருத்து வெளியிடுவது பொருத்தமாக அமையாது என தெரிவித்தார்.

அம்பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பட்டதாரிகளுக்கு ஏற்ற தொழில் சந்தை இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும்

தொழில்களை வழங்கும் போது அரசியல்வாதிகளை பின்தொடர்ந்து செல்லும் முறைமையை நிறுத்த வேண்டும்.

பட்டதாரிகளுக்கு ஏற்ற தொழில் சந்தையொன்றை இலங்கையில் உருவாக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷான் விதானகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில்உரையாற்றிய போதே அவர் இந்த யோசனையை முன் வைத்தார்.

யோசனையை முன்வைத்து உரையாற்றிய அவர், அரசாங்கம் என்ற வகையில் கல்வி தொடர்பில் தேசிய கொள்கையொன்றை உருவாக்க வேண்டும் என தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் இருந்து வரும் பட்டதாரிகளில் விஞ்ஞான பாடவிதானங்களை பின்பற்றியவர்களுக்கு தொழில் வழங்குவதில் பிரச்சினை இல்லை.

பட்டம் பெறுபவர்களில் 60 வீத மானவர்கள் கலைத்துறை சார்ந்தவர்களாகவர்.

அவர்களுக்கு தொழில் பெற்றுக் கொடுப்பதில் நெருக்கடி உள்ளது.

அதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# நீதிமன்றுக்கு அருகில் துப்பாக்கிச் சூடு

அம்பாந்தோட்டை நீதிமன்ற சந்தியில் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிப் பிரயோகத்திற்குள்ளான நபர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்றே இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை பிளவுபடுத்தும் அரசியலமைப்பை வரவேற்கும் அளவிற்கு ஜே.வி.பி.மாற்றம்

## விமல் வீரவன்ச விசனம்

(கொழும்பு)

அன்று நாட்டை பிளவுபடுத்தும் அரசியலமைப்பை கொண்டு வராதே என கூறிய ஜே.வி.பி இன்று மகாநாயக்கர்கள் என்ன கூறினாலும் நாட்டை பிளவுபடுத்தும் அரசியலமைப்பை கொண்டுவா என கூறும் அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மாத்தளை விருந்தக கல்வி பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற சல்லாப அரசாங்கமும், தவிக்கும் தாய்நாடும் என்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். (இ-7)



# நல்லாட்சியால் பலனேதுமில்லை

## எஸ்.எம்.மரிக்கார்

நல்லாட்சியில் எந்தவொரு பிரயோசனமும் இல்லையென கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புத்தளம் மாவட்டத்தை சகவாழ்வினதும் நல்லிணக்கத்தினதும் மாவட்டமாக பெயரிட வேண்டும் என்று அசோக பிரியந்த கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆட்சியின் இனவாத தூண்டுதல்கள் நல்லாட்சியிலும் தொடர்வதாகவும் ஆனால் நாட்டு மக்களிடம் பிரிவினைவாதம் கிடையாது. அரசியல்வாதிகளே பிரிவினை வாதத்தை தோற்றுவிக்கின்றனர் எனவும் தெரிவித்தார். (7-8)

# ஆசிய நாடுகளின் வரிசையில் இலங்.முன்னிலை வகிக்கிறது

சுகாதாரம் மற்றும் உட்கட்டுமான வசதிகளில் இலங்கை முதல் நிலை வகிப்பதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சுகாதார மற்றும் உட்கட்டுமான வசதிகளை கொண்டு ஆசிய நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி வகிக்கின்றது. அதிகாரத்திற்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் கல்விக்காக பாரிய தொகையை செலவிடுகின்றன.

இதனால் தெற்காசிய வலய நாடுகளில் உயர்கல்வித்துறையில் இலங்கை முன்னணி வகிக்கின்றது. நாம் எமது வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதில்லை.

80-85 வீதமான மாணவ, மாணவியர் பல்கலைக்கழகத்திற்கு செல்வதில்லை. வரையறுக்கப்பட்ட தரப்பினர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

இதனால் நாம் புதிய எண்ணக்கருக்களை உருவாக்க வேண்டும். எண்ணக்கருக்களை அபிவிருத்தி செய்வது எமது பிரதான நோக்கமாகும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (7-8)

# அணுவாயுதங்களைத் தடைசெய்வதற்கு இலங்.உட்பட 122 நாடுகள் அங்கீகாரம்

அணுவாயுதங்களை தடைசெய்வதற்கான ஐ.நா. ஒப்பந்தத்திற்கு இலங்கை உட்பட 122 நாடுகள் அங்கீகரித்துள்ளன.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அணுவாயுதங்களை தடைசெய்வதற்காக நடத்தப்பட்ட ஐ.நா. கூட்டத்தை ஒன்பது நாடுகள் புறக்கணித்துள்ளன.

அமெரிக்க, பிரித்தானியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய 9 நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக நம்பப்படுகின்றது.

இக்கலந்துரையாடலில் நெதர்லாந்து மட்டுமே பங்குபற்றியிருந்தது. அதன் பிராந்தியத்தில் அணு ஆயுதங்களை வைத்திருந்தாலும் அமெரிக்க ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளது. சிங்கப்பூர் வாக்குப்பதிவில் இருந்து ஒதுங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (7-8)

# அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு



நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் அளித்த ஆணையின் அடிப்படையில் புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்குவதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

காணாமல் போனோர் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதில் எவ்வித தவறும் கிடையாது என குறிப்பிட்டுள்ள ரோஹித பொகொல்லாகம சட்டம் நிறைவேற்றப்பட முன்னதாக மக்களின் கருத்துக்கள் அறியப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# உமாஓயா திட்டம் கைவிடப்படாது

## மகிந்த அமரவீர



உமா ஓயா திட்டத்தின் 70 வீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அத்திட்டத்தை கைவிடுவது நடைமுறைச் சாத்தியமற்றது என மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை முன்னெடுத்து வரும் ஈரானிய நிறுவனம் அனுபவமற்ற நிறுவனம் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இத்திட்டத்தினால் 7000 வீடுகள் சேதமடைந்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும், 52 வீடுகள் மாத்திரமே சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டம் குறித்து சாத்திய ஆய்வு நடத்தப்படாது கடந்த அரசாங்கம் திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (7-8)

# ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிக்கு நடந்தது என்ன ? - நாமல் கேள்வி

அமைச்சர்களுக்கான வாகன கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஜனாதிபதியும் பிரதமரும் வழங்கிய வாக்குறுதிக்கு என்ன நடந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். அமைச்சர்கள் சிலருக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கும், மேலும் சில அமைச்சர களின் உத்தியோகபூர்வ வாசஸ் தலங்களை புதுப்பிப்பதற்கும் செலவிடப்பட்ட 19 கோடியே 70 இலட்சத்து 9 ஆயிரத்து 300 ரூபாவிலான மேலதிக தொகையொன்றைக் கோரி மேலுமொரு குறைநிரப்புப் பிரேரணையொன்று நேற்று முன்தினம் அரசாங்கத்தால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், இது குறித்து தமது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே நாமல் ராஜபக்ஷ இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். (7-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா | சுன்னாகம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 200 | 120 | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 400 | 250 | 300 |
| தக்காளி | 160 | 120 | 120 | 160 | 160 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 60 | 80 | 60 | 70 |
| கோவா | 150 | 100 | 100 | 120 | 120 | 140 |
| கரட் | 200 | 150 | 300 | 240 | 180 | 300 |
| பூசணி | 120 | 80 | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 80 | 50 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 60 | 80 |
| சின்னவெங்காயம் | 250 | 250 | 300 | 320 | 250 | 300 |
| பெரியவெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 150 | 140 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 50 | 160 | 200 | 140 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 120 | 80 | 60 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 160 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 150 | 200 | 200 | 250 |
| போஞ்சி | 200 | 150 | 120 | 200 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 50 | 120 | 120 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 25 | 40 |
| தேசிக்காய் | 30 | 60 | 60 | 120 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 240 | 300 | -- | -- | -- | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 280 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 25 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 10 |
| [illegible] | 80 | 150 | -- | 120 | 100 | -- |

# யாப்பில் குறைபாடுகள் இருப்பதாலேயே புதிய யாப்பை மக்கள் கோருகின்றனர்

## கிழக்கு முதல்வர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள யாப்பில் குறைபாடுகள் உள்ளமையினாலேயே மக்கள்" புதியதொரு யாப்பைக் கோரி நிற்பதாக கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அத்துடன், யாப்பில்சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதகமான விடயங்கள் உள்ளமையினாலேயே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன என்ற யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் கிழக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான தவறான தோற்றப்பாடு நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதால் நாட்டின் அனைத்து மக்களும் அதில் நன்மையடைவார்கள் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் நாட்டில் உருவாகியுள்ள சூழல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு நேற்று விளக்கமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரதிர்ச்சியில் மகிந்த!

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகளால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் அதிர்ச்சியில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**



புதிய அரசியலமைப்பு திருத்தச்சட்டத்திற்கு மாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை, மகிந்தவின் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைக்கு பெரும் பின்னடைவாக மாறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

"இல்லாத பிரச்சினையை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பு திருத்தச்சட்டம் தயாரிப்பது ஒரு போதும் சரியானதல்ல" என மாநாயக்க தேரர்கள் ஒருமனதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தீர்மானம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடுமையான வருத்தத்தில் இருப்பதாக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை தொடர்பில் தேரர்கள் மற்றும் மாநாயக்க தேரர்கள் 75 பேருக்கும் அதிகமானோர் கண்டியில் கலந்துரையாடல் மேற்கொண்டனர். இதன் போது புதிய அரசியலமைப்புக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இத் தீர்மானத்தினால் மகிந்த ராஜபக்ஷ வருத்தத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது.

புதிய அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தினால் ஜனாதிபதி முறையை ரத்து செய்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பலவீனப்படுத்த மகிந்த தரப்பு காத்திருந்தது.

எனினும் மாநாயக்கர்களின் முடிவு அதற்கு தடையாக மாறும் அபாயத்தில் உள்ளமையே மகிந்தவின் வருத்தத்திற்கு காரணமாகியுள்ளதென அந்த உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும் மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என குறிப்பிட்டுள்ளார். மக்களின் கோரிக்கைக்கமைய மாத்திரமே அத் தீர்மானம் மாற்றமடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-8)

## கொழும்பில் உதயமாகிறது சீனாவின் வங்கி

(கொழும்பு)

சீனாவின் மிகப் பெரிய நிதி நிறுவனங்களில் ஒன்றான சீன வங்கி (Bank of China), கொழும்பில் கிளை ஒன்றை இந்த ஆண்டில் ஆரம்பிக்கவுள்ளது.

இது தெற்காசியாவில் சீன வங்கியின் முதலாவது கிளையாக இருக்கும் என்று அந்த வங்கியின் பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பில் சீன வங்கியின் கிளையைத் திறப்பது தொடர்பான செயல்முறைகள் குறித்து வங்கி அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

90 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கொழும்பில் சீன வங்கிக் கிளை ஆரம்பிக்கப்படும் என்று சீனத் தூதரக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான இலங்கையின் நிதிப் பரிமாற்றங்களுக்கு இந்த வங்கி உதவியாக அமையும்.

சீன வங்கி, அமெரிக்கா, கனடா, தென்னாபிரிக்கா, கென்யா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## கூட்டு எதிரணியில் இணைய மாட்டோம்

### லக்ஷ்மன் செனவிரத்ன



அரசாங்கத்தில் இருந்து முக்கிய உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியில் இணையவுள்ளதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி ராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கத்தில் இருந்து 18 பேர் கூட்டு எதிர்க்கட்சியில் இணையவுள்ளதாக தெரிவிப்பதில் எந்த உண்மையும் இல்லை.

அவ்வாறு இடம்பெற்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்டு தொடர்ந்து எதிர்க்கட்சியில் இருக்கவேண்டிய நிலையே ஏற்படும். அதற்கு இடமளிக்க முடியாது" என தெரிவித்தார். (7-8)

## அரசியலமைப்பினால் நல்லிணக்கம் சாத்தியப்படாது

### பொதுபலசேனா சுட்டிக்காட்டு

நாட்டு மக்களிடையே விரிசலையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகின்ற ஒரு அரசியலமைப்பினால் நல்லிணக்கம் ஒருபோதும் சாத்தியப்படாது என பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளது. மேலும் குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது.

"நாட்டில் சிங்கள பௌத்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் பற்றி ஆராய்வதற்கான உண்மையை கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும்.

அதே நேரம் 2002ஆம் ஆண்டில் புத்தசாசன விவகாரத்திற்காக நிறுவப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் பெரும்பான்மையினரிடத்தில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாத போது அது சகல மக்கள் குழுக்களுக்கும் பாதிப்பாக அமைந்துவிடும்.

அதேபோல் ஞானசார தேரர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் நீங்கள் விளங்கிக் கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்" என குறிப்பிட்டுள்ளது. (7-8)

## மானிப்பாய் இந்து ஆசிரியர் சாந்தகுமார் காலமானார்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் சுவாமிநாதன் சாந்தகுமார் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் இறுதி யாத்திரை இடம்பெறும்.

இக்கிரியைகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-8)

## சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐ.தே.கட்சி பேச்சுவார்த்தை

ஐக்கிய தேசியக் கட்சி சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தலைமையிலான பிரதிநிதிகள் சீனாவிற்கு பயணம் செய்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இது ஓர் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என அமைச்சர் ஹாசிம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இந்த பயணம் ஓர் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 27 வருடங்களின் பின்னர் சடலம் இன்று அடக்கம்

மயிலிட்டித்துறை இந்து மயானத்தில் 27 வருடங்களின் பின்னர் அப்பகுதி வாசி ஒருவரின் உடல் இன்று ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யப்படவுள்ளது.

யுத்தம் காரணமாக மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். இந்நிலையில் மயிலிட்டி துறைமுகம் உட்பட ஒரு தொகுதி நிலப்பரப்பு அண்மையில் விடுவிக்கப்பட்டது.

வேல் வீதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் பேரின்பம் என்பவர் பருத்தித்துறையில் வசித்து வந்த நிலையில் கடந்த 06.07.2017 அன்று மரணமடைந்தார். அவரின் உடல் மயிலிட்டித்துறை இந்து மயானத்தில் இன்று அடக்கம் செய்யப்படவுள்ளது. 27 வருடங்களின் பின்னர் அடக்கம் செய்யப்படும் முதலாவது சடலம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## ஒருங்கிணைப்புக் கூட்டம் இரத்து

நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-8)

## சுயாதீனமாகச் செயற்படுவதற்கு 2 முஸ்லிம் எம்.பிக்கள் தீர்மானம்

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளதாக வாராந்த சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தமது பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை உள்ளதன் காரணமாக அவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் தேவைகள் தொடர்பாக அரச அதிகாரிகள் கவனத்தில் எடுக்காமை காரணமாக அதிருப்தியடைந்துள்ள அந்த இரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது. (இ-7)

## வைத்திய சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)


இலங்கை வைத்திய சபையின் புதிய தலைவராக பேராசிரியர் கொல்வின் குணரத்ன நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகாவின் பதவிக் காலம் கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

ஐந்து வருடங்கள் பணியாற்றிய இவர் மேலதிகமாக ஆறு மாதங்கள் இலங்கை மருத்துவ சபையின் தலைவராக இருந்துள்ளார்.

பேராசிரியர் காலோ பொன்சேகா கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பதவியை வகித்து வந்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

# பாரிய ரோந்துக் கப்பல்கள் கொள்வனவு

## இந்தியாவிடம் பயிற்சி பெறும் இலங்.கடற்படை

(கொழும்பு)

இந்தியாவிடம் வாங்கப்படும் பாரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பலை செலுத்தும் பயிற்சிகள் மற்றும் சோதனைகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாக, அனைத்துலக பாதுகாப்பு ஊடகமான 'ஜேன்ஸ் 360" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிடம் இருந்து இலங்கை கடற்படைக்கு 105 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இலங்கை வாங்கியுள்ளது.

கோவா கப்பல் கட்டும் நிறுவனம் இந்த இரண்டு ரோந்துக் கப்பல்களையும் கட்டியுள்ளது.

இதில் முதலாவது கப்பலுக்கு எஸ்.எல்.என்.எஸ்சயுரால என்று பெயரிடப்பட்டுள்ளது. பி-623 என்ற தொடரிலக்கத்துடன் இக் கப்பல் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படும்.

2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கட்டத் தொடங்கப்பட்ட இக் கப்பல், 2016 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

பி-624 என்ற தொடரிலக்கமிடப்பட்டுள்ள இரண்டாவது கப்பல், 2016 டிசெம்பரில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

தற்போது கோவா சென்றுள்ள இலங்கை கடற்படை அதிகாரிகள், இக் கப்பலைச் செலுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டு, இதிலுள்ள கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து வருகின்றனர்.

மேலும், இக் கப்பலில் தேவைப்படும் வசதிகள், மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும் இவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதுபோன்ற சங்கல்ப் வகை ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் இந்திய கடலோரக் காவற்படையினால் பயன்படுத்தப்படுகிறது.

18 அதிகாரிகள் உள்ளிட்ட 118 கடற்படையினர் இதில் பணியாற்றுவர். ஒரு உலங்குவானூர்தி தரையிறங்கும் வசதியைக் கொண்ட இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல், 4500 மைல்கள் வரை சென்று ரோந்துப் பணியில் ஈடுபடக் கூடியதாகும்.(7-8)

# ஏறாவூர் விகாரைக்கு நஷ்டஈடு வழங்கி வைப்பு



யுத்தம் மற்றும் இன வன்செயல்களால் சேதமடைந்த மதத் தலங்ளுக்கு புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படுகின்ற நஷ்ட ஈட்டு வேலைத்திட்டத்துக்கு அமைவாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏறாவூர் புலிதலாராமய விகாரைக்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 4 இலட்சம் ரூபா நஷ்டஈட்டுதொகைக்கானகாசோலை புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் ஏறாவூர் புலிதலாராமய விகாராதிபதி அமன்வல தர்மரத்ன தேரரிடம் கையளிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் காத்தான்குடி காரியாலயத்தில் வைத்து மேற்படி நிதி கையளிக்கப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு கெம்பஸ் நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் றுஸ்வின் மொஹமட் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

யுத்த காலப் பகுதியில் பெருமளவு பாதிக்கப்பட்ட ஏறாவூர் புலிதலாராமய விகாரை மிகவும் மோசமான நிலையில் இயங்கி வந்தது. இந்நிலையில், இது குறித்து இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் கவனத்துக்கு ஏறாவூர் புலிதலாராமய விகாராதிபதி அமன்வல தர்மரத்ன தேரர் கொண்டு சென்றிருந்தார்.

இதனை அடுத்து விகாரைக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்த இராஜாங்க அமைச்சர், தனது அமைச்சினால் யுத்தம் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மதத் தலங்களுக்கு வழங்கப்படுகின்ற நஷ்டஈட்டு தொகையைப் பெற்றுக்கொடுக்கவும் முன்வந்தார்.

அதற்கமைய குறித்த விகாரைக்கு 10 இலட்சம் ரூபா நஷ்டஈட்டுத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த நிதி மூன்று கட்டங்களாக வழங்கி வைக்கப்படவுள்ளதுடன் முதற் கட்டமாக 4 இலட்சம் ரூபா தற்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

# உண்மையைக் கண்டறிய விசேட ஆணைக்குழு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் நோக்கில் விசேட ஆணைக்குழு ஒன்று நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மூன்று பீடங்களினதும் மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் இது தொடர்பிலான கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் இடையில் பல்வேறு முரண்பாடுகள், மோதல்கள் இடம் பெற்று வருவதாக சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகவும் இது குறித்த உண்மைகளை வெளிப்படுத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாநாயக்க தேரர்களினால் இவ்வாறு ஆணைக் குழு நிறுவுமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டிருந்தது.

இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி விரைவில் இவ்வாறான ஓர் ஆணைக்குழு நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு சிறுபான்மை சமூகத்தினராலோ அல்லது சிறுபான்மை சமூகத்திற்கு சிங்கள மக்களினாலோ நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தால் அது குறித்து கண்டறிந்து உண்மையை வெளிப்படுத்தும் ஆணைக்குழு ஒன்று நிறுவப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(இ-7)




## கடலில் தீர்த்தம் ஆடுகின்றாள் அன்னை

தீர்த்தம் ஆடுகின்றாள் எங்கள் அன்னை
கடலில் தீர்த்தம் ஆடுகின்றாள்
அருளல் என்னும் அரு மருந்தை
அள்ளி அள்ளி ஊட்டுகின்றாள் தீர்த்தம் ஆடுகின்றாள்

பால் காவடி பறவைக் காவடி தூக்குக் காவடி
பக்குவமாய் செய்து நாம் அருளைப் பெற்றிட
கடலின் அலை நடுவில் அம்மனை
கருடன் காவல் காத்திட தீர்த்தம் ஆடுகின்றாள்

அன்னையின் அருளை வேண்டி வரும் மக்களை
ஆதரித்த வண்ணம் இருக்கின்றாள்
அமுத சுரபியில் அமுதூட்டி எங்களை
அரவணைத்தே எங்களை மகிழ்ச்சிப்படுத்துகின்றாள் - தீர்த்தம்
ஆடுகின்றாள்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு.

## நயினைத் தாயே




எங்கள் முகங்களைப் பார்
தீர்த்தமாடி வரும் அம்மையே
அங்கும் இங்கும் அலைகின்றோம்
தேற்றாயோ பாவிகள் எம்மை

பொங்கும் துயர் தீர்வதெப்போ
தேசம் அரசியல் மோகம்
மங்கும் உயர்நிலை காக்க
ஓடோடிவா நயினைத் தாயே

மாணந்தன்
அல்வாய்.

## தேவி தரிசனம் கொள்ள



நாகத்தில் இருந்து எமை
காக்கும் தேவியே
நீலக் கடல் ஓரத்தில்
நீந்துகின்ற அலையினிலே
ஐந்து தலை நாகம்தான்
அசைந்தாடுதே உன் தலையில்
பூப்போன்ற அவள் இதழ்
புன்னகைக்குமோ எமைப்பார்த்து
அசைந்தாடும் அவள் இடை
அன்ன நடை போடுமோ
அன்னையின் கடைக்கண் பார்வை
பட்டாலே நம் துயரம் பறந்தோடுமே

வேலுப்பிள்ளை ரேகா
பல்லசுட்டி
பண்டத்தரிப்பு.

## வரம் தருவாள் சக்தி

நீலக் கடலின் ஒருத்திலே
நாகத்தில் அமர்ந்திருந்து
மக்கள் துயரைத் தீர்த்து வரும்
நயினையின் நாயகியே
தஞ்சம் என உன் பாதம் சரணடைந்தோம்
இடம் பெயர்ந்து வாழும்
எங்கள் இடர்களை தீர்ப்பாயா.

இடைக்காடு
செ.கந்தவேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் 136 கிராம அலுவலர் பிரிவுகளில் 135 கிராம அலுவலர் பிரிவுகள் வரட்சியால் பாதிப்பு

## அரச அதிபர் தெரிவிப்பு

நாட்டில் நிலவுகின்ற கடும் வரட்சியினால் வடக்கு மாகாணம் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது.

இதன் காரணமாக முல்லைத்தீவில் உள்ள 136 கிராமசேவகர் பிரிவுகளில் 135 கிராமசேவகர் பிரிவுகள் முற்றிலும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக அப்பகுதி வாழ் மக்கள், உயிரினங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், பயிர்ச்செய்கை நடவடிக்கையும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நிலவும் கடுமையான வெப்பத்தினால் பாரிய குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 44 கிராம அலுவலர் பிரிவுகளில் தற்போது குடிநீர் நெருக்கடி காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீரேரிகள் மற்றும் குளங்களில் நீர் வற்றியுள்ளதனால் கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.




அதேவேளை,சிறுபோக நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளதாக அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை மாத்திரமன்றி நன்னீர் மீன்பிடியை வாழ்வாதார தொழிலாக கொண்டுள்ள மீனவர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

குளங்களில் நீர் வற்றியுள்ளதனால் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ள நிலையில், அன்றாட வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாது அல்லலுறுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(2-281)

### பொலிஸாரின் சமிக்ஞைகளை மீறி

# பலகை, தீராந்திகளை கடத்தி பயணித்த வாகனம் சிக்கியது

மல்லாவி பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் உத்தரவுக்கமைய விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அணியினர் சிராட்டிகுளம் பகுதியில் இருந்து சட்டவிரோதமான வகையில் வெட்டப்பட்ட முதிரை, பாலை மரங்களை பலகை, தீராந்திகள் ஆக்கியும் மற்றும் துண்டங்களாக்கியும் டாடா பிக்கப் வாகனத்தில் கடத்திச் சென்று



கொண்டிருந்த போது அதனை தடுத்து நிறுத்த சமிக்ஞைகள் வழங்கிய போதும் நிறுத்தாது பயணித்த வாகனத்தை சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு கலைத்துச் சென்று கைப்பற்றியுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருதாவது,

சந்தேகத்திற்கிடமான வகையில் சிராட்டிகுளம் பகுதியில் இருந்து பாண்டியன்குளம் நோக்கி பயணித்த வாகனம் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்ட போது, அதனை நிறுத்தாமல் பாண்டியன் குளம் இருந்து வவுனிக்குளம் செல்லும் வீதி வழியாக வேகமாக தப்பிச் சென்ற போது, பொலிஸாரும் பின்னால் துரத்திச் சென்றவேளை, வவுனிக்குளம் காட்டுப் பகுதியில் வாகனத்தை கைவிட்டு விட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, கடத்தப்பட்ட மரங்களுடன் வாகனத்தை மீட்ட பொலிஸார் அதனை மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகின்றனர்

## வவுனியா மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிப்பு

வவுனியாவில் அதிகமானவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று திரும்பிய நிலையிலேயே டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக கொழும்பு சென்று வருபவர்கள் அதிகம் டெங்கு தொற்றுக்குள்ளாகி வருவதாகவும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வெளி மாவட்டங்களுக்கு செல்பவர்கள் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகில்லுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்ளுமாறும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் டெங்கு தொற்று ஏற்பட்டு நேற்று முன்தினம் காலை ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் ஒருவார காலத்தினுள் 24 பேர் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரையான ஒருவார காலப் பகுதியில் வவுனியாவில் டெங்கு தொற்றுக்குள்ளாகிய 25பேர் இனங்காணப்பட்டுள்னர். அதில் கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த இராசரட்ணம் சுகந்தன் (வயது-33) என்ற குடும்பஸ்தர் கடந்த 4ஆம் திகதி வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 5 மணியள வில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் அடிக்கடி கொழும்பிற்குச் சென்று வருவதாகவும் காலம் தாழ்த்தி வைத்திய சிகிச்சை மேற்கொண்டதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் வைத்திய பரிசோனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்



வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்தில் கடந்த 6 ஆம் திகதி இரவு 8 மணியளவில் கேரள கஞ்சாவுடன் பயணி ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து அக்கரைப்பற்றுக்கு பேருந்தில் பயணித்த பயணி ஒருவரின் பயணப் பொதியை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கடமையில் நின்ற பொலிஸார் சோதனை செய்த போது பொதி செய்யப்பட்டு தனது பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு கிலோ 950 கிராம் கேரள கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கேரள கஞ்சாவை தனது உடைமையில் வைத்து சட்டவிரோதமாக கொண்டு செல்லமுற்பட்டபோது சிவில் உடையிலிருந்த பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார்மேலும் தெரிவித்துள்ளனர். (2-250-15)

# முத்திரை ஒட்டப்பட்ட வெற்றுப் பத்திரத்தில் மக்களிடம் கையொப்பம் பெற்று மோசடி

வவுனியாவில் முத்திரை ஒட்டப்பட்ட வெற்று விண்ணப்பப்படிவத்தில் கையெழுத்து பெற்று மோசடி நடைபெற்று வருகின்றது.

வவுனியா கற்பகபுரம்கிராம மக்களிடம் முத்திரை ஒட்டப்பட்ட வெற்றுபத்திரத்தில்கையொப்பம் பெற்று மோசடி இடம்பெற்று வருவ தாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் பயனாளிகளுக்கு பணம் வழங்கும் குறிப்பிட்ட பத்திரம் வழங்கப்பட்டு அப்பத்திரங்கள் நிரப்பப்படாமல் முத்திரை ஒட்டப்பட்ட நிலையில் கையொப்பம் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்ற கிராமமான கற்பகபுரம் கிராமத்திற்கு அண்மையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 360 வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட வெற்றுப்பத்திரத்தில் கிராம மக்களிடம் கையெழுத்து பெறுவதாக வும் இது தொடர்பாக கேள்வி கேட்பவர்களிடம் உங்கள் வீட்டுத் திட்டம் இரத்து செய்ய ப்படும் என மிரட்டப்படுவதா கவும் மக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர். (2-250)

# ஆட்டோ உரிமையாளர்கள் தங்களின் விபரங்கள் அடங்கிய கோவைகளை ஒப்படைக்குக!

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆட்டோ போக்குவரத்திதை சீர்படுத்தும் பொருட்டு வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இதனடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட கிளிநொச்சி மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கத்திற்குட்பட்ட ஆட்டோ உரிமையாளர்கள் 450 பேர் சேவையில் ஈடுபடுவதாகவும் அறியக்கிடைக்கிடைப்பதுடன். கடந்த காலங்களில் செயற்பட்ட நான்கு நிர்வாகத்தினரும் ஒழுங்கான முறையில் செயற்படாத் காரணத்தால் பல பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது பயணிகள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆட்டோ உரிமையாளர்களின் விபரங்களை பதிவு செய்வதற்கான அறி வித்த லை கடந்த 25.05. 2017 ஆம் திகதி கடிதம் மூலம் தற்பொழுது செயற் பாட்டிலுள்ள சங்கத் தலைவர் ஊடாக அதிகார சபை தெரியப்படுத்தியிருந்தது.

இவ் அறிவித்தலின்படி இதுவரையில் 95 உரிமையாளர்களே தங்களின் விபரங்களை எமது கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர், ஏனைய உரிமையாளர்கள் தமது விபரங்களை ஒப்படைக்காமல் அக்கறையின்றி செயற்படுகின்றனர். எனவே இதுவரை காலமும் ஆவணங்களை ஒப்படைக்கத் தவறிய ஆட்டோ உரிமையாளர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் ஏற்கனவே எம்மால் அறிவிக்கப்பட்ட விபரங்கள் அடங்கியதான கோவையை எமது கிளிநொச்சி மாவட்ட வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில்ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் குறிப்பிட்ட நடைமுறைகளுக்கு அமைவாக ஆட்டோ உரிமையாளர்கள் செயற்படாத பட்சத்தில்எக்காரணம் கொண்டும் புதிய நிர்வாக தெரிவுப் பொதுக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2)

# நலத்திட்ட நிதிகளை வழங்கக் கோரி காலவரையறையற்ற தொடர் கவனயீர்ப்பு

வடக்குமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்திலுள்ள கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வரவேண்டிய நிதியை பேரிணையம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோர் ஒன்று திரண்டு மாபெரும் காலவரையறையற்ற தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எஸ். துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை காலை 7. 30 மணிதொடக்கம் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி பனை தென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தமது நிதிகள் கிடைக்கும் வரை தொடர்கால வரையறையற்ற கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# பொதுமக்கள் மீது தாக்குதல்

வவுனியாவில் கப்பம் கோரிய இருவர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம்மாலை 6 மணியளவில் வவுனியா இலுப்பையடிப் பகுதியில் குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

அப் பகுதியில் பேருந்துக்காக காத்து நின்ற பொதுமக்கள் மீது மது போதையில் வந்த இரு இளைஞர்கள் அங்கு நின்றவர்களிடம் பலவந்தமாக பணம் வசூலிக்கும் முயற்சியில் ஈடுபட்டதுடன் அங்கிருந்த பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியும் உள்ளனர்.

இதனை தட்டிக்கேட்ட நபரொருவர் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதுடன், தட்டிக்கேட்ட நபர் அவ்விடத்திலிருந்து செல்வதற்காக ஆட்டோவில் ஏறிப் பயணித்த போது ஆட்டோவை வழி மறித்தும் குறித்த இருவரும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், குறிப்பிட்ட இளைஞர்கள் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மேலும் முறைப்பாட்டை பதிவு செய்து மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்துக்காகவும் வெற்றிக்காகவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை.

*– நாராயணமூர்த்தி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நான் சகாதேவனாக இருந்தால் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற...

மகாபாரதப் போரை நிறுத்துவதற்கு ஏதும் வழியுண்டோ என்ற கேள்வி எழுகிறது. விடை தெரியாமல் பலரும் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கின்றனர்.

போர் மூண்டால் அழிவுதான் மிச்சம் என்பதை தர்மத்தின்பால் நிற்போர் உணர்கின்றனர்.

எனினும் அதர்மத்தவர்கள் போர்தான் வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பது தெரிகிறது.

போரைத் தடுப்பதற்கான எத்தனையோ உபாயங்கள் கையாளப்பட்டன. தூது முயற்சிகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், விட்டுக் கொடுப்புக்கள் என எதுவும் செல்லுபடியற்றதாக குருசேத்திரப் போரைத் தவிர வேறு வழியில்லை என்றாயிற்று.

இந்நிலையில் சகாதேவன் மட்டும் ஆழ்ந்த சிந்தனையில் உள்ளான். பாண்டவர்களில் அவன்தான் சோதிடன்.

போரை நிறுத்த ஓர் உபாயம் கூறலாம் என்கிறான். என்ன உபாயம்? கண்ண பரமாத்மாவை கட்டிப் போட்டால் பாரதப் போரை நிறுத்தலாம் என்கிறான் அவன்.

*பாராளக் கன்னன் இகல் பார்த்தனை முன்*
*கொன்று அணங்கின்*
*காரார் குழல் களைந்து காலில் தளை பூட்டி*
*நேராகக் கைபிடித்து நின்னையும் நான்*
*கட்டுவேனால்*
*வாராமல் காக்கலாம் மாபாரதம்*

என்பது சகாதேவனின் அறிவுரை.

பாரதப் போரை நடத்தி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதுதான் கண்ண பரமாத்மாவின் கடமை. அதைச் செய்யாமல் விடுவது எங்ஙனம்? ஆகையால் போர் மூழ்கிறது.

அட, இதை இவ்விடத்தில் ஏன் சொல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். அவ்வாறான கேள்விக்குப் பதில் உண்டு.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிடம் கையளித்ததன் மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கான மக்கள் செல்வாக்கு எக்காலத்திலும் இல்லாதவாறு வீழ்ச்சி கண்டுள்ளது.

தமிழர்களின் பழமையான அரசியல் கட்சிக்கு ஏற்பட்ட வீழ்ச்சி அனைவருக்கும் கவலை தரக் கூடியதுதான்.

ஆனால் என்ன செய்வது! அந்தக் கட்சியின் எதிர்காலம் பற்றி இம்மியும் சிந்திக்காமல் தங்களின் நலனை மட்டுமே கருத்தில் கொள்பவர்கள் அந்தக் கட்சியில் இருந்து மேலாதிக்கம் செய்யும் போது யார்தான் என்ன செய்ய முடியும்?

தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துப் பற்றி மூத்த அரசியல் தலைவர் இரா.சம்பந்தரும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் நன்கு உணர்ந்துள்ளனர்.

கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் கடும் முயற்சி செய்யும் ஒவ்வொரு கணமும் அவர்களின் முயற்சியை சாண் ஏற முழம் சறுக்குவது போல வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய தமிழரசுக் கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கை அமைகிறது.

இஃது தமிழரசுக் கட்சி மீதான வெறுப்பை மேன்மேலும் அதிகரிக்கிறது. இந்நிலையில் தமிழரசுக் கட்சி வீழ்ச்சியடைவது விதியாயிற்றோ என்று எண்ணினாலும் அந்தக் கட்சியைக் காப்பாற்ற ஒரு வழியுண்டு.

அது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படுவதாக மட்டுமே இருக்க முடியும்.

# இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் எமக்கு உதவ வேண்டும்

## – சர்வேஸ்வரன்

(கரவெட்டி)

இந்திய அரசாங்கம் எமக்கு பெரும்பாலான உதவிகளைச் செய்து வருகிறது. அதற்கு அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் இந்திய அரசாங்கம் எமக்கான உதவிகளைச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார் வட மாகாண கல்வி பண்பாடு, விளையாட்டுத் துறை அமைச்சர் சர்வேஸ்வரன்.

இந்திய அரசாங்கத்தின் இருபது மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்புடன் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கேட்போர்கூட கட்டடத்தொகுதி அமைப்பதற்கான அடிக்கல்நாட்டு விழா நேற்று பாடசாலை வளாகத்தில் அதிபர் திருமதி பாலராணி தலைமையில் நடைபெற்றது.

அங்கு விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

30 வருட யுத்தத்தினால் ஏராளமான சொத்து அழிவு, உயிரிழப்பு என்பன ஏற்பட்டது.

அதிலிருந்து மீண்டு தலைநிமிர்ந்து கௌரவமாக வாழ்வதற்கு, மனித ஆற்றல் வளத்தைக் கட்டிஎழுப்புவதற்கு கல்வி முக்கியமானது.

வடக்கு பாடசாலைகளில் பௌதிக ஆசிரியர் வளங்களை அதிகரித்து அடைவு மட்டத்தை முடிந்த வரையில் அதிகரிப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம்.

இழந்த ஆற்றல் மிகு மனித வளத்தை கட்டி எழுப்புவதற்காக இந்திய அரசானது எமக்கு பல வகையில் உதவி செய்து வருகிறது.

அதற்கு இந்திய துணைத் தூதுவர் ஊடாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்மைய காலங்களில் மக்களின் தொகை வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதனால் மாணவர் தொகையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு எல்லாம் பிறப்பு வீதம் வீழ்ச்சியே காரணம்.

வட மாகாணத்தில் தற்போது 250 பாடசாலைகளில் 50 மாணவர்களிலும் குறைவானவர்கள் கற்கிறார்கள். 120 பாடசாலைகளில் 20க்கும் குறைவான மாணவர்கள் கற்கிறார்கள்.

இப்பாடசாலைகள் 40, 50, 100 வருடம் பழமையானவை. ஆயிரம் பேர், ஆயிரத்து 500 பேர் படித்த பாடசாலைகளில் மூன்றில் ஒருபகுதியினரே இப்போது படிக்கிறார்கள்.

70 வீதமான ஆசிரியர்கள் இங்கும் 30 வீதமான ஆசிரியர்கள் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இருந்து உருவாக்கப்படுகிறார்கள்.

இதில் 25 வீதமானோர் ஏனைய நான்கு மாவட்டத்துக்கும் போக வேண்டிய தேவையுள்ளது.

இதனை எமது இனத்துக்காக செய்கிற சேவை எனச் செய்ய வேண்டும்.

ஆனால் நியமனம் வந்ததும் மாகாண சபை உறுப்பினரிடம், பாராளுமன்ற உறுப்பினரிடமும் உடனே செல்கிறார்கள்.

இடத்தினை மாற்றச் சொல்லி இது மாற வேண்டும் என்றார். (மு-60)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிற்போடல்

நாளை திங்கட்கிழமை நடைபெற விருந்த வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-8)

## கோத்தாவை கைது செய்தால் விளைவு மோசமாகும்

### கூட்டு எதிரணி எச்சரிக்கை

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தால், மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என கூட்டு எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த இவ்வாறு எச்சரித்துள்ளார். ஒரு மாத காலத்துக்குள் கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்வதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்ததாக தகவல் வெளியாகியிருந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். பிரதமர் பதவியை எதிர்பார்த்து மகிந்த அமரவீர இப்படியான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (இ-7)

## யாழ். வைத்தியசாலையில் தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் (07.07.2017) யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக் கப்பட்டு போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்ப டைக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி காரியாலய காசாளிடம் பெற்றுக் கொள்ள முடியும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

கார்வண்ணனும் அவ்வண்ணமே செய்து காயத்தை ஆற்றிக் கொண்டான்.

இதுநாள் வரை பற்றி இருந்தாகிவிட்டது. இடர்பல எய்தியாகிவிட்டது. இப்போது இருப்பதற்கு இடமொன்று தேவை என அப்போதுதான் தோன்றியது அவனுக்கு.

நாற்புறங்களிலும் பார்வையைப் பரவவிட்டான்.

மலைச்சரிவில் மாபெரும் திடலொன்று தெரிந்தது. அந்தத் திடலில் ஆச்சிரமம் ஒன்று அமைந்திருந்தது. அதைக்கண்டு மகிழ்ந்தான் மாதவன். அதை நோக்கி நடந்தான்.

அந்த ஆச்சிரமத்தில் அந்தச் சமயததில் இருந்தது யார்?

அது தெரிந்தால் நம் ஆச்சரியம் எல்லை மீறும். இப்படி எல்லாமும் நடக்குமா? என இதயம் பரவசம் கொள்ளும்.

(தொடரும்)

## இனிப்பூட்டிய பானங்கள்

இவற்றினை அடிக்கடி அருந்துவதனால் பற்சூத்தை மற்றும் பல் சம்பந்தமான பிரச்சினைகள், வயிற்றுக் கோளாறுகள், பசியின்மை, இரைப்பைப்புண், கவனச் சிதறல், தலையிடி என்பன ஏற்படும் ஏதுநிலை அதிகரிக்கின்றது. அத்துடன் நீண்ட காலத்தில் நீரிழிவு, இதயநோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரோல் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படும் அபாய நிலை அதிகமாகும்.

[illegible]

## சாஸ்திரங்கள்

✦ குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்த பிறகு குழந்தைகளின் உதடுகளில் பால்கறை கட்டாதபடி துடைத்துவிட வேண்டும். இல்லையெனில் உதடு கறுத்து விடும்.

-மானிட இரகசிய சாஸ்திரம்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தம்பி மனைவியை திருமணம் செய்யலாமா?**

தம்பி மனைவி மகளுக்கு ஒப்பானவள். அவளை திருமணம் செய்தால் தனது மகளை திருமணம் செய்து கொண்ட பாவம் உண்டாகும்.

**ஜன்ம நட்சத்திரத்திரல் விவாகம் சரியா?**

பெண் ஜன்ம நட்சத்திரத்தில் விவாகம் செய்யலாம். ஆண் ஜன்ம நட்சத்திரத்தில் விவாகம் செய்யக்கூடாது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில பெரியநீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானமுருகன் வெற்றி



உரும்பிராய் சென். மைக்கேல் வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 07.07.2017 அன்று நடைபெற்ற போட்டியில் அரியாலை ஐக்கியம் வி.கழகத்தை 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டு அடுத்த சுற்றுக்கு தெரிவானது ஞானமுருகன் அணி.

அணி சார்பில் ஜெகன், தீபன், வகி தலா ஒரு கோலினைப் போட்டனர்.(க)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவு குண்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 13.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மதுசுதன் 12.28 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் அப்டீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எம்.முசாபி 11.71 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (க)

# நீளம் பாய்தலில் சென்.ஜோன்ஸ் கல்லூரி தங்கத்தை தனதாக்கியது

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நடைபெற்ற 18 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தலில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இந்தத் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் நடைபெறவுள்ளது.

நடைபெற்ற 18 வயது ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.தனுஜன் 6.58 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மன்னார் கற்கடந்த குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த வி. புனிதராஜ் 6.43 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.டிலக்சன் 6.42 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (க)

# வடமாகாண தடகளத் தொடர் மகாஜனாவின் ஹெரீனா தங்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.ஹெரீனா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. முதலாம் நாள் போட்டிகளில் ஒன்றாக 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் நடைபெற்றது.



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.ஹெரீனா வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித் துவம் செய்த பி.பவித்ரா வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.நிசாந்தினி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (க)

# அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

## சென். பீற்றர் (B) விண்மீன் வெற்றி



அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 05.07.2017 அன்று நடை பெற்ற முதல் போட்டியில் சென்.பீற்றர் விளையாட்டுக்கழகம் (B) ஐ எதிர்த்து சிவகுமாரன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்ட முடிவில் இரண்டு அணிகளும் சம நிலையில் முடிவுற்றது. தண்ட உதையின் மூலம் சென்.பீற்றர் (B) விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சென். பீற்றர் (B) விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த நிஷான் தெரிவு செய்யப்பட்டார். பதக்கம் முன்னாள் கிராம சேவகர் கௌதமனால் (GS) வழங்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் விண்மீன் விளையாட்டுக் கழகம்(A) ஐ எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப் போட்டியில் விண்மீன் விளையாட்டுக்கழகம் 6.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக விண்மீன் ,(A) விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜோன்கனடி தெரிவு செய்யப்பட்டார். பதக்கம் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் உப செயலாளர் மு.விதுசனால் வழங்கி கௌரவிக் கப்பட்டது. (க)

# பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி

## சுண்டுக்குளிக்கு தங்கம்




2017 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 19,20 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டியில் பங்கு கொண்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி கராத்தே அணியினர் 7 பதக்கங்கள் பெற்றுப் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுடன் பிரமுகர்கள், நடுவர்கள் , கராத்தே பொறுப்பாசிரியர்கள் மற்றும் கராத்தே பயிற்சி ஆசிரியர் ஆகியோரை படத்தில் காணலாம். இவர்கள் இவ் ஆண்டிற்கான தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# உதயதாரகையின் உதைபந்தாட்ட தொடர் யங்கம்பன்ஸ், திக்கம் வி. கழகம் வெற்றி






அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 06.07.2017 அன்று நடைபெற்ற முதல் போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட முடிவில் சமநிலையில் முடிவுற்றது. தண்ட உதையின் மூலம் யங்கம்பன்ஸ் வி.கழகம் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த மகிந்தன் தெரிவு செய்யப்படடார். பதக்கம் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் அணித் தலைவரும் தற்போதைய நிர்வாக உறுப்பினருமான ச.கபில்குமாரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் திக்கம் விளையாட்டுக் கழகம் (A) ஐ எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட முடிவில் சம நிலையில் முடிவுற்றது. தண்ட உதையின் மூலம் திக்கம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. பதக்கம் கற்கோவளம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் அ[illegible]சாவால் வழங்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனை கா ...

வமடு பகுதியை சேர்ந்த ஆனந்தராசா சுஜீவன் (வயது 25) என்ற இளைஞரே மேற்படி காணாமல் போயுள்ளதாக அவரது தாயார் ஆ.நந்தாவதி முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த தனது மகன் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலை புலிகள் அமைப்பில் இருந்தார். ஆனால் சிறு பிள்ளை என்பதால் புனர்வாழ்வு பெறாமல் எம்முடனேயே வந்து விட்டார்.

இருப்பினும் குறித்த விடயம் தொடர்பாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மற்றும் பொலிஸார் எனது மகனிடம் விசாரணைகளை மேற்கொண்டு வந்திருந்தனர். அப்போதும் நாம் உண்மையை கூறியிருந்தோம்.

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் வீட்டில் இருந்து வெளியே சென்ற எனது மகன் வீடு திரும்பவில்லை. எனக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மேல் சந்தேகம் இல்லை. குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலே சந்தேகம் உள்ளது. எனது மகனை அவர்களிடம் இருந்து உயிருடன் மீட்டுத்தர வேண்டும் என அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (மு-9)

## கோத்தா கைது ...

வித்துள்ளது.

கொழும்பு மாநர சபை வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மேல்மாகாண முதலமைச்சரும், சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினருமான இசுறு தேவப்பிரிய இதனைக் கூறினார்.

நேற்று அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானதை கண்டேன்.

அதனை தெளிவுபடுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரே அமைச்சர் மகிந்த அமரவீர. கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதும் அடக்குமுறைகளைக் கையாள்வதற்கான எந்த முடிவுகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்திருக்கவில்லை என்றார். (மு - 11)

## இந்திய மீனவர் ...

வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராமேஸ்வரத்தில் நேற்று மீனவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போதே காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் ஈடுபடுவது தொடர்பாக தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி மத்திய அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பாக தீக்குளிக்கும் போராட்டம் நடத்தப் போவதாகவும் மீனவர்கள் அறிவித்துள்ளனர். (மு - 11)

## டெங்கினால் ...

கடந்த ஆறு மாத காலப்பகுதியில் நாட்டில் பல பாகங்களிலும் 80 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். வரலாற்றில் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

கொழும்பு, கம்பஹா, களுத்தறை, மாத்தறை, கண்டி, கேகாலை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் இந்த டெங்கு நோய் பரவும் வீதம் அதிகமாக காணப்படுவதாகவும் சுகாதாரப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (மு-11)

## நேற்று திடீரென ...

நீடித்தது.

மழையை அடுத்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

நீண்ட நாள்கள் மழை பெய்யாதிருந்த நிலையில் மழை பெய்துள்ளது.

நேற்று பகல் தென்மராட்சி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளிலும், நேற்று முன்தினம் இரவு வடமராட்சியின் சில பகுதிகளிலும் மழை பெய்திருந்தது. (மு - 11)

## அரசை வீட்டுக்கு ...

ருந்து ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி வரை 18 கருத்தரங்குகள் வைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

## திடீரென தீப்பற் ...

ஆடியபாதம் வீதி பகுதியில் இயங்கிவரும வாகனம் திருத்தும் இடம் ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த முச்சக்கரவண்டியை வாகன திருத்துமிடத்தின் பணியாளர்கள் பழுதுபார்த்துக்கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இருப்பினும் விரைந்து செயற்பட்ட பணியாளர்கள் குறித்த முச்சக்கரவண்டியை வெளியே இழுத்து விட்டதனால் ஏனைய வாகனங்களுக்கும் தீ பரவும் பேரனர்த்தமொன்று தடுக்கப்பட்டுள்ளதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

குறித்த முச்சக்கர வண்டியில் அதிகமான பெற்றோல் நிரப்பப்பட்டிருந்ததாகவும் இதன் காரணமாக ஏற்பட்ட எண்ணெய்க் கசிவே விபத்து நிகழ்ந்தமைக்கான காரணம் என்றும் நம்பப்படுகிறது. (மு - 11)

## மின் கட்டணம் ...

ஏற்று மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மீள்சுழற்சி சக்தி உருவாக்கம் ஊடாக எதிர்காலத்தில் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (மு - 11)

## முஸ்லிம் மீள்குடி ...

கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் நேற்று தனிநபர் பிரேரணை மீதான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில் வடக்கிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான பிரேரணையும் இருந்தது.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) மதிய போசன இடைவேளைக்கு நிறுத்தாது சபை தொடர தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் வெள்ளிக்கிழமை நாளாகையால் தொழுகைக்கு சென்றிருந்தேன்.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான இந்த பிரேரணை முக்கியமானது. வெள்ளிக்கிழமைகளில் தனிநபர் பிரேரணையை விவாதிக்கும்போது முஸ்லிம் உறுப்பினர்களின் பிரேரணையை முற்கூட்டியே எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நிலையில் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, இந்த விடயம் தொடர்பில் இனிவரும் காலங்களில் கவனமெடுப்பதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு - 11)

## மகாநாயக்கர்க ...

திருத்தத்திற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிவிட வேண்டும். எனவே தற்போது பந்து சம்பந்தன் கையில் உள்ளது. அவர் எப்படி விளையாடப் போகின்றார் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசியல் தீர்வை சம்பந்தன் பெற்றுக் கொள்வாரா அல்லது சர்வஜன வாக்கெடுப்பை கோரி எதனையும் பெற முடியாத நிலைமையை ஏற்படுத்துவாரா? சம்பந்தன் பந்தை எப்படிப் போடப் போகின்றார் என்பதிலேயே அனைத்து விடயங்களும் தங்கியுள்ளன என்றும் டிலான் பெரேரா சுட்டிக்காட்டினார்.

சம்பந்தன் காலத்திலேயே இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காண வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எனவே தமிழர்களின் தலைவிதியை தீர்க்கும் பொறுப்பு தற்போது சம்பந்தன் கையில் உள்ளது. நிறைவேற்று அதிகாரத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை கைவிடுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பும் வேண்டாம் என்ற இடத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இறங்கி வரவேண்டும் என்றும் சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா மேற்கண்ட விடயங்களை சுட்டிக்காட்டினார். (மு-11)

## மக்கள் வறுமை ...

கது என மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் கூறியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஆசீர்வாதம் பெறுவதற்கும் தன்னைக் கைது செய்ய திட்டமிடுவதாக தெரிவிக்கப்படும் செய்தி குறித்து முறையிடுவதற்கு சென்றபோதே தேரர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டு மக்கள் உண்பதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுகின்றனர். தேங்காய் ஒன்றின் விலை 70 ரூபாவாகவும், அரிசி ஒரு கிலோ 100 ரூபாவாகவும் காணப்படுகின்றது. இது பணம் படைத்தவர்களுக்கு பிரச்சினையல்ல. அன்றாடம் தேடி உண்பவர்களுக்கே பிரதான பிரச்சினையாகும்.

நாட்டில் மக்கள் முகம்கொடுத்துள்ள சுகாதாரப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வை அரசாங்கம் காணவில்லை. இன்னும் இன்னோரன்ன பிரச்சினைகள் மக்களது வாழ்வாதாரத்தைப் பாதித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிலேயே அரசாங்கம் நேற்றும் பாராளுமன்றத்தில பல கோடி ரூபா குறைநிரப்புப் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளதாகவும் தேரர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை புனர் நிர்மானம் செய்தல், அமைச்சர்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் போன்ற விடயங்களுக்கு மேலதிக நிதியை வழங்குமாறு குறைநிரப்பு பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டிருந்தது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# கோத்தாவை கைது செய்வதில் என்ன தவறு? பொன்சேகா கேள்வி



(கொழும்பு)

ஊழல் மோசடி மற்றும் மனிதக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்பதால் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதில் தவறில்லை என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனியில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண மோசடியில ஈடுபட்டவர்களையும், திருட்டுப் பணத்தில் தாய் தந்தையருக்கு சமாதி அமைத்தவர்களையும், மனித கொலையுடன் தொடர்பு பட்டவர்கள் மீதும் வழக்குத் தொடரவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யவுள்ளதாக கூறப்படுவது தவறான விடயமல்ல. தவறிழைத்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (மு-11)

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
Next exam date in Jaffna. 29 July 2017
idp www. idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500**

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

(C-8965)

**யாழ் - வன்னி - கொழும்புக்கான இலவச சுற்றுலாப் பயணங்களுடன்**

**O/L உடன் மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க**

**வடக்கின் 1வது ஹொட்டேல் கல்லூரி**





SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk
fb: Sikaram Academy
வழங்கும்

Diploma in Tourism &

**Hotel Management**

100 % JOB GUARANTEED

3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
Student Visa – Work Visa – Skilled Migration to Australia / New Zealand / Canada & Malaysia

(சி-8964)

அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011

175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

**CALL TAXI சேவை**

புத்தம் புதிய யப்பான் கார். உள்ளூர், வெளியூர் சேவைகள் மிகக் குறைந்த கட்டணங்கள்.

விபரங்களுக்கு:

**076 793 4206**

(9678)

APEX TRAVELS



(9724)

**உங்கள் பயணம் இனிதாகட்டும்**

- 24 மணி நேர சேவை
- குறைந்த கட்டணம்; நிறைவான சேவை
- யாழ்ப்பாணம் – கொழும்பு விமான நிலையத்துக்கு சென்று வருதல் (மிகக் குறைந்த கட்டணம்)
- திருமண வைபவம், விசேட நிகழ்வுகள், விசேட தினங்களுக்கான சிறப்பு கார் மற்றும் வான் சேவைகள்.
- இலங்கை முழுவதும் சுற்றுலா சென்று வருவதற்கான சிறப்பு சுற்றுலா ஒழுங்குகள்
- ஆன்மீக தலங்கள் தரிசித்து வருவதற்கான தலயாத்திரைகளுக்கான விசேட சலுகை

No.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:

077 350 4700, 071 177 7771

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress

(சி-8983)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



(9729)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**ECONOMICS HALL**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவை அருகில்)

**மாபெரும் பொருளியல் கருத்தரங்கு**

**ஆசிரியர் R.தர்ஷன்**

யூலை 10 - யூலை 25 வரை (50 மணித்தியாலங்கள்)

(9705)

500 M.C.Q (பல்தேர்வு வினாக்கள்) 20 வருடகால பரீட்சை வினாக்கள் உயர்ந்த விளக்கத்துடன் K-AIMS உடைய மாதாந்த சஞ்சிகைகளில் ஆக்கங்களை வழங்கி வருகின்ற ஆசிரியர் கடந்த காலத்தில் மாவட்ட நிலை 1,2 அடங்கலாக உயர் பெறுபேற்றுக்குக் காரணமானவர்.

**வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்**

**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி உரும்பிராயில் (ஒஸ்கா லேன் அருகில்) சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(9714)

தொடர்பு:
0770690275

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணம் கந்தர்மடம் நல்லூரடியில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.
(காலை வந்து மாலை போகலாம் அல்லது தங்கியும் நிற்கலாம்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(9739)

தொடர்பு:
0768514296

**விற்பனைக்கு**

பழைய புதிய 4:3, 6:4, 6:2, 6:5 பாலை தீராந்திகள். வேம்பு 4:3, வேம்பு, பலா, மா மற்றும் வீட்டுக்குத் தேவையான பலகைகள் விற்பனைக்கு உண்டு.

(9733)

தொடர்புகளுக்கு:
**கிருஸ்ணா பாம்**
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
தொ.பே.
0774142867
0775084685

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் பிரபலமான நியூ மைதிலி ஜுவலர்ஸில் கீழ்வரும் பதவிகளுக்கு வேலைவாய்ப்பு உண்டு.

- கணக்காளர்
- சேல்ஸ்மேன்/ சேல்ஸ் கேர்ள்
- உதவியாளர்

01. கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
02. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
03. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், தகைமையுள்ளவர்கள் கீழ்வரும் முகவரியில் உள்ள எமது ஜுவலர்ஸுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 தொடக்கம் 10.00 மணி வரை அல்லது மாலை 4.30 தொடக்கம் 6.30 மணி வரை நேரடியாக சான்றிதழ்களுடன் வரவும். தங்கி நின்று வேலை செய்வோர் விரும்பத்தக்கது.

**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**

**இல.38,40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-8979)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**யாழ் நகரில் City & Guilds UK பொறியியல் வகுப்புக்கள்**

**A/L, NVQ Level 4 / 5 கல்விகற்கும் Engineering துறை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு**

**பொறியியலாளராக அரிய வாய்ப்பு**

**City & Guilds** Engineering Council (UK) / IESL Recognized Qualification 2017/2018

NVQ Level 4 / 5 படிக்கும் மாணவர்கள் தராதரப்பத்திரம் இன்றி கல்லூரி அதிபரின் சிபாரிசுடன் பின்வரும் துறைகளில் கல்வி கற்பதற்கு அரிய வாய்ப்பு

Civil Engineering — Quantity Surveying
Electrical & Electronics — Telecommunication

அனுமதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் சுயவிபர கோவையுடன் 11,12,13 July 2017 நேரில் வரவும்

(9730)


**10-20% Discount for Technical Students**

Course Director: Prof.K.சந்திரபோஸ் (City & Guilds Medal of Excellence Winner)

**APSS International**
(College of Engineering Studies)
No. 4 & 6 Clock Tower Lane, Jaffna

077 3867695
077 2306642


**துயர் பகிர்கின்றோம்**



**அமரர் சுவாமிநாதன் சாந்தகுமார்**

(அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியர்)

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் அமரர் சுவாமிநாதன் சாந்தகுமார் அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை ஆளணியினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்-
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

தோற்றம்: 15.10.1973 – மறைவு: 07.07.2017

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 125

வள்ளுவர் ஆண்டு 2048 09.07.2017 தொலைபேசி : 021 222 3378





# அரசியல் அமைப்பிற்கு ஆப்பு



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

noolaham.org | aavanaham.org

# முட்டிக்கொள்ளுமா இந்தியா-சீனா எல்லையில் போர் பதற்றம்




பனி படர்ந்த இந்திய-சீன எல்லை, 55 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு சூடான மோதலைச் சந்தித்திருக்கிறது. புல்கூட அதிகம் முளைக்காத பூடான் நாட்டை ஒட்டிய சும்பிப் பள்ளத் தாக்குப் பகுதியில், 3,000 இந்திய வீரர்களும் 3,000 சீன வீரர்களும் கண்ணுக்குக் கண் பார்த்தபடி எதிரெதிர் எல்லைகளில் நிற்கிறார்கள். எந்தப் பேச்சுவார்த்தையும் பலன் தரவில்லை. 'ஒரே ஒரு பாதை போடும் விவகாரம், இரண்டு பெரிய நாடுகளுக்கு இடையேயான போரில் போய் முடியுமோ' என்று உலகமே இப்போது கவலைப்படுகிறது.

கடந்த வாரம் சீனாவையும் பாகிஸ்தானையும் மறைமுகமாகக் குறிப்பிட்டு, "ஒரே நேரத்தில் இரண்டு எல்லைகளில் போர் வந்தாலும், இரண்டு இராணுவங்களையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக இருக்கிறது" என்று சொன்னார், இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்.

அடுத்த நாளே "இப்படிப் பொறுப்பில்லாமல் பேசக் கூடாது. 1962 ஆம் ஆண்டு என்ன நடந்தது என வரலாற்றிலிருந்து அவர் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று சீனாவுடனான போரில், இந்தியா தோற்றதைக் குத்திக்காட்டினார் சீன இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் கர்னல் வூ கியான். இதற்குப் பதிலடியாக, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பு வகிக்கும் அருண் ஜெட்லி, "1962ஆம் ஆண்டு இருந்த சூழ்நிலை வேறு. இப்போதைய இந்தியா வேறு" என்று உஷ்ணம் கூட்டினார்.

பிரச்சினையின் முதல் புள்ளி

இந்த எல்லா வீர முழக்கங்களுக்கும் ஃப்ளாஷ்பேக் கடந்த ஜூன் 16 ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இந்தியாவின் சிக்கிம் மாநிலத்துக்கும் பூடான் நாட்டுக்கும் இடையே, ஒரு குறுவாளின் நுனிபோல இருக்கும் சும்பிப் பள்ளத்தாக்குப் பகுதி சீனாவுக்குச் சொந்தம். இங்கு உள்ள டோக்லாம் பீடபூமியில், தங்கள் நாட்டின் எல்லையோரமாக இருக்கும் டோகா லா என்ற இராணுவ முகாமுக்கு பாதையாக போட்டது சீனா. தங்கள் இராணுவ முகாமுக்கு சீனா பாதைபோட்டது பிரச்சினை இல்லை. மலைப்பாங்கான தங்கள் நாட்டுப்பகுதியில் பாதை போடுவது சாத்தியமில்லை என்பதால், அதை பூடான் நாட்டு வழியாகப் போட்டதுதான் பிரச் சினை. பூடானுக்கும் இந்தியாவுக் கும் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் இருக்கிறது. அதனால், இந்தியா இதில் தலையிட்டது. அடுத்தநாளே இந்திய இராணுவத்தினர் அங்கு போய் எதிர்ப்புத் தெரிவித்து, பாதை போடும் பணியை நிறுத்தினர்.

கடுப்பான சீன இராணுவம், டோகா லா எல்லையில் இருந்த இரண்டு இந்திய இராணுவ முகாம்களைத் தாக்கி அழித்தது. அங்கு எல்லையைத் தாண்டி இந்தியப் பகுதிக்குள் சீன இராணுவம் வர முயன்றபோது, இந்திய இராணுவத்தினர் மனிதச் சங்கிலி போல கைகோர்த்து நின்று தடுத்தனர். இரண்டு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டனர். துப்பாக்கிகளே முழங்காத சண்டை போல அது இருந்தது. அங்கு இந்திய இராணுவம் எல்லை தாண்டி ஊடுருவி இருப்பதாகக் குற்றம் சாட்டும் சீனா, "இந்தியர்கள் திரும்பிப் போக வேண்டும்" என்கிறது.

இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் இரண்டு நாட்கள் சிக்கிம் பயணம் சென்று நிலைமையைக் கண்காணிக்க, இன்னொரு பக்கம் சீன இராணுவம் இதன் அருகே திபெத் எல்லையில் போர்ப்பயிற்சி மேற்கொண்டது. "இந்தியாவைக் குறிவைத்து இதைச் செய்யவில்லை" என்று தேவையே இல்லாமல் விளக்கம் வேறு கொடுத்தது.

பூடானுக்கு பூட்டு

ஒரு காலத்தில் இந்தியாவுக்கு நெருக்கமாக இருந்த நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளை சீனா தன் வசம் ஈர்த்துக்கொண்டது. இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில், இன்னமும் இந்தியாவுக்கு நெருக்கமாக இருப்பது பூடான் மட்டுமே! மன்னர் ஆட்சி நடைபெறும் பூடானுக்கு எல்லாமுமாக இருப்பது இந்தியாவே. பூடான் இராணுவத்துக்குப் பயிற்சி தருவது இந்தியாதான். 'ஒருவருக்கு ஆபத்து என்றால், இன்னொரு நாட்டின் இராணுவம் உதவிக்கு வர வேண்டும்' என்ற ஒப்பந்தம் இந்தியாவுக்கும் பூடானுக்கும் இருக்கிறது. சர்க்கரையில் ஆரம்பித்து சமையல் எரிவாயுவரை பூடானுக்கு எல்லாமே இந்தியாவிலிருந்துதான் போகின்றன.

பூடானின் வடக்கே இருக்கும் 499 சதுர கிலோ மீற்றர் பகுதியைச் சீனா சொந்தம் கொண்டாடுகிறது. இதேபோல, இப்போது பிரச்சினைக்குள்ளாகி இருக்கும் டோக்லாம் பீடபூமியிலும் 269 சதுர கிலோ மீற்றர் பகுதியைச் சீனா தன்னுடையது என்கிறது. இப்போது பூடானுடன் சீனா வேறொரு ஒப்பந்தம் பேசுகிறது. 'டோக்லாம் பீடபூமியைக் கொடுத்து விட்டால், வடக்கே உரிமை கோருவதை நிறுத்திவிடுவோம்' என்கிறது. இதற்குப் பூடான் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால், வம்படியாக நுழைந்து பாதை போடுகிறது. இப்போதும், "இது பூடானுக்கும் எங்களுக்குமான பிரச்சினை. இதில் உங்களுக்கு என்ன வேலை?" என இந்தியாவிடம் கேட்கிறது.

எதற்காக பாதை?

'ஒரு பாதை போடுவதற்கு எதற்காக இவ்வளவு எதிர்ப்பு?' என்ற சந்தேகம் எழலாம். ஆனால், அந்த பாதையின் நோக்கம்தான் பிரச்சினைக்குரியது. தன் எல்லையில் இருக்கும் இராணுவ முகாம்கள்வரை டாங்கிகள் போன்ற கனரக வாகனங்கள் வருவதற்காகவே, சீனா இப்படி பாதை போடுகிறது.

போர் மூளுமா?

அமெரிக்காவுக்கு இணையான ஒரு வல்லரசாகத் தன்னைக் காண்பித்துக்கொள்ள சீனா விரும்புகிறது. ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைத்து சீனா ஏற்படுத்தி வரும் 'One Belt One Road (OBOR)' திட்டமும் அதற்காகவே! ஆனால், இதையெல்லாம் எதிர்க்கும் இந்தியா, அமெரிக்காவின் நிழலில் போய் நிற்பது சீனாவுக்கு எரிச்சல் தருகிறது. 'இந்தத் திட்டத்தில் இந்தியா இணைந்தால், எல்லைப் பிரச்சினை இவ்வளவு பூதாகரமாக ஆகியிருக்காது' என்று சீனப் பத்திரிகைகள் இப்போது எழுதுகின்றன.



ஆனாலும், "இந்தியா என்கிற 130 கோடி பேர் இருக்கிற மிகப்பெரிய மார்க்கெட்டை சீனா இழக்க விரும்பாது. இந்தியாவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பட்டியலில், முதலிடத்தில் இருப்பது சீனாதான். அதோடு, பொருளாதார வளர்ச்சி என்கிற திசையில் போகிற சீனாவுக்குப் போர்க்களம் பக்கம் திரும்பிப் பார்க்க இப்போது நேரமில்லை" என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள் சிலர்.

அருகருகே இருக்கும் இரண்டு தேசங்கள் ஒரே நேரத்தில் வளர்ச்சி பெறுகிறபோது, இரண்டுக்கும் இடையே மோதல்களைத் தவிர்க்க முடியாது. இது வரலாறு சொல்லும் உண்மை. அப்படி ஒரு வரலாறு மீண்டும் நிகழாமல் இருப்பது, இரண்டு நாடுகளுக்குமே நல்லது!

சீனாவின் ஆக்கிரமிப்புகள்!

உலகிலேயே சீனா அளவுக்கு அண்டை நாடுகளுடன் எல்லைத் தகராறில் ஈடுபடும் நாடு வேறு எதுவும் கிடையாது. எந்தப் பகுதியையாவது ஆக்கிரமிக்க நினைத்தால், அது சீனாவின் பகுதி என்பதற்கு ஆதாரமாக ஏதாவது ஒரு 'வரலாற்றை' உருவாக்கி விடுவது சீனாவின் சாமர்த்தியங்களில் ஒன்று.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் 4,050 கிலோமீற்றர் பொதுவான எல்லை இருக்கிறது. ஜம்மு காஷ்மீரில் ஆரம்பித்து அருணாசலப் பிரதேசம் வரை இது நீள்கிறது.

சிக்கிமை இந்தியாவின் ஒரு மாநிலமாக சீனா ஏற்றுக் கொள்ளவே இல்லை. அதைத் தனி நாடு என்று சொல்லி வந்தது. அதேபோல அருணாசலப் பிரதேச த்தை இந்தியாவின் ஒரு பகுதியாக சீனா அங்கீகரிக்கவில்லை. அதை 'தெற்கு திபெத்' என்று சொல்லி, சுமார் 85,000 சதுர கிலோமீற்றர் இந்தியப் பகுதியைத் தன்னுடையது எனச் சொந்தம் கொண்டாடி வருகிறது.

சீனா ஆக்கிரமித்த அக்சாய் சின் பகுதியை ஒட்டி, காஷ்மீரின் இன்னும் சில பகுதிகளைப் பாகிஸ்தான் கடந்த 1947 ஆம் ஆண்டே ஆக்கிரமித்து வைத்திருந்தது.

கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல, இந்தப் பகுதியை சீனாவுக்குப் பரிசாகக் கொடுத்தது பாகிஸ்தான்.

இந்தப் பகுதி வழியாக அட்டகாசமாக பாதை போட்டு, சீனா - பாகிஸ்தான் பொருளாதார மண்டலத்தையே ஏற்படுத்தி விட்டது சீனா. வேடிக்கை பார்ப்பதைத் தவிர, இந்தியாவால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விடை காணமுடியாத மர்மங்கள்

இந்த உலகில் உள்ள பல எண்ணில் அடங்காத மர்மங்களை கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்கள் இன்றளவும் முயற்சித்து கொண்டு தான் இருக்கிறார்கள். இவ்வாறு ஆராய்ச்சியாளர்களால் தீர்வு காணப்பட்டதாக சொல்லப்படும் 3 மர்மங்களை பற்றி இங்கு காணலாம்.

### டில்லியின் இரும்புத்தூண். (Iron Pillar of Delhi)



டில்லியின் இரும்புத் தூண் என்பது டில்லியில் உள்ள முக்கியமான நினைவுச் சின்னம் ஆகும். டில்லியிலுள்ள இரும்புத்தூண் உலகம் முழுவதும் உள்ள தொல்பொருள் மற்றும் உலோகவியல் ஆய்வாளர்களின் கவனத்தை பல ஆண்டுகளாக ஈர்த்துள்ளது.

ஏனெனில் இத்தூணின் அற்புத அமைப்பானது கடுமையான வானிலைகளால் அரிக்கப்படாமல் 1600 ஆண்டுகளாக நிலைத்து நிற்கக்கூடியதாக உள்ளது. பண்டைய இந்திய கொல்லர்களால் தூய இரும்பினைக் கொண்டு இத்தூண் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதில் 98 சதவீதம் தூய இரும்பு உள்ளது. மேலும் இது 23 அடி 8 அங்குலம் உயரமும் 16 அங்குலம் விட்டமும்கொண்டது.

இந்தத் தூண் மழையிலும் வெயிலிலும் மாறி மாறி நனைந்து காய்ந்தபோதிலும் இது துருப்பிடிக்கவேயில்லை. உலோகவியல் விஞ்ஞானத்தில் அந்தக்காலத்திலேயே இந்தியா இவ்வளவு முன்னேற்றம் கண்டது வியப்புக்குரியது.

### ஸ்டோன் ஹெஞ்ச் (Stone Henge)



இங்கிலாந்தில் உள்ள பண்டைய உலக அதிசயங்களில் ஒன்றான ஸ்டோன் ஹெஞ்ச் இன்றளவும் விளக்க முடியாத பல மர்மங்களை கொண்டுள்ளது. மனித வரலாற்றிலேயே மிகவும் பழைய கட்டட வடிவமாக இதைச் சொல்கிறார்கள். இப்போது பிரச்சினை இந்தக் கட்டடம் அல்ல. அது எப்படிக் கட்டப்பட்டது, ஏன் கட்டப்பட்டது என்பதுதான். ஒவ்வொன்றும் 25 தொன்களுக்கும் அதிகமான எடையும், ஏழு மீற்றர் உயரமுமுள்ள கற்கள். அனைத்தும், 250 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த மலைப் பிரதேசங்களிலிருந்து வெட்டி எடுத்துக் கொண்டு வரப்பட்டுள்ளன.

எந்த ஒரு வசதிகளும் இல்லாத காலத்தில், நூறு மீற்றர் கூட நகர்த்த முடியாத மாபெரும் கற்களை, முந்நூறு கிலோ மீற்றர் நகர்த்திக் கொண்டு வந்து, ஸ்டோன் ஹெஞ்ச் கட்டப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு கற்களை அல்ல மொத்தமாக 160 கற்களை 250 கிலோ மீற்றர் நகர்த்தியிருக்கிறார்கள். இது எப்படி சாத்தியம் என்று ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

இருப்பினும் அந்தக் காலத்து மக்கள் எப்படி இதை செய்திருப்பார்கள் என்று செயல்முறை விளக்கத்தின் மூலம் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளார்கள். அதாவது உருளக்கூடிய மரத்தில் ஆன அமைப்புகள் மீது கற்களை வைத்து எளிமையான முறையால் இதை அவ்வளவு தொலைவில் இருந்து இழுத்து வந்ததாக தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இந்த ஸ்டோன் ஹெஞ்ச் யாரால் எதற்காக கட்டப்பட்டது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

### எகிப்து பிரமிடுகள்



நாம் உலகத்தில் பார்க்க வேண்டிய அதிசயங்களில் மிக மிக்கியமான ஒன்று பிரமிட். உலகில் இருக்கும் ஒவ்வொரு அதிசயமும் விளங்க முடியாத இரகசியத்தைக் கொண்டுள்ளது. பிரமிட்டுகள் தனக்குள் கொண்டிருக்கும் இரக சியத்திற்கு இன்னும் விடை கிடைக்கவே இல்லை.

பிரமிட்டுகளில் மிகப் பெரிய பிரமிட்டான கிசா பிரமிட் 23 இலட்சம் கற்களால் கட்டப்பட்டது. ஒவ்வொரு கல்லும் 2 முதல் 9 தொன் வரை எடை கொண்டது. இந்தக் கற்களை எங்கிருந்து எப்படி இழுத்து வந்தார்கள். ஒன்றின் மீது ஒன்றாக எப்படி ஏற்றினார்கள் என்பது இன்னும் மர்ம முடிச்சாகவே உள்ளது.

இதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு விளக்கம் அளித்துள்ளார்கள். அதாவது பிரமிட்டுகளை உருவாக்க பயன்படுத்தப்பட்ட கற்கள் அனைத்தும் நீர் வழி போக்குவரத்து மூலம் கொண்டு வந்துள்ளதாகவும் மேலும் மண்ணில் நீரை ஊற்றி ஈரமாக்குவதால் உராய்வை குறைத்து எளிமையான முறையில் கற்களை நகர்த்தியதாகவும் இதனால் தான் பிரமிட்டுகள் நைல் நதியின் ஓரத்தில் கட்டப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதன் விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்தாலும் கற்களை எவ்வாறு அவ்வளவு உயரத்தில் கட்ட முடிந்தது என்பதற்கான பதில் அவர்களுக்கு கிட்டும் இல்லை.



# எமக்கான தலைமையை நாமே தேர்ந்தெடுப்போம்

ஈழம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட இன்றைய இலங்கையில் தமிழர் பெருமைகளுக்கு குறைவேயில்லை. இயற்கையால் நீர் சூழ வீரம்மிக்க அரசாட்சி நடத்தி வந்த தமிழர்களது வாழிடங்களை நீர் விழுங்க ஒன்றுமறியாது நீரிற்கே தமது மான, வீரங்களையும் பொக்கிசங்களையும் ஒப்படைத்து மௌனமாகிவிட்டார்கள் நம் பெருங்குடி தமிழர்கள்.

அன்று தொடக்கம் இன்றுவரை ஒவ்வொரு கட்டமாக வரும் ஒவ்வொருவரையும் நமக்கு சுதந்திரம் வாங்கித் தரும் மீட்பர்களாகவே தமிழ்மக்கள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழர் ஒவ்வொருவரும் தமக்கான மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையினால் உழன்றாலும் தமக்கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டி ஓரணியின் கீழ் ஒன்று திரள்வதானது யாராலும் எதிர்பார்க்க முடியாததாயினும் வியப்பிற்குரியதானதாகவும் இலங்கை ஆட்சியாளர்கள் பொறாமைப்படும் விடயமாகவும் இருப்பது தமிழர்க்கான உரிமையை வென்றெடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றது.

தமிழர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தை வேறு வழியின்றி தம் தலைமேல் சுமந்து ஆயிரமாயிரம் வலிகளுடனும் வேதனைகளுடனும் தமக்கான இவ்வுலக இன்பங்களைத் துறந்து பொதுவான நோக்கத்திற்காகப் போராடிய எமது மக்களுக்கு துரோகம் எனும் சாபக்கேடு வந்து நம் ஒட்டுமொத்த பலத்தையும் அழித்து நமது கொள்கையை வீழ்த்தியது யாவரும் அறிந்த மிகவும் அருவருக்கத்தக்க செயலே.

இந்நிலையில் நமது வாக்குப்பலம் கொண்டு மீண்டும் எமது உரிமைகளை வென்றெடுத்து அரசியல் ரீதியாக கட்சிகளிடம் தங்களை ஒப்படைத்து ஓரணியின் கீழ் திரண்டு நமது உரிமைகளை வென்றெடுக்கலாம் எனப் பகற்கனவு கண்டோம். 2016 இல் உங்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவோம் என வீர வசனங்கள் பேசி தமிழ் மக்கள் மனங்களில் மொத்தமாகவே இடம்பிடித்து அவரவர் வாழ்க்கையில் அவரவர்க்குத் தேவையான உரிமைகளை மட்டும் பெற்று உல்லாசமாக வாழ வழி தேடிக்கொண்டு இன்று இருந்த இடம் தெரியாமல் இருந்து கொண்டு மக்கள் குறைகளை நேரில் கண்டுகொள்ள வர முடியாமைக்கு வாக்குப்போட்ட மக்களிடமிருந்து பாதுகாப்பில்லை எனக்கூறிக்கொண்டு தென்னிலங்கைக்குச் சுதந்திரமாகச் சென்று வரும் எம் தலைமைகளை என்ன சொல்வது.

எல்லா வழிகளில் ஏமாந்து போய் களைத்துவிட்ட மக்கள் என்னதான் செய்வது என்று தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில்தான் துரும்பாகக் கிடைத்தார் எம் இனத்தின் தலைவன்.

இவர்தான் இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதரோ? இல்லை தமிழ் அரசியல் கட்சிகளால் தமிழ்மக்களுக்கு இனங்காட்டப்பட்ட ஓர் தலைவன். தமிழர்களது இன்னல்களை தூர நின்று வேடிக்கை பார்த்த ஓர் நீதியின் குரல் இயற்ற ஏதுமின்றி செய்வதறியாது தனிமரமாய் நின்று புலம்பிய ஓர் மகான்

இன்று தோப்பாக அவர்பின் ஓர்கூட்டம் இருக்கிறது. அவரை நம்பியே ஓர் கூட்டம் இருக்கிறது.

ஏதிலிகளாக இருந்த நமக்கு ஓர் எஜமான் கிடைத்திருக்கிறார். நாளைய தலைமுறையினர் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க, இன்றைய தலைமுறையினர் அவர்பின் சென்று நமது உரிமைகளை வென்றெடுக்க ஓர் சந்தர்ப்பத்தை இறைவன் எமக்கு கொடுத்திருக்கிறார்.

2017 முடியும் காலம் வந்தும் 2016 தீர்வைப் பெற்றுத் தரும் எம் அரசியல்வாதிகளை இலவு காத்த கிளிபோல் நம்பியிராமல் நாம் நமக்கான அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிப்போம்.

-வேலணையூர் சதீஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கழுதையின் மனமாற்றம்



ஓர் ஏழை விறகு வெட்டியிடம் ஒரு கழுதை இருந்தது.

அவர் நாள்தோறும் காட்டுக்குப் போய் விறகு வெட்டுவார்.

விறகுகளைக் கழுதைமேல் ஏற்றிக்கொண்டு சந்தைக்குச்செல்வார்.

அவற்றை விற்றுக் குடும்பத்தை நடத்துவார்.

கழுதைக்கும் உணவு கொடுப்பார். ஆனால், கழுதைக்கு அந்த உணவும் போதவில்லை அந்த வாழ்க்கையும் பிடிக்கவில்லை.

அதனால், அடிக்கடி முரண்டு பிடித்து வேலையில் ஒத்துழைக்காமல் இருந்தது.

சரியாகச் சாப்பிடாமலும் மெலிய ஆரம்பித்தது.

ஒரு நாள் அந்த ஊர் வழியே அந்த நாட்டின் குதிரைப் படை வந்தது.

படை அதிகாரியும் விறகுவெட்டியும் சிறுவயது நண்பர்கள்.

படை அதிகாரி பார்வையில் கழுதை பட்டது. "ஏன் இப்படி மெலிந்திருக்கிறது?" என அதிகாரி கேட்டார்.

விறகுவெட்டி விடயத்தைச் சொன்னதும் "சில நாட்கள் உன் கழுதை என் குதிரைகளுடன் இருக்கட்டும்.

அதற்கு நல்ல உணவு கிடைக்கும்" என்றார் அதிகாரி.

விறகுவெட்டியும் கழுதையை அனுப்பி வைத்தார்.

கழுதை அவர்களோடு உற்சாகமாகப் புறப்பட்டது.

சென்ற இடத்தில் நன்றாகச் சாப்பிட்டு உறங்கியது.

அங்கிருந்த குதிரைகளோடு வம்பு பேசித்திரிந்தது.

"சீக்கிரமே நானும் உங்களோடு போர் முனைக்கு வருவேன்.

குதிரைக்கான தகுதி என்னிடமும் இருக்கிறது" என்றது.

ஒருநாள் குதிரைகளுக்குச் சேணம் பூட்டப்பட்டது.

ஆயுதமணிந்த வீரர்கள் அவற்றின் மீதேறிப் போருக்குச் சென்றனர்.

அன்று மாலை குதிரைகள் திரும்பி வந்தன.

அவற்றின் உடல்களில் காயங்கள் இருந்தன.


"என்ன ஆச்சு? ஏன் காயங்களாக இருக்கிறது?" எனக் கேட்டது கழுதை.

"பின்னே போர் முனையில் பட்டுச் சாமரமா வீசுவார்கள்.

வீரர்கள் மீது பாயும் அம்புகள் எங்கள் மீதும்தான் பாயும்" என்றது ஒரு குதிரை.

குதிரைகளின் வாழ்க்கை சொகுசானது அல்ல என்பதைப் புரிந்துகொண்ட கழுதை, அன்றிரவே தன் எஜமான் விறகுவெட்டியைத் தேடிக் கிளம்பியது.

ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.





# வண்டி

## பாடல்



வத்திப் பெட்டி வண்டி
வளைந்து போகும் வண்டி
இழுத்த திசையில் வளையும்
இங்கும் அங்கும் அலையும்
பள்ளம் வந்தால் உருளும்
பாறையில் மோதிப் புரளும்
ஓய்வுத் தேவையில்லை
ஓடிக் கொண்டே இருக்கும்
வள்ளி இழுக்கும் வண்டி
வாசல் வரைக்கும் செல்லும்
வேந்தன் இழுக்கும் வண்டி
வீதி வரைக்கும் ஓடும்
எனது வண்டி மட்டும்
எல்லை தாண்டிப் போகும்
எல்லாம் சுற்றிய பின்னர்
களைப்பில்லாமல் உருளும்.

# பிரார்த்தனை செய்யுங்கள்



'பிரார்த்தனை ஆன்மாவுக்கான உணவு' என்றார் மகாத்மா காந்தி. 'உலகம் காணும் அனைத்தையும் விட அதிகமாக பிரார்த்தனையால் சாதிக்க முடியும்' என்றார் ஆங்கில கவிஞர் டென்னிஸன்.

பிரார்த்தனை இதுபோல் கடவுள் நம்பிக்கை தொடர்பானதாக மட்டும் இன்றி ஆரோக்கிய ரீதியிலும் பல பயன்களைத் தருகிறது என்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

American scientific committee-ன் நரம்பியல் ஆய்வாளர்கள் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வில்தான் இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

'பிரார்த்தனை ஏற்படுத்தும் தாக்கம் மூளையின் செயற்பாட்டையும், நினைவாற்றலையும் மேம்படுத்துகிறது.

மனிதனின் அன்றாட சிக்கல்களை தீர்க்கும் திறனையும் அதிகரிக்கிறது.

ஒருவரின் உடல் ஆரோக்கியமும், மன மகிழ்ச்சியும் பிரார்த்தனையால் கூடும்.

மன அழுத்தம் மற்றும் உயர் இரத்த அழுத்தமும் குறைகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, நோயினால் ஏற்படும் வலியை குறைக்கிறது' என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

பிரார்த்தனைக்குப் பின்னால் உள்ள உளவியல் விஞ்ஞானத்தை மனநல ஆலோசகர் ஒருவரிடம் கேட்ட போது... "மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சக்தி பிரார்த்தனைக்கு உள்ளதாக பல்வேறு ஆய்வுகள் கூறியிருக்கின்றன.

அவற்றில் இதுவும் முக்கியமான ஒன்று.

பிரச்சினைகள் தோன்றும்போது ஒருவருக்கு தன்னைச்சுற்றி இருள் சூழ்ந்தது போலவும், தன்னால் மீண்டு வரமுடியாதது போலவும் உணரும்போது மனச்சோர்வினால் சுருண்டு விடுவார்.

அந்த நேரத்தில் தன்னுடைய மனவலியை யாரிடமாவது சொல்லும்போது தங்கள் பாரத்தை இறக்கி வைத்த நிம்மதி கிடைக்கும். அதுவே பிரார்த்திக்கும்போது இன்னும் கூடுதல் பலனாகக் கிடைக்கிறது.

சிலருக்கு தன்னுடைய கஷ்டங்களை சகமனிதர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாது. அவற்றை கடவுளிடம் சொல்லும்போது மன இறுக்கம் குறைவதாக உணர்வார்கள்.

கூட்டுப்பிரார்த்தனை நோயாளிகளின் மனதில் மகிழ்ச்சியான உணர்வினை ஏற்படுத்தும். இந்த நேர்மறையான உணர்வு நோயின் பாதிப்பையும் குறைக்கக்கூடும்" என்கிறார். ஸோ... ஃப்ரீயா விடுங்க... ப்ரே பண்ணுங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்புச் சீர்திருத்தம் வேண்டாம் என்றால்...

30 ஆண்டுகால விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்து போனதன் காரணமாக தமிழ்மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கவேண்டியதாகவுள்ளது.

தமிழ்த் தரப்பிடம் ஆயுத பலம் இருந்த போது ஆட்சியாளர்கள், தமிழ்த் தரப்புடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். என்ன தீர்வாக இருந்தாலும் அதைக் கொடுத்து பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுங்கள் என்பதே சிங்கள மக்களின் நிலைப்பாடாகவும் இருந்தது.

விடுதலைப்புலிகளின் போராட்டம் நியாயமானது என்ற கருத்தியல் சிங்களத் தரப்பிடம் இருந்ததையும் நாம் மறப்பதற்கில்லை.

எனினும் எம்மிடம் இருந்த ஆயுத பலத்தை சரியான முறையில் பயன்படுத்தி சிங்கள ஆட்சியாளர்களிடம் பெற்றுக்கொள்ளக் கூடிய அதியுயர்ந்தபட்ச அதிகாரத்தைப் பெறுவதில் நாம் தவறிழைத்து விட்டோம் என்று மனப்புழுக்கம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது கொண்டு வந்த அரசியல் தீர்வுத் திட்டம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் உச்சமானது என்று பலரும் கூறிக் கொள்ளக்கூடியது.

இருந்தும் அந்தத் தீர்வுத் திட்டத்தைக் கூட நாம் சாதகமாகப் பரிசீலிக்கத் தவறிவிட்டோமோ என்று ஆதங்கப்படக்கூடிய வேளையில் இப்போது அந்தத் தீர்வுத் திட்டம் தேவையற்றது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே கூறுமளவில் நிலைமையும் மாறி விட்டது.

ஆக, விடுதலைப்புலிகளின் ஆயுதபலம் தான் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் முன்மொழியப்பட்ட தீர்வுத் திட்டம் என்பதை நாம் உணர முடியும்.



## மகாநாயக்கர்களை நல்லாட்சி எதிர்க்குமா?

இப்போது எங்களிடம் ஆயுதபலம் இல்லாமற் போயிற்று. எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு செப்படி வித்தையாகவே முன்வைக்கப்படும் என்பதை உணர்ந்து கொள்வதில் கடினமிருக்காது.

விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தோடு எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கவேண்டும். ஆனால் அது சாத்தியப்படாமல் போயிற்று. ஆயுதப் போராட்டத்தின் தோல்வி என்பது மிக எளிமையாக நடந்த தொன்றல்ல.

ஒரு பெரும் யுத்த சூழலுக்குள் தமிழ்மக்கள் அகப்பட்டு; பல்லாயிரக் கணக்கில் உயிரிழந்தும் அங்கவீனப்பட்டும் காணாமல் போயும் தமிழின அழிப்புப்பிரளயமாக அந்நிலைமை அமைந்தது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பின் தாக்கம் இன்னமும் முடிந்தபாடில்லை. காணாமல் போனவர்களின் உறவுகள் ஆற்றாமையின் வெளிப்பாடாக தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இருந்தும் அவர்களின் போராட்டம் பற்றி ஆளுந்தரப்பு எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை.

இதுவே தமிழ்மக்களின் நிலைமை என்பதாக இருந்த கையில் ஆயுத பலத்தோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறிய எமக்கு எமக்கு இன்னொரு துரும்பு கிடைக்கிறது. அதுதான் எம்மினத்திற்கு ஏற்பட்ட இழப்பு.

ஆம் இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு. இந்த அழிப்புக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதாக எங்கள் கோரிக்கை சர்வதேசத்தை நோக்கி இடம் பெற்றிருக்கவேண்டும்.



அதிலும் உலக நாடுகள் முழுமையிலும் புலம்பெயர் தமிழர்களின் இருப்பு இருக்கையில் சர்வதேசத்தை நோக்கிய எங்கள் கோரிக்கை வலுப்பெறுவதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்தன.

அந்தச் சந்தர்ப்பங்கள் தான் தமிழ் மக்களின் பிரச்சினையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வ தேச சமூகத்தின் உதவியுடன் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பை நாம் தவறவிட்டு விட்டோம். போர்க்குற்ற விசாரணை என்பதனூடாக இலங்கை மீது சர்வதேச அழுத்தத்தைக் கொண்டு வருவதே எமது பிரச்சினைக்கான தீர்வை அடைவதற்குரிய உயர்ந்த உபாயமாக இருந்தது.

ஆனால் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதில் பேசுபடுபொருளாக்கியது.

இருந்தும் தமிழ்மக்களின் அரசியல் தலைமை நல்லாட்சியின் காலில் வீழ்ந்து கொண்டதால் எதுவும் செய்ய முடியாமல் போயிற்று.

அதாவது எமக்கு ஏற்பட்ட இழப்பை ஒரு பெரும் பலமாக மாற்றி எங்களுக்கான உரிமையை, எமது அரசியல் தலைமை விட்டுக் கொடுப்பை மேற்கொண்டது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை கட்டாயமானது. அது நடக்காமல் போனால் இலங்கையில் தமிழ்மக்கள் தொடர்ந்தும் நசுக்கப்படுவார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்துரைக்க தமிழ் அரசியல் தலைமை தவறியதால் எல்லாம் இழந்து; இன்று தமிழினம் நடுத்தெருவில் நிற்கிறது.

இந்தப் பரிதவிப்பு நிலைக்கு யார் காரணம் என்பதை இன்னொரு தடவை நாம் கூறவேண்டிய தேவை இராது எனலாம்.

தமிழ் அரசியல் தலைமை தமக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை மிக உயர்வாகப் பார்த்தது.

கூடவே அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழர்களின் பிரச்சினைக்கு முடிவு கட்டும் என நம்பியது. இந்த நம்பிக்கையில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தமிழ் மக்களிடம் சிவ வாக்குறுதிகளை வழங்கினார்.

ஆனால் இன்று அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறுவதிலேயே ஆட்டம் கண்டுள்ளது.

பௌத்த மகாநாயக்கர்கள் அரசியலமைப்புச் சீர்திருத்தம் வேண்டாம் என்கிறார்கள்.

அவர்களை மீறி நல்லாட்சி அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை சபை யேற்ற முடியுமா என்பதே இன்றைய கேள்வி.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** அரசியலமைப்புச் சீர்திருத்தம் எதுவும் வேண்டாமென்று பௌத்த மகாநாயக்கர்கள் கூறியிருக் கினம்.

**விதானையார்:** இது எப்பவோ தெரிந்த விடயம். அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வராது என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். இருந்தும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் ஏதாவது சொல்லி உலக நாடுகளைச் சமாளிக்க வேணுமல்லோ அதுதான்...

**கங்காணி:** அட நாசமறுப்பு. மகாநாயக்கர்கள் விடமாட்டினம் எண்டு அரசாங்கத்திற்கும் தெரியுமோ!

**விதானையார்:** அதைத்தான் சொல்லுறன் கங்காணியார். அரசியலமைப்புச் சீர்திருத்தம் வேண்டாமென்றால் அதை அந்த நேரமல்லோ மகா நாயக்கர்கள் தெரியப்படுத் தியிருக்க வேணும். இதை விட்டிட்டு அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவாற நேரத்தில் அரசியலமைப்பு போட்டியிடும் என்றால் அதின்ர பொருள் என்ன?

**மூப்பர்:** சிங்கள அரசியல்வாதிகள் மிக நுட்பமாக காய் நகர்த்துகினம். இது பற்றி எங்கட தமிழ் அரசியல்வாதிகள் தான் புரியாமல் இருக்கினம்.

**விதானையார்:** இதை நான் ஏற்கமாட்டன். எங்கட தமிழ் அரசியல் வாதிகளில முக்கியமான ஒரு சிலருக்கு எல்லாம் நல்லாத் தெரியும். அவர்களைப் பொறுத்தவரை அரசாங்கத்தோட சேர்ந்து போக வேணும். அரசாங்கத்தை எதிர்க்கக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலும் அல்லோ தந்திருக்கினம். ஆகையால அரசாங்கம் எதுவும் தராது என்பதை மறைப்பம் என்பது தான் தமிழ் அரசியல் வாதிகளின்ர முடிவு.

**சாத்திரியார்:** அப்ப விதானையார் எங்கட தமிழ் மக்கள் பாவங்களல்லோ.

**விதானையார்:** சாத்திரியார் இது அரசியல். ஏழை மக்களின் துன்பதுயரங்களை ஆரு பார்க்கப் போகினம். விடுதலைப் புலிகளில சேர்ந்து மாவீரர்களாகிப் போனவர்களின் குடும்பங்களின்ர கஷ்ட நிலைமையை யாரும் எண்ணிப் பார்க்கினமோ! எல்லாம் இருக்கும் வரைக்கும்தான்.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலரைத் தவிர மற்றெல்லாரும் நடந்து முடிந்த விடுதலைப் போராட்டம் பற்றியோ அதில் நிகழ்ந்த தியாகங்கள் பற்றியோ எந்த அக்கறையும் இல்லை. எல்லாம் சொந்த அரசியல், சொந்தப் பிழைப்பு.

**வாத்தியார்:** ஏன் இதைப் பற்றிச் சொல்லுறியள்? இன்னும் பத்து ஆண்டுகளில தலைவர் பிரபாகரன் என்றால் யாரு எண்டு எங்கட மாணவர் சமூகம் கேட்கிற நிலைமையிலதான் எல்லாம் இருக்குது.

சிங்கள மக்களின் வரலாறுகளைப் படிக்கிறதுதான் தமிழ் மாணவர்களின் தலைவிதி எண்டால் தமிழ் மக்களின்ர உரிமைப் போராட்டம், அதற்காக நடந்த மிகப்பெரிய தியாகங்கள் எல்லாம் மழுங்கடிந்து போறது தானே.

**சாத்திரியார்:** சிங்களவர்களின்ர வரலாற்றை மட்டும் படிப்பது என்ற நிலைப்பாட்டை மாற்ற வேணும்.

**விதானையார்:** சிங்கள மாணவர்கள் சிங்களம் படிப்பது, தமிழ் மாணவர்கள் தமிழ் படிப்பது போல சிங்கள மாணவர்கள் சிங்கள வரலாற்றையும் தமிழ் மாணவர்கள் தமிழ் வரலாற்றையும் படிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேணும்.

**கங்காணி:** இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமோ?

**விதானையார்:** ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஐம்பதுக்கு ஐம்பது எனப் பேரம் பேசவேணும்.

**மூப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்? ஐம்பதுக்கு ஐம்பது எண்டால் எங்கட ஜி.ஜி. பொன்னம்பலம் ஐயா கேட்ட மாதிரியோ?

**விதானையார்:** அது உரிமை கூர்ந்த கோரிக்கை. இது வரலாற்றுப்புத்தகம் சார்ந்த விடயம். 10 ஆம் தரத்து வரலாற்றுப் புத்தகத்தில் ஐம்பது வீதம் சிங்கள வரலாறு. ஐம்பது வீதம் தமிழர் வரலாறு என்பதாகப் பதிப்புச் செய்ய வேணும்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. அப்படிப் பதிப்புச் செய்தால்தான் சிங்கள மாணவர்கள் தமிழர் வரலாற்றையும் தமிழ் மாணவர்கள் சிங்கள வரலாற்றையும் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.



## தெரிவுக்குழுவை நியமித்தால் அது நியாயப் பிரச்சினையை எழுப்பும்

**பண்டிதர்:** இதுபற்றியெல்லாம் சிந்தித்துக் கதைப்பதற்கு எங்களிட்ட ஆரு இருக்கினம். எங்களிட்ட வடக்கு முதலமைச்சரை எப்படிக் கவிழ்ப்பது, அரசாங்கத்தோட சேர்ந்து போய் சலுகைகளைப் பெறுவது எங்ஙனம் எண்ட சிந்தனை இருக்குதல்லாமல் தமிழ்மக்களின்ர பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கும் ஆராய்வதற்கும் ஒருத்தரும் இல்லை.

**மூப்பர்:** அது சரி அமைச்சர்கள் மீது விசாரணையை மேற்கொள்வதற்கு முதலமைச்சர் குழுவை நியமிக்க அவைத்தலைவர் உட்பட உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கினமல்லோ.

**வாத்தியார்:** அப்படி எதிர்க்கேலாது பாருங்கோ. அமைச்சர்கள் மீதான விசாரணையை மேற்கொள்ள முதலமைச்சர் விசாரணைக் குழுவை நியமிக்கலாம் எண்டு சம்பந்தர் ஐயா உடன்பட்டதால தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சில விட்டுக் கொடுப்பனவுகளைச் செய்தவர். இப்ப முதலமைச்சரின்ர விசாரணைக்குழுவை விடுத்து தெரிவுக் குழுவை நியமிக்கிற முயற்சிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் நடவடிக்கை எடுத்தால், அது பாருங்கோ பிறகும் ஒரு பிரச்சினையை ஏற்படுத்துகிறதாகத்தான் முடியும்.

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல வாத்தியார் முன்னைய இரண்டு அமைச்சர்களை விசாரிப்பதற்கு முதலமைச்சர் நியமித்த குழுவும் பின்னைய இரண்டு அமைச்சர்களை விசாரிப்பதற்கு, வடக்கு மாகாண சபை நியமிக்கும் தெரிவுக்குழுவும் எண்டால் அது ஒரு நியாயமற்ற செயற்பாடல்லோ.

ஏற்கனவே விசாரணை நடந்த மாதிரித்தான் இப்பவும் நடக்க வேணும். இது விடயத்தில யார் குழப்பம் செய்தாலும் தமிழ்மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டினம்.

**கங்காணி:** நீங்கள் தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கமாட்டினம் எண்டு சொல்லுறியள். ஆனால் கடந்த வடக்கு மாகாண சபை அமர்வில முதலமைச்சரைக் குழப்புறதில சிலர் நடந்து கொண்ட முறையை பார்த்தனீங்கள் தானே!

**வாத்தியார்:** கங்காணியார் எங்கட மக்கள் எதற்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பினம். அதையும் மீறி நடந்தால் சரியான இடத்தில சரியான பாடம் படிப்பினம். இதைத் தெரியாமல் சிலர் தலைகீழாக நடக்கினம்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் தெரிவுக்குழுவை நியமிக்கிற விடயத்தில தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலையிட்டு அதை நிறுத்தி முதலமைச்சர் நியமிக்கும் விசாரணைக் குழுவிற்கு வழிவகுக்கவேணும். அதை அவர் செய்யாவிட்டால் ஏலவே சமரசம் செய்த மதத் தலைவர்கள்தான் தலையிடவேணும்.

இப்படிப் பண்டிதர் கூற அதை அங்கீகரிப்பதுபோல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



பிளாஸ்டிக் அரிசி உண்பதால் ஏற்படும் விளைவுகள்?

தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் உண்மையில் யார் பக்கம்? ...

டோனியையும் தல அஜித்தையும் ஒப்பிடும் முறை?

**கலை — மிருசுவில்**

**கெட்டவர்களை கடவுள் தண்டிப்பதில்லையா?**

ஒரு மனிதனுக்கு சுய அளவீடு மிக முக்கியம். எனக்கு மட்டும் ஏன் வாழ்க்கை இப்படிப் போகிறது என்று சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தங்களைத் தாங்கள் சுய மதீப்பீடு செய்து கொண்டால் இறைவனின் தண்டனை புரியும்.

முதலில் நான் நல்லவனா? நான் செயற்படும் முறை சரியா? எனக்கு கடவுள் இன்னென்ன கஷ்டங்களையும் மீள முடியாத துன்பங்களையும் தந்திருக்கிறான் அது எதனால்? என்ற கேள்விகளை நம்மை நாமே கேட்டு பதில் தேட வேண்டும்.

கடவுள் நமக்கு ஒரு துன் பத்தைத் தருகிறான் என்றால் நிச்சயம் நம்மில் ஏதோ மிருக குணம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கடவுளின் தண் டனை பிழைத்ததாகவோ தவறியதாகவோ வரலாறு இல்லை அவ்வளவுதான்.

**சுதன் — குப்பிளான்**

**மறுபடி ஒரு தேர்தல் வந்தால்?**

பல பேர் வீட்டிற்கும் சிலபேர் வீட்டிற்கு வெளியேயும் போக வேண்டிவரும்.

**செந்தூரன் — வேலணை**

**தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் உண்மையில் யார் பக்கம்? அரசு பக்கமா? தமிழ் மக்கள் பக்கமா?**

வாக்கு வாங்க மட்டும் தமிழர் பக்கம். மற்ற மேற்றர் எல்லாத்திலும் அரசு பக்கம். என்ன செய்ய. அவர்களைத் தான் தமிழராகிய நாம் தூக்கி பாராளுமன்றம் அனுப்பியிருக்கிறோமே. இந்த நிலையில் இனியும் மாற்றம் வருமென்று நாம் சிந்திக்கவில்லை.

உண்மையை எடுத்தும் சொல்பவர்களை துரோகிகள் என்கின்றோம். அண்ட த டீல் அரசுடன் வைத்திருக்கும் இவர்களை தூக்கி எறிய மக்கள் தயாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**தமிழ் — இணுவில்**

**காதல் என்பதன் சரியான வரைவிலக்கணம்?**

ஒருவனுக்கு ஒருத்தி இதுதான் எம் பண்பாட்டின் முதல் கட்டுமானம். மேலைத்தேயம் எம்மைப் பார்த்து வியந்து நிற்பதும் இந்த ஒன்றைத் தான்.

ஆனால் இன்று சிலரின் சின்னத்தனமான செயற்பாடுகள் காதல் என்ற புனிதத்தைக் கெடுத்து விட்டது. நிறைய கலர் இனிப்புக்கள் தரப்படுகிறது.

பிடித்த நிற இனிப்பை எடுத்து உண்பது தானே முறை. அதைவிடுத்து அனைத்து கலரும் எனக்கு வேண்டும் என்று அடம்பிடிப்பது நியாயம் இல்லையே.

**அபிநயா — நெல்லியடி**

**குதிரையின் குணம் அறிந்து தான் கொம்பு கொடுக்கவில்லை. இதன் பொருள்?**

இதை விளக்குவதென்றால் இன்னொன்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும். வண்ணத்துப் பூச்சிகள் எவ்வளவு அழகானவை. வண்ணங்கள் சிறகடித்து காற்றில் மிதக்க எமது மனமும் அதனுடன் இணைந்து பறக்கும்.

அதே வண்ணத்துப் பூச்சியின் ஆரம்பம் மயிர் கொட்டிக்கு பறக்கும் இயல்பு இருந்திருந்தால் நிலை என்ன? எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?

கடவுள் அனைத்தையும் ஒரு காரணத்துடன் தான் படைத்திருக்கிறான். அதில் மாற்றுக் கருத்திற்கு இடமிருக்காது.




**அபி — யாழ்ப்பாணம்**

**மக்கள் மனங்களில் நிறைந்த முதலமைச்சரை வீட்டுக்கு அனுப்பப் பார்க்கிறவர்கள் பற்றி?**

மக்கள் மனம் நிறைந்த அதுதான் பலருக்குப் பிடிக்கவில்லை. தாங்கள் நினைத்தவரைக் கொண்டு வந்து தாங்கள் நினைத்ததை சாதிக்கலாம் என்று நினைத்தவர்களுக்கு முதல்வரின் தனித்துவமான மக்களின் துயர் துடைக்கும் போக்கு பிடிக்கவில்லை. நீங்கள் அரசுடன் இணைந்து ஒத்தூதிகளாக இருங்கள். அதற்காய் தமிழர் உரிமைக்காக பேசும் முதல்வரை வீட்டுக்கு அனுப்ப நினைத்தால் உங்கள் அரசியல் அத்தியாயம் இத்தோடு முடிவது சர்வ நிச்சயம்.

**கௌசி — குப்பிளான்**

**பிளாஸ்டிக் அரிசி உண்பதால் ஏற்படும் விளைவுகள்?**

நஞ்சை உண்டால் என்ன விளைவு என்று கேட்டால் அதற்கு நான் என்ன சொல்ல?

**சகானா — மானிப்பாய்**

**முதலமைச்சரை பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்று சிலர் தொடர்ந்து கங்கணம் கட்டுகிறார்களே?**

ஒடுங்கிய பாதை என்பார், ஒரு நூறு பேறென்பார், முதல்வரை வீட்டுக்கு அனுப்பியே காட்டுவோம்என அள்ளக்கைகளை அனுப்பி தொல்லை கொடுப்பர். மக்கள் பார்த்து கொண்டே இருப்பர். அடுத்த தேர்தல் வரும் அவர்கள் மனங்கள் பேசும்.

**தயாளன் — மயிலங்காடு**

**கடன்பட்டு நாட்டை அபிவிருத்தி செய்வதா? நாட்டை விற்று அபிவிருத்தி செய்வதா சிறந்தது?**

இரண்டுமே தவறானதுதான். இன்னொருவரிடம் கை நீட்டிவிட்டு எம் சுயத்தை இழந்து தந்து விட்டார்களே. அவர்கள் எதைக் கேட்டாலும் கொடுத்தே ஆகவேண்டும் என்ற இக்கட்டான நிலைக்கு ஆளாவதை விட எம்மை நாம் திடப்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது.

அணுகுண்டால் பாதித்த ஜப்பான் அதன்பின் யாரிடமும் கையேந்தவில்லை. அதனால் ஜப்பானின் வளர்ச்சியில் யாரும் பங்கு கொள்ள முடியவில்லை. வளர்ச்சி என்பது எப்போதும் எம்முடையதாக இருக்க வேண்டும் என்பது தான் எம் கருத்து.

**அருள் — ஊரெழு**

**இறந்து விட்ட அம்மாவை மறுபடி காண்பது எப்படி?**

பிறவிகளில் வர்ணிக்க முடியாத ஒப்பற்ற படைப்பே தாய். சிலருக்கு அவள் அருகில் இருக்கும் போது புரிவதில்லை அருமை. எம் கண்முன்னே இருக்கும் தெய்வத்தை தரிசிக்காது கோவில் குளம் சென்று பயனேதும் வந்துவிட்டாது.

**குமார் — யாழ்ப்பாணம்**

**டோனியையும் தல அஜித்தையும் ஒப்பிடுக?**

இருவருக்கும் சிறு வயதிலேயே தலை நரைத்து விட்டது. இருவருக்கும் மோட்டார் சைக்கிள் பைத்தியம். சினிமாவில் அஜித்தும் கிரிக்கெட்டில் டோனியும் இன்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அவர்களின் ஆரம்பகாலம் பல அவமானங்களை சந்தித்து நம்பிக்கை என்ற நூலைப் பிடித்து இன்று உச்சத்தில் இருக்கிறார்கள். இருவரிடமும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது விடா முயற்சியைத்தான்.

**சசி — அளவெட்டி**

**மணலின் விலையேற்றம் பற்றி?**

தமிழன் அழிக்கப்பட்டதும் மண்ணால். இப்போது சுரண்டப்படுவதும் மண்ணால். மண் தமிழனுக்கு இராசி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கட்சியின் தலைமைத்துவத்தை எதி
# அவர்கள் இங்கொன்றும் கொழும்பிலொன்றுப்

# அதைத்தான் எதிர்க்கிறேன்

**வடக்கு மாகாண சபையில் அண்ண
தேசி யக் கூட்டமைப்பின் தேர்தல
சேர்ந்த ஒரு சாராரால் தனக்கு எதி
தொடர்பாக வடக்கு மாகாண
விபரிக்கிறார்.**

கடந்த சில வாரங்கள் இலங்கை முழுவதுமே வடமாகாண சபையின் பக்கம் தனது கவனத்தைக் குவித்திருந்தது. வடமாகாண சபையைச் சேர்ந்த சில உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் தங்களால் வெளியிடப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து வடமாகாண சபையில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. உண்மையில் அங்கு என்ன நடந்தது?

எமது மாகாண சபையைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் எமது மாகாண சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலருக்கு எதிராக நீண்டகாலமாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதென நாம் தீர்மானித்ததுடன் இதற்காக ஆணைக்குழு ஒன்றையும் நியமித்திருந்தோம். அந்தவகையில் இந்த ஆணைக் குழுவால் எம்மிடம் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் வடமாகாண சபையைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் தவறிழைத்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் மேலும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்த உறுப்பினர் வெளிநாடு சென்றதால் இவர்களுக்கு எதிரான விசாரணை முன்னெடுக்கப்படவில்லை. இந்த விசாரணை அறிக்கை எனது கைகளில் கிடைத்த போது, குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு அமைச்சர்களையும் பதவி விலகுமாறு நான் கேட்டுக் கொண்டேன். மற்றைய இரு அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் விசாரணை செய்யப்படாததால், அவர்களை ஒரு மாதம் விடுமுறையில் நிற்குமாறு கோரினேன்.

விசாரணைகள் மேற்கொள்ளப்படாத இரண்டு அமைச்சர்கள் விடயத்தில் தாங்கள் அநீதி இழைத்தீர்களா?

இவர்களுக்கு எதிராக முறைப்பாடு திரும்பப் பெறப்படவில்லை. ஆகவே இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இதுபோன்றே மக்களிடமிருந்தும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆகவே இந்தப் பிரச்சினையை குறித்த சில நாட்களுக்குள் தீர்க்க வேண்டும் என நான் கருதினேன். புதிய குற்றச்சாட்டுக்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்ட பின்னர் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதென நான் தீர்மானித்தேன்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பல் வேறு கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டணியாகும். இந்நிலையில் அமைச்சர்கள் பதவி விலக்கப்பட்டமை தொடர்பாக இக்கட்சிகளின் தலைவர்கள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்?

எனது நடவடிக்கை தவறானது என சம்பந்தனும் சேனாதிராஜாவும் தெரிவித்திருந்தனர். இந்த விடயத்தில் நான் தவறிழைக்கவில்லை என நான் அவர்களிடம் கூறியிருந்தேன். விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் பிரசன்னமாகியிருக்கும் போது சாட்சியம் வழங்குபவர். அவருக்கு எதிராக சாட்சிகளைக் கூறுவதற்கு அச்சமுறுவர் என்பதால் நான் சாட்சிகளின் மீதான நேரடியான அல்லது மறைமுகமான எந்தவொரு அழுத்தங்களையும் குறைக்க வேண்டிய நிலையிலிருந்தேன்.

இந்நிலையில் சாட்சியங்கள் மீது எவ்வித அழுத்தமோ அல்லது அவர்களை அச்சுறுத்துவதற்கான நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படாது என்பதை எழுத்துமூலம் தருமாறு நான் கேட்டேன். ஆனால் சம்பந்தன் அதனை செய்யவில்லை. இவ்வாறான எழுத்துமூல உறுதிப்படுத்தலை சம்பந்தன் தந்திருந்தால் அதனை நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். ஆனால் அவர்கள் இதில் விருப்பம் காண்பிக்கவில்லை. நான் அவர்களை விசாரணையின் போது அனுமதித்திருந்தால் சாட்சியங்களை வழங்கியவர்கள் அச்சமுற்றிருப்பர்.

எந்த அடிப்படையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக் குழுவொன்று தங்களால் விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருந் தது?

குற்றச்சாட்டுக்கள் எமது மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. நான் அதனை விசாரணை செய்திருந்தால், என்னால் மாகாண சபையின் வேறு வேலைகளைக் கவனித்திருக்க முடியாது. இதன் காரணமாகவே இரண்டு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற பொதுச் சேவை அதிகாரி ஒருவரையும் நியமித்திருந்தேன்.



இந்த அறிக்கையானது அமைச்சர்கள் ஊழல் மோசடியில் ஈடுபட்டனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதா?

இதில் சில மாற்றங்கள் உள்ளன. இந்த அமைச்சர்களுக்கு எதிராக நிதி மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போதிலும் விசாரணை அறிக்கையில் அவ்வாறான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படவில்லை. மாறாக குற்றம்சாட்டப்பட்ட இரண்டு அமைச்சர்களும் கூட்டங்களை ஒழுங்குபடுத்திய போது அதற்காக மேலதிக நிதியைச் செலவு செய்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் நிதி மோசடியில் ஈடுபடவில்லை.

ஒரு ஆண்டின் முன்னர் தற்போது ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட நான்கு அமைச்சர்களுக்கு எதிராக வும் குற்றங்கள் முன்வைக்கப்பட்டதுடன் அவர்களைப் பணியிலிருந்து விலக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்போது நீங்கள் இந்த விடயத்தில் அமைதி காத்தது ஏன்?

ஆம். ஒரு ஆண்டின் முன்னர் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந் தது. இந்த நான்கு அமைச்சர்களுக்கு எதிராகவும் 16 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருந்தனர். இவர்களுக்கு எதிராக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில் அந்த நேரத்தில் இவர்களுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் காணப்படவில்லை. இந்த நான்கு அமைச்சர்களையும் பதவி விலக்கி விட்டு புதிய அமைச்சர்களை நியமிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

ஆகவே இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்ட போது, மீண்டும் வடமாகாண சபை உறுப்பினர்களிடம் இது தொடர்பாக வினவினேன். அமைச்சர்களுக்கு எதிராக கடிதத்தை சமர்ப்பித்த 16 அமைச்சர்களில் 12 பேர் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. ஆனால் நான்கு பேர் இந்த அமைச்சர்கள் பதவி விலக்கப்படத் தேவையில்லை எனக் கூறினர். ஆகவே தொடர்ந்தும் இந்த நான்கு அமைச்சர்களும் தமது பதவிகளை வகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்களுக்கு மாகாண சபையால் வழங்கப்பட்டிருந்த வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தனவா?

முதலில், இரண்டு அமைச்சர்களிடமும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உடைமைகளைக் கையளிக்குமாறு கோரப்பட்டது. ஆனால் பின்னர், இவ்வாறு இடம்பெறக் கூடாது என நான் தீர்மானித்தேன். குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராக மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே இது தொடர்பாக தீர்மானிக்கப்படும். இதன்மூலம் இவர்களுக்கான தண்டனையைக் குறைக்க முடியும் என நான் கருதினேன். மற்றைய இரு அமைச்சர்களிடமும் ஒரு மாதத்திற்கு அதாவது விசாரணை நிறைவுறும் வரை அலுவலகத்திற்குச் செல்வதை நிறுத்துமாறு கோரியிருந்தேன்.

அவர்களுக்கான அமைச்சுச் சம்பளம் மற்றும் அலுவலக வாகனங்கள் என்பன இன்னமும் மீளப்பெறப்படவில்லை.

குற்றம் சாட்டப்பட்ட நான்கு அமைச்சர்களின் முதலமைச்சராக தாங்கள் உள்ளீர்கள். தங்களது நிர்வாகத்தின் கீழேயே இவர்கள் தவறிழைத் துள்ளனர். இது தங்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகிறதா?

எனக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டால் கூட விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கூறியுள்ளேன்.

ஏனெனில் அவற்றை எதிர்நோக்க நான் தயாராக உள்ளேன். எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் இவை தொடர்பாக
டுக்கப்பட வேண்டு

**தமிழ்த்
மூலமே
கள். ஆனால் த
தங்களுக்கும் தப
கும் இடையில்
காண்பிக்கின்றன
நிலைப்பாடு என**

அவ்வாறு
படவில்லை
வையுடன் நான்
அவர்கள் சந்தேக
வையுட இ
தேசியக் கூட்டமை
அவர்கள் கருதுகின்
எதுவுமில்லை. எமக்
ஆனால் அவர்கள்
நான் பார்க்கிறேன்.

ஆனால் நான்
நான் கட்சியின் த
வல்லை. அவர்கள்
வேறொன்றையும்
னைப் பொறுத்தள
வேறொன்றுமில்ல

**தமிழ் ம
தமிழ் பே
படுகின்றன. இ
கூறமுடியுமா?**

இது
போன்று
மக்களின் நிறுவன

**தமிழ்த்
தென்னில
டன் இணைந்து
திருத்தத் தை மு
றான ஒரு சூழலி
தென்னிலங்கைய
வதற்கு தடையாக**

நான் இது
வான பதி
மற்றும் கிழக்கில்
அவர்கள் பேசுவது
சீர்திருத்தத்தில் வ
கும்.

இவ்வாறானதெ
கருத்துக்கள் மற்று
என்பதையும் அவர்
டும். கொழும்பில் எ
களின் கருத்துகளு
நடத்தும் போது நா
கருத்துக்களை முன்

தமிழ் மக்களின்
யல் அவாக்கள்
கூட்டமைப்பின் தேர்
கூறப்பட்டுள்ளன.

ஆகவே அவர்
கூடாது. மக்களின்
கருத்துக்களை கூட்ட
நான் அதனைச் சுட்டி
உள்ளேன். இதனை
உங்களுக்கு ஒரு

**ஆங்கிலத்தில்
வழிமூலம்
மொழியாக்கம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ... எதிர்க்கவில்லை
# ...ன்றும் பேசுகிறார்கள்

**...பயில் அண்மையில் ஏற்பட்ட சில பிரச்சினைகள், தமிழ்த் ...ப்பின் தேர்தல் அறிக்கை மற்றும் தமிழரசுக் கட்சியைச் ...ல் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ...க்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்**

இவை தொடர்பாக சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலமே தாங்கள் முதலமைச்சராகினீர்கள்: ஆனால் தற்போதைய செயற்பாடுகள் தங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளதாகக் காண்பிக்கின்றன. இது தொடர்பாக தங்களின் நிலைப்பாடு என்ன?**

அவ்வாறான ஒரு முரண்பாடும் காணப்படவில்லை. ஆனால் தமிழ் மக்கள் பேரவையுடன் நான் தொடர்பைக் கொண்டுள்ளதாக அவர்கள் சந்தேகிக்கின்றனர். தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்படுவதாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால் இவ்வாறான எதுவுமில்லை. எமக்கென தேர்தல் அறிக்கை உள்ளது. ஆனால் அவர்கள் இதற்கெதிராகச் செயற்படுவதை நான் பார்க்கிறேன். இதனை நான் எதிர்க்கிறேன்.

ஆனால் நான் கட்சிக்கு எதிரானவன் இல்லை. நான் கட்சியின் தலைமைத்துவத்தை எதிர்க்கவில்லை. அவர்கள் இங்கு ஒன்றையும் கொழும்பில வேறொன்றையும் கூறுகிறார்கள். இதுவே என்னைப் பொறுத்தளவில் பிரச்சினையாக உள்ளது. வேறொன்றுமில்லை.

**தமிழ் மக்கள் பேரவையால் எழுக தமிழ் பேரணிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த அமைப்பு தொடர்பாக கூறமுடியுமா?**

இது பெரும்பாலான மக்கள் கருதுவது போன்று ஒரு அரசியற் கட்சியல்ல. இது மக்களின் நிறுவனமாகும்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தென்னிலங்கை அரசியற் கட்சிகளுடன் இணைந்து புதியதொரு அரசியல் சீர்திருத்தத் தை முன்வைத்துள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் தங்களின் செயற்பாடுகள் தென்னிலங்கையுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு தடையாக அமையுமா?**

நான் இது தொடர்பாக தங்களுக்கு தெளிவான பதிலை வழங்குகிறேன். வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள் தொடர்பாக அவர்கள் பேசுவது அவர்களுக்கென அரசியல் சீர்திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமையாகும்.

இவ்வாறானதொரு சூழலில் எமது மக்களின் கருத்துக்கள் மற்றும் அரசியல் அவாக்கள் என்ன என்பதையும் அவர்கள் நன்கறிந்திருக்க வேண்டும். கொழும்பில் எமது தலைவர்கள் எமது மக்களின் கருத்துகளுக்கு மாறாக பேச்சுக்களை நடத்தும் போது நாங்கள் அது தொடர்பான எமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

தமிழ் மக்களின் நம்பிக்கைகள் மற்றும் அரசியல் அவாக்கள் போன்றன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் தெளிவாகக கூறப்பட்டுள்ளன.

ஆகவே அவர் கள் இதற்கு எதிராக நடக்கக் கூடாது. மக்களின் கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை கூட்ட மைப்பு வெளிப்படுத்தும் போது நான் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாட்டில் உள்ளேன். இதனையே நான் செய்கிறேன். நான் உங்களுக்கு ஒரு இலகு வான உதாரணத்தைக கூறமுடியும். இன்று, 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளது. இலங்கை அரசானது எமக்கு சமஷ்டி நிர்வாக முறை மையை வழங்க மறுத்தால், அது தவறானது. ஏனெனில் நாம் இந்த நிர்வாகத்தையே விரும்புகிறோம். ஆனால் இலங்கை மத்திய அரசாங்கம் எமது எல்லா உரிமைகளையும் எமக்குத் தர மறுக்கிறது. தமக்கு மகிழ்ச்சியைத் தருவதை மட்டுமே அரசாங்கம் எமக்குத் தந்துள்ளது. இவ்விரு நிலைப்பாடுகளுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதால் நான் இதனைச் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே அவர்களுடன் நான் முரண்படத் தேவையில்லை.

**தேசிய பிரச்சினை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவிற்கு வந்துள்ளது. வெறும் வார்த்தைகளில் கூறுவது மட்டும் பயனற்றதல்லவா?**

தங்களின் கருத்து சரியானது. ஆனால் இந்த மக்களால் நீதிமன்றில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். சமஷ்டி நிர்வாகமும் ஒருமைப்பாடும் தற்போதும் நாட்டைப் பாதுகாக்கவில்லை என்பதை அவர்கள் உணரும் வரை அவர்கள் இந்த உரிமையை எமக்கு வழங்க மாட்டார்கள். இந்த நிலை மாறப்பட வேண்டும். சமஷ்டி நிர்வாக ஆட்சி எமக்கு வழங்கப்பட வேண்டும். இதனை நாம் வேறுபட்ட வார்த்தையில் கூறமுடியும். நம் கருத்தியலானது சமஷ்டியை மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டும்.

**நாட்டில் இனவாதத்தைப் பரப்புவதற்கான பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் பலர் தங்களை ஒரு இனவாதி எனவும் தாங்கள் இந்த நாட்டை அழிவிற்குள் இட்டுச் செல்வதாகவும் பேசுகிறார்கள். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?**

அவர்கள் என் மீது இவ்வாறான முத்திரையைக் குத்தினால் அதற்கு என்னால் என்ன செய்ய முடியும்? எனது இரண்டு பிள்ளைகளும் சிங்களவர்களைத் தான் திருமணம் செய்துள்ளனர். நான் கூட கொழும்பில் பிறந்து வளர்ந்தேன். இதன் பிறகும் நான் எவ்வாறு ஒரு இனவாதியாக மாறமுடியும்? இதிலிருந்து நான் எதனை அடைந்து கொள்ள முடியும்? இது முட்டாள்தனமான பேச்சாகும்.

| | | |
|---|---|---|
| ஆங்கிலத்தில் | – | Malik Chaminda Dharmawardana |
| வழிமூலம் | – | Daily news |
| மொழியாக்கம் | – | நித்தியபாரதி |

# ஆறாத ரணங்களுடன் நவாலிப் படுகொலை

## 22ஆவது ஆண்டு நிறைவு இன்றாகும்



**செ.ரமேஷ்**

தமிழர் வரலாற்றில் மக்களால் ஜீரணித்துப் பார்க்க முடியாத படுகொலை என்றால் அது நவாலி படுகொலையாகும்.

இப்படுகொலையின் 22 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

ஆலயத்தில் தஞ்சமடைந்த வேளையில் 13 குண்டுகளுக்கு 147 பேர் சாவடைந்த கோரமான தினத்தின் நினைவுநாள். 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற நவாலித் தாக்குதல் சம்பவத்தை தமிழர்கள்ஒருபோதும்மறக்கமாட்டார்கள்.

முன்னாள் அரசாட்சியாளர்களின் பணிப்புரையின் பேரில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின் 147 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை நாம் ஒரு கணம் மீண்டும் மீட்டுப்பார்க்கின்றோம். இந்தக் கொடுமையான நவாலி சென் பீற்றேர்ஸ் ஆலய உயிரிழப்பு சர்வதேச சமூகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் தமிழ் மக்களைச் சொல்லொணாத் துயரத்துக்கும் இட்டுச் சென்றது. கடந்த 1995 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களின் வரலாற்றில் நவாலியில் இரத்த ஆறு ஓடிய ஒரு கோரமான கொடிய நாள் ஜூலை 9 ஆம் திகதியாகும்.

அன்று நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலய மற்றும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் (சின்னக்கதிர்காமம்) ஆலயம் என்பவற்றின் மீதான விமானத் தாக்குதலில் அப்பாவிகளாக 147 பேர் காவு கொள்ளப்பட்டனர். வலிகாமம் முழுவதும் இடம்பெற்ற வான் தாக்குதலால் அந்தப் பகுதி முழுவதும் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில் மாலை நேரத்தில் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்த தருணத்தில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை அது வடமாகாணத்தின் நவாலியூர் வரலாற்றில் இந்த இரத்தக் கறை படிந்த நாளில் நிகழ்ந்த உயிரிழப்புக்களை தமிழினம் ஒருபோதும் மறக்காது.

மறக்க முடியாது என்று அன்றைய நிகழ்வையொட்டி லண்டன் பி.பி.சி. தமிழோசை செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. முன் னோக்கிப் பாய்தல் எனப் பெயரிடப்பட்ட லீப் போர்வேர்ட் இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியிலிருந்தும் மிகக்கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு, வலி. தெற்கு, வலி.வடக்கு பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், பொது, நிலையங்கள், அரச மற்றும் பொது நிறுவனங்கள் நோக்கி காலை 5.20 மணியில் இருந்து விமானத் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் சரமாரியாக நடத்தப்பட்டன.

இந்த வேளையில் சகல வீதிகளிலும் உலங்கு வானூர்திகளின் தாக்குதல் மற்றும் அகோரமான ஷெல் தாக்குதல்களினால் வீதிக்கு வீதி காயப்பட்டவர்கள், இறந்தவர்கள், காயமடைந்து இரத்தம் சிந்திக் கொண்டிருந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வாகனங்கள் கூட இல்லை. வாகனங்களை இயக்குவதற்கு எரிபொருட்களும் அற்ற பொருளாதாரத் தடையால் பெருமந்தமான காலப்பகுதி அது.

இந்த நேரம் காயமடைந்தவர்கள் ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டாலும் அவர்களைக் காப்பாற்ற மருந்தகங்களோ வைத்தியசாலைகளோ இயங்க முடியாத அவல நிலை.

வைத்தியசாலைகளிலும் மருந்துகளோ வைத்தியர்களோ காணப்படாத சூழல் நிலவியது. இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் நாம் மறக்க முடியாது. அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் நவாலி சென். பீற்றேர்ஸ் ஆலயத்திலும் நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறி அசதியால் படுத்துறங்கினர்.

இந்த வேளையில் யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து தொடர்ச்சியாக 13 குண்டுகள் தான்தோன்றித்தனமாக மக்கள் ஒன்றுகூடியிருந்த மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசப்பட்டன. அவ்வளவு தான் நவாலி கிராமம் ஒரு கணம் அதிர்ந்தது. வீதிகள் தடைப்பட்டு. மரங்கள் முறிந்து வீழ்ந்து வீடுகள் தரைமட்டாக்கி, மதில்கள் வீழ்ந்து பெரிய புகைமூட்டம் உருவானது. நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயமும் ஆலயமும் மாலை 5.45 மணியளவில் அதிர்ந்தன. முற்றாக அழிந்து சிதைந்தன.

சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். இந்த நிகழ்வில் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, உடல் சிதறி, குற்றுயிராகக் கிடந்த மக்களை எம்மால் இலகுவில் மறந்துவிட முடியாது.

சுமார் 360 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பயனளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி உயிரிழந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அன்றைய தாக்குதலில் பொது மக்கள் சேவையில் பங்கு கொண்ட வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த நவாலி வடக்கு கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராசா, சில்லாலை பிரிவு சிரேஷ்ட பிரிவு கிராம அலுவலரான பிலிப்பிள்ளை கபிரியேல் பிள்ளை ஆகியோர் சேவையின் போது ஸ்தலத்தில் சாவடைந்த அரச சேவையாளர்கள் ஆவர். அன்றைய தினம் மக்கள் தொண்டுப் பணியில் ஈடுபட்டு உணவு, குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்தந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்ததை மறக்கமுடியாது.

இதனை நினைவுகூரும் முகமாக இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நவாலி சென்.பீற்றேர்ஸ் திறந்த வெளி அரங்கிலும் நவாலி ஸ்ரீ சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்திலும் ஆலய பிரதம குரு சிவத்திரு மாரிமுத்து பத்மநாதன் தலைமையில் காலையிலும் மாலையிலும் விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியிலும் நவாலி சென்.பீற்றேர்ஸ் ஆலயப் பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜூலை 9 ஐ தமிழர் தேசம் என்றும் மறந்திடாத சோக தினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

# ஊழ்வினை உறுத்தும்

இப்பலாம் தப்பு பண்ணமா இருக்குறது தான் ரொம்ப தப்பு தேவா! ஏன்ன ரொம்ப நல்ல வனாயிருந்த பொய்யா நடிகிறானு சொல்றாய்ங்க நல்ல வனா இருந்தா சில விடயத் துக்கு பயபடனும் ஆன கெட்ட வனா இருந்தா எதுக்கும் பயப்படத் தேவயில்ல.

கடைசியா ஒன்னு சொல் றேன் நூறு வருஷம் நல்ல வனா வாழ்ந்து கஷ்டபடுற துக்கு ஒரு நாள் கெட்டவனா கெத்தா வாழ்ந்து செத்துரலாம் என போதனையை முடித்த துறவியை போல பெருமூச்சு விட்டான் சித்தார்த்.


தேவனின்மௌனம்தொடர்ந்து நீடித்தது அந்த மௌனம் சம்மதத்திற்கான அறிகுறி யாக தெரியவில்லை ஆனால் சரியென்று கூறினான். அதை கேட்டு ஞானம்பெற்றவன்போல துள்ளி குதித்தான்.

இது தப்பு இருந்தாலும் உனக்காக நம்ம நட்புக்காக என்றான் தேவன்.

அந்த நாளும் வந்தது. அதே பூங்கா நடையாளர்கள் வரவு குறைந்திருந்தது. சரியாக மாலை ஆறு மணி இருக்கும் இருட்ட தொடங் கியது.

இரண்டு நபர்கள் மட்டும் தான் அவர்களை எளிதாக சமாளித்துவிடாலாம் என்று வைரத்தை கடத்தபோகும் ஏரியின் புதர் மண்டிய இடத்தை காட்டினான் சித்தார்த். அங்கு தான் இருவரும் சந்திப்பார்கள் என்று உறுதியாக கூறினான். இருவரும்பிரிந்து சென்று மறைந்தார்கள்.

பணப்பெட்டியும் வைரத்தை வைத்திருக்கும் பையையும் இருவரும் பரஸ்பரம் மாற்றி கொள்வார்கள். பணப்பெட்டியை வைத்திருப் பவனை நீ பார்த்துக்கொள் இன்னொருவனை நான் பார்த்துக்கொள் கிறேன் என்று முடிவு செய்தார்கள். பொருள் இடம் மாறியது கைக்குலுக்கி



பிரியும் போது சட்டென ஒரு சத்தம் வைரபையை வாங் கியவன் சுருண்டு விழுந்தான் இரண்டு பையையும் களவாடி ஓட்டம் பிடித்தான் இன்னொருவன்.

இருவருக்கும் பேரதிர்ச்சி இருந்தும் முடிவில் மாற்ற மில்லை. போட்டிக்கு ஒருத்தன் மட்டும் தான் என்று இருவரும் அவன் மீது பாய்ந்து அவன் முகவாய் கட்டையை பதம் பார்த் தார்கள்.

இருவரும் ஆளுக்கொரு பையை எடுத்து கொண்டு நடந்தார்கள் "தப்பித்தோம்" என்று நினைத்து கொஞ்சம் நடையின் வேகத்தை குறைத் தார்கள். ஆனால் விதி வலியது அல்லவா! கடத்தல்காரனை சுருண்டு விழ செய்தவன் வேகாமாக தாவி தேவன் மீது விழுந்தான். உடனே சுதாரித்து பையை சித்தார்த்திடம் தூக்கி போட்டான்.

சித்தார்த் தடுக்க வரும்போது முகவாய்கட்டையில் அடிவாங் கியவன் வலி தாங்காமல் ஓடி வந்தான் அவனை பார்த்து இவன் ஓட்டம் பிடிக்க அவனை துரத்தி கொண்டு இவன் ஓடினான். இப்போது வசமாக தான் மாட்டிக்கொண்டான் தேவன்.

இந்தா உன் நண்பனுக்கு போன் போட்டு வர சொல்லு! பொருளோட" என்றான் பொலிஸ் காரன். ஆம் அவன் பொலிஸ் காரன் தான் இங்கு நடக்கும் பல விளையாட்டுகளில் சில விளையாட்டுகள் அவன் விளை யாடியது தான். பாவம் அவர்களும் என்ன தான் செய்வார் கள். அரசு கொடுக்கும் சொற்ப சம்பளம் பத்துமா!.

அழைப்பை ஏற்று கொண்ட சித்தார்த் டேய் ! தப்பிச்சிட்டுயா எங்க இருக்க என்று படபட வென பொறிந்தான்.

பொலிஸ்காரன் குறுக்கிட்டு அவன் என்கிட்ட தான்டா இருக் கான் ஒழுங்கு மரியாதையா அத கொடுத்துரு இல்ல உன்நண்பன் என் கையால செத்துருவான்.

எதிர்முனையில்பதில்இல்லை மறுபடியும் கேட்டபோதும் நீண்ட அமைதி சட்டென சாரிடா நண்பா என்று துண்டித்தான்.

அந்த பதிலை இருவருமே எதிர்பார்க்கவில்லை. பொலிஸ் காரனுக்கு கோபம் தலைக் கேறியது. அவனுக்கு ரொம்ப தான் பேராசை என்று துப் பாக்கியை அவன் மார்பில் அழுத் தினான். மறுபடியும் சித்தார்த்தை அழைத்தபோது முற்றிலுமாக அணைக்கப்பட்டிருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1126

Search for people, places and things Nagendram Home

### முத்துச்சாமி கஜரூபன்




### கிருசன்




### நிரோசன் நிரோ




### கோபுராம்




### கோகில் கோகுலன்





### கேதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டோனியின் மறக்க முடியாத 7 இன்னிங்ஸ்கள்



எம்.எஸ்.டோனி... இவரை இந்தியாவின் தலைசிறந்த கப்டனாக மட்டும்தான் தெரியும். ஆனால், அவர் நல்ல பட்ஸ்மேன், சிறந்த விக்கெட் கீப்பர்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஜொலித்த விக்கெட் கீப்பர் பட்ஸ்மேன்களை விரல்விட்டு எண்ணி விடலாம். டோனி அதில் முக்கிய மானவர்.

ஐ.சி.சி. பட்ஸ்மேன் தரவரிசையில் அவர் முதலிடத்தில் இருந்தது அதற்குச் சான்று. ஹெலிகொப்டர் ஷொட்டின் பிதாமகனான டோனியின் சிறந்த 7 இன்னிங்ஸ்களைப் பார்ப்போம்.

**இலங்கைக்கு எதிராக 183* 2005**

2005இல் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் முதல் இரண்டு ஆட்டங்களை வென்று முன்னிலையில் இருந்தது இந்தியா.

மூன்றாவது ஆட்டத்தில் ஜெயவர்தனே சதத்தின் உதவியுடன் 298 ரன்கள் அடித்தது இலங்கை. இது அந்தக் காலகட்டத்தில் சவாலான இலக்கு.

இந்த இலக்கை ஒற்றை ஆளாக சேஸ் செய்தார் டோனி. முதல் விக்கெட்டிற்குப் பிறகு இறங்கிய டோனி 183 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவரது கிரிக்கெட்டின் தொடக்க காலத்தில் ஆடிய இந்த இன்னிங்ஸ் தான் அவரை யாரென்று உலகுக்குக் காட்டியது.

இதுதான் இன்றுவரை ஒரு நாள் போட்டிகளில் ஒரு விக்கெட் கீப்பர் பட்ஸ்மேன் அடித்த அதிக பட்ச ரன்கள். இப்போட்டியின் நடுவில் அவர் காயமடைந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாது விளையாடியது பாராட்டுக்குரியது.

**அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 44*, 2012**

இந்த மேட்ச் இன்னும் நன்றாக நினைவில் இருக்கிறது. கொமன்வெல்த் பேங்க் தொடரின் 4வது ஆட்டத்தில் இந்தியாவுடன் மோதிய அவுஸ்திரேலிய அணி 271 ரன்களை இலக்காக வைத்தது.

பின் ஆடிய இந்திய அணி கவுதம் கம்பீரின் பொறுப்பான ஆட்டத்தினால் 178-4 என்ற நிலையில் இருந்தது. அந்தச் சூழலில் வெற்றி கடினமான விடயமாக இருந்தது.

தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் தன் விக்கெட்டை இழக்காமல் நிதானமாக ஆடிய டோனி, கிளின்ட் மெக்கே வீசிய கடைசி ஓவரில் 13 ரன்கள் அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார்.

**அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 124, 2009**

7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுடன் மோதியது இந்தியா. முதல் போட்டி தோல்வியினால் பின்தங்கியிருந்த நிலையில், வெற்றி நெருக்கடியில் களமிறங்கியது இந்திய அணி. நாக்பூரில் நடந்த இப்போட்டியில் 107 பந்துகளில் 124 ரன்கள் எடுத்து அவுஸ்திரேலிய பௌலர்களைத் திணறடித்தார் டோனி. இதனால் இந்தியா 355 என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது. பின் ஆடிய அவுஸ்திரேலியா 99 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ஆட்டநாயகனாக டோனி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இலங்கைக்கு எதிராக 91, 2011**

2011 உலகக்கோப்பை இறுதிப் போட்டியை யாரால் மறக்க முடியும்?. 275 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணி முதல் ஓவரிலேயே சேவாக்கை இழந்தது. சிறிது நேரத்தில் சச்சினும் அவுட் ஆக கவுதம் கம்பீரும் ஹோலியும் பொறுப்பாக ஆடினர். ஆனால் ஹோலி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. திணறியது இந்தியா. யுவராஜ் இறங்குவார் என எதிர்பார்த்த வேளையில், திடீரெனக் களம்புகுந்தார் டோனி. உலகக் கோப்பை இறுதியில் கப்டனுக்கே உரிய பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

கப்டன் இன்னிங்ஸ் ஆடிய டோனி 91 ரன்கள் அடித்து 28 வருடங்களுக்குப் பிறகு கோப்பையையும் வென்று கொடுத்தார். அந்த வின்னிங் ஷொட் சிக்ஸரும், ரவி சாஸ்திரியின் வர்ணனையும் இன்னும் நினைவில் நிழலாடுகிறது.

**இலங்கைக்கு எதிராக 45, 2013**

மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த இந்தியா - இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான முத்தரப்புத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவும் இலங்கையும் மோதின. முதலில் ஆடிய இலங்கை அணி 202 என்ற இலக்கை நிர்ணயித்தது. ஆனால், பட்டிங்கில் சொதப்பியது இந்திய அணி. சொற்ப ரன்களில் வீரர்கள் அவுட் ஆன நிலையில் டோனி மட்டும் விக்கெட்டை இழக்காமல், கடைசி ஓவர் வரை நின்று அணியை வெற்றிபெற வைத்தார்.

கடைசி ஓவரில் 15ரன்கள் தேவைப்பட்டது. 9 விக்கெட்டைகளை இழந்திருந்தது இந்தியா. இருப்பினும் கடைசி ஓவரில் இஷாந்த் ஷர்மாவை மறுமுனையில் வைத்துக்கொண்டு நாலே பந்துகளில் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தித் தொடரை வென்று கொடுத்தார் டோனி.

**அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 224, 2013**

இதுதான் டோனியின் சிறந்த டெஸ்ட் இன்னிங்ஸ் என்று கண்ணைமூடிச்சொல்லலாம் சென்னை சேப்பாக்கத்தில் அவுஸ்திரேலியாவுடன் மோதியது இந்திய அணி. முதல் இன்னிங்சில் கிளார்க்கின் சதத்தின் உதவியுடன் 380 ரன்கள் குவித்தது அவுஸ்திரேலியா. பின் ஆடிய இந்தியா ஒரு நல்ல தொடக்கத்தைப் பெற்று 196 ரன்களில் இருந்தபோது சச்சினை இழந்தது.

ஆறாவது பட்ஸ்மேனாக களமிறங்கினார் டோனி. ஹோலி, டோனி பார்ட்னர்ஷிப் 128 ரன்கள் குவித்தது. பின்பு ஹோலி அவுட்டாக புவனேஸ்வர் குமார் களமிறங்கினார். முதல் டெஸ்டில் பதற்றத்துடன் ஆடிய அவருக்கு அதிக பந்துகள் தராமல் நேர்த்தியாக ஆடினார். இருவரும் சேர்ந்து 140 ரன்கள் அடித்தனர். இதில் பெரும்பான்மையானவை டோனியின் ரன்கள்.

இறுதியில் 224 ரன்கள் அடித்த டோனி, இந்தியா முதல் இன்னிங்சில் 572 ரன்கள் எடுக்க உதவினார். இரண்டாவது இன்னிங்சில் இந்தியாவின் சூழலில் சிக்கிய அவுஸ்திரேலிய அணி 241 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. 50 ரன்களை இலக்காகக்கொண்டு ஆடிய இந்திய அணி சுலபமாக வென்றது. இதுதான் டோனி சர்வதேச டெஸ்ட்களில் அடித்துள்ள ஒரே இரட்டைச் சதம்.

**இங்கிலாந்துக்கு எதிராக 76*, 2007**

இங்கிலாந்து மண்ணில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதியது இந்திய அணி. லார்ட்ஸ் டெஸ்டில் முதலில் பட் செய்த இங்கிலாந்து 298 ரன்கள் எடுத்தது. இந்திய அணி 201 ரன்களில் சுருண்டது.

இரண்டாவது இன்னிங்சில் கெவின் பீட்டர்சனின் 134 ரன்களின் உதவியுடன் 282 ரன்கள் எடுத்தது இங்கிலாந்து. 382 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணி 145/5 என்ற நிலையில் திணறிக்கொண்டிருந்தது.

இன்னும் 80 ஓவர்கள் இருந்த நிலையில் வந்த டோனி தனது நிதானமான 76*(159) ஆட்டத்தால் போட்டியை சமனிலை செய்தார். இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் 1-0 என டெஸ்ட் தொடரை வென்று வரலாறு படைத்தது இந்தியா. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: மன்னாதி மன்னன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன், ராமமூர்த்தி
பாடல் : கண்ணதாசன்
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்



அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா
தாயகம் காப்பது கடமையடா (அச்சம்)

கனகவிஜயரின் முடித்தலை நெறித்து
கல்லினை வைத்தான் சேர மன்னன்
இமய வரம்பினில் மீன்கொடி ஏற்றி
இசை பட வாழ்ந்தான் பாண்டியனே (அச்சம்)

கருவினில் மலரும் மழலையின் உடலில்
தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை
களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்
காத்திட எழுவான் அவள் பிள்ளை (அச்சம்)

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காப்போர்
சரித்திரம் தனிலே நிற்கின்றார் (அச்சம்)

# உங்கள் மாதப்பலன் எப்படி?

பொதுவாக இந்த மாதத்தில் பிறந்தவர்கள், மிகுந்த மனவலிமை பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் மற்றவர்கள் இவர்களைத் தவறாகவே புரிந்து கொள்வார்கள்.

சிந்தனையாளர்களாகவோ தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தகுந்த காரணம் காட்டுபவர்களாகவோ பெரிய அலுவலகங்களில் தலைமைப் பதவி வகிப்பவர்களாகவோ அரசாங்கத்தில் பொறுப்புள்ள வேலைகளில் இருப்பவர்களாகவோ இவர்கள் இருப்பார்கள்.

மற்றவர்கள் சொல்லுவதைக்கேட்டு அதன்படி நடப்பதோ மற்றவர்களுக்கு அடிமையாக இருப்பதோ இவர்களுக்குச் சிறிதும் பிடிக்காது. எதையும் தாமாகவே சிந்தனை செய்து மிகத் தெளிவான, நல்ல முடிவுக்கு வருவார்கள். மற்றவர்களால் இவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம்.

எந்தச் செயலில் இவர்கள் இறங்கினாலும் இவர்கள் அவற்றைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். தலைமைப் பதவிக்குப் போராடி அது கிடைக்காவிட்டால் அடியோடு அந்த வேலையை இவர்கள் உதறித் தள்ளுவதுடன் அதில் சிறிதும் அக்கறை கொள்ளவும் மாட்டார்கள்.

இயற்கையாகவே இவர்கள் எல்லா வழிகளிலும் மாறுபட்டவர்களாகவே இருப்பார்கள். அன்பு காட்டுவதிலும் சரி, கடமையைச் செய்வதிலும் சரி, சமுதாயத்தில் தங்களுக்குரிய ஒரு நிலை ஏற்படுத்திக் கொள்வதிலும் சரி, இவர்களுடைய செயல் புதுமையாகவும் வியக்கத்தக்கதாகவும் மாறுபட்டும் அமையும். ஆகையால் இவர்களுடைய பழக்க வழக்கங்கள், பேச்சுக்கள், செயல்கள் எல்லாமே சுற்றுப் புறத்தில் உள்ளவர்களுடன் ஒப்பிடும்படி அமையாது.

மதத்தில் இவர்களுக்குப் பற்று இல்லாவிட்டாலும் ஆழ்ந்த பக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் மற்றவர்களுக்கு நல்லதையே செய்வார்கள். பொதுவாக இவர்கள் மக்களுக்கென்று, சமுதாயத்துக்கென்று, நாட்டுக்கென்று நல்லதைச் செய்யவே அதிகம் பிரியப்படுவார்கள். தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு நன்மை செய்வதில் அவ்வளவு ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

இவர்கள் பொதுவாக நல்ல பேச்சாளர்களாக இருப்பார்கள். அடுக்குமொழியில் பேசத் தெரியாவிட்டாலும் இலக்கியவாதிபோல் பேசத் தெரியாவிட்டாலும் மிகத் தெளிவாகவும் மிக எளிய மொழியிலும் பேசி மிக எளிதில் மற்றவர்களுக்குப் புரிய வைக்கும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. தாம் எண்ணுபவற்றை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய எதையும் மிகத் துணிவுடன் சொல்லுவார்கள்.

## டிசெம்பர் 21-ஜனவரி 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

அவர்கள் பேசத் தொடங்கினால் முடிவு இவர்களுக்கே பலனுள்ளதாகவே முடியும். தன் வழிக்கு மற்றவர்களைத் திசை திருப்பவே இவர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லலாம்.

இவர்கள் செயலை மற்றவர்கள் எப்போதும் மிகத் தவறாகவே புரிந்து கொள்வதால் இவர்கள் நேரிடையாகவே பலருக்கு எதிரிகளாகி விடுகிறார்கள்.

ஆனால் இவர்கள் எப்போதுமே தமது பொறுப்புக்களை உணர்ந்து அவற்றில் முடிந்த கவனம் செலுத்துவார்கள்.

(தொடரும்)

# குழந்தைச் செல்வம் (உருவகம்)

அன்பானவர்களே...

இனிய ஞாயிறு வணக்கம். திரும்பின பக்கமெல்லாம் கோயில் மணியும் மைக்கில மந்திரங்களும்...ஒரே பக்தி மயம். பெரியவர் வீட்டில எப்பவுமே மரக்கறிச் சாப்பாடுதானே. நானும்...என்ன யோசிக்கிறியள்...நான் தான் ஜிம்மிக்குட்டி. ஓம் ...நானும் பிறவிச் சைவம்தான். லாதாக்குட்டியும் இண்டைக்கு முழுகினவா. அதுதான் வெயிலுக்கை விளையாடக் கூடாது எண்டு கொட்டிலுக்கை சின்னப்பிள்ளையளோட சேர்ந்து விளையாட்டுச் சோறு, கறி செய்து விளையாடுறா. குட்டிச் சட்டி பானை, குட்டிக் கரண்டி, கொஞ்சம் சம்பா அரிசி, தேங்காய்ப்பால், தக்காளிப்பழம், வெங்காயம், கறிவேப்பிலை எண்டு வெள்ளைச்சோறும் தக்காளிச் சொதியும் சமைக்கினம். வாயூறுது. நல்ல வாசம்...தாய்க்காரி உதவி செய்யிறா. நெருப்பெல்லே பயம்தானே...ம்...நானும் அதிலை தான் இருக்கிறன். சின்னப் பிள்ளையளின்ர உலகமே தனிதான். குட்டிக் கிண்ணியளுக்குள்ளை சோறும் சொதியும் போட்டு எல்லாருக்கும் குடுக்கினம்...பெரியவர் அச்சா அச்சா எண்டு சாப்பிடுறார். என்ர கிண்ணிக்குள்ளையும் போட்டு என்னைக் கூப்பிட்டு முன்னாலை வைக்கினம். நாவூறு படக் கூடாது. தங்கக் குஞ்சுகள்... செல்லங்கள்... சந்தோசமா விளையாடினம்.

கேற் திறந்து சத்தம் கேக்குது. ம்...ம்... கேற்றுக்கு மேலாலை தலை தெரியுது. இராசம்மாக்கா வாறா... நல்ல நெடுமி... சடக்குச் சடக்கெண்டு நடப்பா. கிழமைக்கொருக்கா வந்து வளவு கூட்டிக் குப்பை அள்ளுவா. புல்லுப் புடுங்குவா. பெரியவர் திரும்பிப் பார்த்துத் தலையாட்டுறார். பிள்ளையள் கொட்டின தேங்காய்ப்பூவை முறைச்சுப் பாக்கிறா...

“என்ன பிள்ளையள் இப்பிடியே குப்பைப் பழக்கம் பழகிறது. ஒரே கஞ்சலும் குப்பையும். என்னய்யா நீங்கள் இதுகளோடை உங்கடை பேர்த்தியை ஏன் பழக விடுறியள். மூஞ்சையளும் உடுப்பும்... குப்பத்திலை, சேரியிலை இருந்து வந்ததுகள் போலை சீக்...” முகத்திலை கடுகு வெடிக்குது...

ம்...ம்...பிரளயமும் சுனாமியும் சேர்ந்து வரப் போகுது...பெரியவர் எழும்புறார். கையைக் கழுவிப் போட்டுக் கதிரையை இழுத்துப் போட்டு இருக்கிறார்... சரியே கதை...வயிரவா காப்பாத்து!

“இராசம்மா...விளக்குமாத்தை அங்காலை வைச்சிட்டு இஞ்சை வா...நீ.... ஆர்...? கூட்டப் பெருக்க வந்த ஆள்தானே. எதுக்கு தேவையில்லாமல் குழந்தையள் [illegible]திலை மூக்கை நுழைக்கிறாய். பிள்ளையள் கடவுளின்ர செல்வங்கள்... உனக்கு அதுகளைப் பார்த் தால்... குப்பமும் சேரியும் தெரியுதோ...? இந்தக் காலத்திலை அது...அப்படி ஒரு இடம் இருக்கோ...நீ கூட இப்ப வீட்டுத் திட்டத்திலை கல்வீடு கட்டிக் கொண்டிருக்கிறாய். பிள்ளைகளோடு பதவிசா, பண்பா, கரிசனையா நடக்க முதலிலை பழகு. பிழையெண்டு கண்டால் அன்பாகச் சொன்னால் அதுகள் கேட்கும்... குஞ்சுக் கையால கூடாஞ்சோறு காய்ச்சி எங்களுக்கும் தந்து சந்தோசப்படுத்துதுகள். நீயும் வாங்கிச் சாப்பிடு...ம்...சொல்லிப் போட்டன்... ஓ...இப்பிடிக் கதைக்கிறது இதுதான் கடைசித் தடவை...ம்...போய் வேலையைப் பார்...”

கடவுளே...என்ன மாதிரிப் படிப்பிக்கிறார்...பெரியமனிசர் பெரிய மனிசர்தான்...ம்...இராசம்மாக்கா பெட்டிப் பாம்பா அடங்கிவிட்டா... வந்தா வந்த வேலையை பாக்கிறது தானே...தனக்கும் ஏதோ நிறையத் தெரியும் எண்ட நினைப்பு...

லதாக்குட்டியின்ர அப்பா கனக்கச் சாமான்களோடை வாறார். லதாக்குட்டி ஓடிப்போய் தானும் ஒரு பையை வாங்கித் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வாறா...

“என்னதம்பி...கடலை, கௌபி, பயறு [illegible] கூடவா வாங்[illegible] ஐயா... ஒரு முழுநேரச் சாப்பாடாக் கொடுக்க வேணும். சும்மா இடை நேரங்களிலை கொறிக்கிற மாதிரிக் கொடுக்கிறதிலை பெரிய பிரயோசனமில்லை ஐயா...”

மகன் வந்து திண்ணையிலை இருக்கிறார். பிள்ளையின்ரை கைச் சமையலை ருசிச்சுச் சாப்பிடுறார். பிள்ளைக்கும் ஒரு வாய் ஊட்டி விடுகிறார்...ம்...பாத்தியளே பாசத்தை... இந்தப் பிள்ளைக்கு கண் கலங்கினால் எப்படித் தாங்க முடியும்...ம்...

“தாத்தா...தானியங்களை அவிச்சு உப்புப் போட்டுத் தேங்காய்ச் சொட்டும் சீவிப் போட்டுச் சாப்பிடுறது தான் நல்ல முறை எண்டு சொன்னனீங்களல்லோ....”

ம்...ம்.... பிள்ளை டாக்குத்தராகத் தான் வரும். விளக்கத்தைப் பாத்தியளே... குழந்தைக்கு விளங்குது... ம்.... பெரியவைக்கு... விளங்குதில்லையே...ஓ... ருசி கேக்குது போல... பெரியவர் விளக்கப் போறார்... குஞ்சுகள் சுத்தி வந்து நிக்குதுகள் இராசம்மாக்காவும் குப்பை அள்ளுற மாதிரி நிண்டு கேக்கிறா.... “ஓமடா செல்லக் குட்டி. எண்ணெய் விட்டு மிளகாய் சேர்த்துத் தாளிச்சுக் கொட்டினால் எண்ணெய்ச் சத்து அதிகமாய் சேருது... ஏற்கனவே மற்ற உணவுகளிலும் எண்ணெய் சேருதுதானே.... பூ மாதிரிக் கடலை அவிஞ்சு வெடிச்சு ஊட்டச்சத்தோடை இருக்க எண்ணெய்ச் சட்டியில் பிரட்டி எடுக்கிறது நல்லதில்லை. வளரும் குழந்தைகளுக்கு சத்து முழுமையா ஒரு நேரச்சாப்பாடாக் கிடைக்க வேணும்... இடை நேரங்களிலை இது மேலதிக பூரதத்தைக் கொடுக்க அது மேல் மிச்சம் தானடா”

அமைதியா விளக்கமாச் சொல்லுறார். பிள்ளையும் விட்டபாடில்லை.

“தாத்தா ... இலைக் கஞ்சி ஒரு கப் இருபது ரூபா எண்டு அப்பா ஆயுர்வேதக் கிளினிக்கிலை எனக்கு மட்டும் வாங்கித் தந்தவர்... நல்ல ருசி தாத்தா... முழுக்கக் குடிச்சிட்டன்...” பாத்தியளே... சில பிள்ளையள் இலைக் கஞ்சியைக் கண்டால் ஓடி ஒளியுதுகளாம்... சத்தி வருதாம். ம்... பெரிய படம் தான்... ம்... தாத்தாவும் பேத்தியும் ஏதோ கதைக்கினம்...


“குட்டியம்மா... நான் காலையிலை நடக்கப் போறனான் தானே. நடந்து போய் இலைக் கஞ்சியையும் காசு கொடுத்து வாங்கிக் குடிச்சுப் போட்டுத் திரும்பி நடந்தே வந்திருவன்... நடைக்கு நடையுமாகுது...சத்துக்கு கஞ்சியுமாகுது... இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளில் நாங்களும் இலைக் கஞ்சி காய்ச்சுவம். எல்லா மூலிகைகளும் எங்கடை வீட்டுத் தோட்டத்திலேயே இருக்குது தானே...” ம்... அருமையான குடும்பம். அருமையான பராமரிப்பு. இஞ்சையெல்லாம் பிள்ளையள ஒருத்தரும் அடிக்கிறேல்லை. பெரிசாப் பேசியதும் இல்லை... அன்பும் கண்டிப்பும் போதும். அடிதடிக்கு வேலையே இல்லை. சரி சரி...நாளைக்கு விடியக் கடலையாம்... கதைச்சுக் கேட்குது... தாளிக்காமல்தானாம்... பெரியவை வேணுமெண்டால் பொரிச்ச மிளகாயைக் கடிக்கட்டும். ஆனால் வயிறு எரியும்...சொல்ல மட்டும்தான் எங்களுக்கு முடியும்... கேட்கிறதும் கேட்காததும் உங்கடை இஷ்டம். சரி போட்டு வாறன்.

பாரதி கணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனங்கள்

# இவன் தந்திரன்



தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் மிகப்பெரும் பிரச்சினை படித்த இளைஞர்களுக்கு சரியான வேலை கிடைக்காதது தான். அதிலும் குறிப்பாக இன்ஜினியரிங் படித்த மாணவர்கள் இலட்சக்கணக்கானோர் வேலையில்லாமல் இருக்க, அவர்களின் வாழ்க்கையை ஏற்கனவே வேலையில்லா பட்டதாரியில் காட்டியிருந்தாலும், தற்போது கௌதம் கார்த்திக், ஆர்.ஜே. பாலாஜி நடிப்பில் இயக்குனர் கண்ணனும் தன் பாணியில் இன்ஜினியரிங் மாணவர்களின் வாழ்க்கையை காட்டியுள்ள படம் இவன் தந்திரன். வி.ஐ.பி வெற்றி இதற்கும் கிடைத்ததா? பார்ப்போம்.

கௌதம் கார்த்திக், ஆர்.ஜே. பாலாஜி ரிவர்ஸ் இன்ஜினியரிங்கில் புகழ் பெற்றவர்கள். அதாவது ஒரு பொருளை அதேபோல் அப்படியே செய்வதில் வல்லவர்கள். ஒரு நாள் மந்திரி வீட்டில் கமரா செட் செய்ய போகிறார்கள்.

அதற்கான சம்பளத்தைக் கொடுக்காமல் அலைய விடுகிறார்கள். இதனால் அந்த மந்திரியை ஏதாவது செய்ய வேண்டும் என்று இருவரும் பிளான் செய்கிறார்கள்.

அந்த நேரத்தில் தான் மந்திரி பல இன்ஜினியரிங் கல்லூரிகளின் லைசன்ஸை இரத்து செய்து, அவர்களிடம் பணம் பறிக்கின்றார்.

மந்திரிக்கு பணத்தை அள்ளிக் கொடுத்துவிட்டு மாணவர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கின்றது கல்லூரி நிர்வாகம். இதனால் ஒரு மாணவன் இறக்கும் நிலை உருவாகின்றது. இதை நேரில் கண்ட கௌதம் கார்த்திக் எப்படி அந்த மந்திரியின் சதி திட்டத்தை வெளி உலகிற்கு கொண்டு வருகிறார் என்பதே மீதிக்கதை.

கௌதம் கார்த்திக்கிற்கு தற்போது தான் கொஞ்சம் நல்ல காலம் ஆரம்பித்திருக்கிறது போல. ரங்கூனை தொடர்ந்து இந்த படத்திலும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். நடிப்பு என்பது தானே அனைத்து காட்சியையும் இழுத்து போட்டு நடிப்பது இல்லை, தனக்கு வராததை அடுத்தவர்களை செய்யவிட்டு நாம் ஒதுங்கி நிற்பதும் புத்திசாலித்தனம் தான் என்பதை கௌதம் உணர்ந்துள்ளார்.

ஷ்ரத்தா தனக்கான கதாபாத்திரத்தில் அழகாக நடித்துள்ளார். கௌதம் கார்த்தி - ஷ்ரத்தாவின் காதல் காட்சிகள், அதற்கான வசனங்கள் இரசிக்க வைக்கின்றது. வில்லன்களாக சூப்பர் சுப்பராயன், ஸ்டண்ட் சில்வா என ஸ்டண்ட் மாஸ்டர்களையே பயன்படுத்தியது புத்திசாலித் தனம்.

ஆர்.ஜே.பாலாஜி 10 படம் நடித்தால் அதில் 4 படத்தில் தான் காமெடி நன்றாக க்ளிக் ஆகும். அப்படி க்ளிக் ஆகியுள்ளது இவன் தந்திரன். ஹேராம் பட ஹீரோயின் உதடு மாதிரி இருக்கு, OLA ஆட்டோ வந்தால் உங்க வியாபாரம் போச்சா... அதுக்கு தான் மீற்றர் போட்ருக்கனும், கழுத்துல அடிப்பட்டால் நீ என்ன எம்.ஜி. ஆரா... இவன் அம்பானி, அவ ஹர்பஜன் சிங் வேலை முடிஞ்சதும் கட்டிப் பிடிக்க போறாங்க என இன்றைய ட்ரண்ட் மிமிகிரியேட்டர்களுக்கு நல்ல தீனி யாக பல டயலாக் அமைந்துள்ளது.

தற்போது மெஜாரிட்டியை டார்க்கெட் செய்து அதில் வெற்றி பெறுவது தான் டெக்னிக். அதே போல் தான் இன்ஜினியரிங் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருக்கும் மாணவர்கள், படிக்கும் போதே பணம் கட்ட முடியாமல் தவிக்கும் மாணவர்கள் நிலை என இன்றைய இளைஞர்கள் போராட்டத்தை அழகாக காட்டியதற்காகவே கண்ணனை பாராட்டலாம். ஆனால், ஜெண்டில்மேன், வேலையில்லா பட்டதாரி படங்களின் சாயல்களை தவிர்க்க முடியவில்லை.

பிரசன்னகுமாரின் ஒளிப்பதிவு பட்ஜெட் பிரச்சினையா என்று தெரியவில்லை. இரவு நேரத்தில் வரும் காட்சிகள் எல்லாம் கொஞ்சம் குறும்படம் போல் உள்ளது. தமனின் பின்னணி இசை மிரட்டல், பாடல்கள் பெரிதும் கவரவில்லை. ஒரு சில படங்களின் சாயல் பல இடங்களில் தெரிகின்றது.

லாஜிக் மீறல்கள் பல இடங்களில் ஒரு காட்சியில் பணம் கட்டாததால் என்னால் தேர்வு எழுத முடியவில்லை என்று ஷ்ரத்தா கூறுகின்றார். ஆனால், அதற்கு முந்தைய காட்சியில் தான் கௌதம் அவருடைய தேர்விற்கு பணம் கட்டி வருகின்றார்.

மொத்தத்தில் இந்த பிரச்சினையை எந்த காலக்கட்டத்திற்கு எடுத்தாலும் பொருந்தும் என தந்திரமாக திரைக்கதை அமைத்த கண்ணனே ரியல் தந்திரன்.





மேற்படி நிகழ்வில் வட்டக்கச்சி சமூகத்துடன் தொடர்புபட்ட அனைத்து உள்ளங்களையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து இந் நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

– கல்லூரிச் சமூகம்

# யானும் தீயவன்

சினிமாத்துறையில் படங்களை வெளியிடுவதில் கூட சில சிக்கல்கள் இருக்கிறது. ஆனாலும் பெரிய படங்களுக்கு நடுவே ஒரே நாளில் பல சிறு பட்ஜெட் படங்கள் வெளியாகிறது. இதில் ஒன்று தான் யானும் தீயவன். யார் அந்த தீயவன், என்ன தான் செய்கிறான் என்பதை பார்ப்போம்.

புதுமுகங்களில் இப்போது இன்னொரு முகமாக அறிமுகமாகிறார் ஹீரோ அஸ்வின் ஜெரோம். கல்லூரிக்காதல் இவரையும் தொற்றுகிறது. பாடும் திறமையால் ஹீரோயினை கவர்கிறார். இருவரும் வெளியே செல்லும் சுற்றும் நேரத்தில் மூவர் இவர்களை வம்பிழுக்கின்றனர்.



தன் ஹீரோயிசத்தை அவர்களிடம் காட்ட ட்விஸ்ட் ஆரம்பமாகிறது. ஹீரோயின் வர்ஷா பொல்லம்மாவை அவரது பெற்றோர் உயர்கல்விக்காக வெளிநாடு அனுப்ப திட்டமிடுகின்றனர்.

விமான நிலையத்தில் இருந்து ஜோடியாக இருவரும் தப்பித்து விடுகிறார்கள். நண்பரான ஜாங்கிரி மதுமிதா, வீட்டில் தஞ்சம் புகுகிறார்கள். நண்பர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து விடிவி கணேஷ் தலைமையில் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள்.

விசயமறிந்த பெற்றோர் அவர்களை ஒதுக்கிவைக்க இவர்கள் எங்கேயோ தனிகாட்டு வீட்டில் வாழ்க்கையை துவங்குகிறார்கள். அங்கு தான் இவர்களுக்கான ஆபத்து கட்டம் வருகிறது.

இதற்கிடையில் பிரபு தேவாவின் சகோதரர் ராஜூ சுந்தரம் பல கொலைகளை செய்து தடயம் தெரியாமல் தப்பித்து வாழ்ந்து வருகிறார். காவல் துறைக்கு சவாலாக இருக்கும் இவரை பிடிக்க பொன்வண்ணன் தலைமையில் ஒரு பொலிஸ் படை வேட்டையை ஆரம்பிக்கிறது.

ஹீரோ, ஹீரோயின் என்ன ஆனார்கள், ராஜூ சுந்தரத்தை பொலிஸ் பிடித்ததா என்பது தான் மீதிக்கதை. ஆடல், பாடல் என கல்லூரி வாழ்க்கையை கலக்கும் ஹீரோ மிக சீக்கிரமாக காதல் வசப்படுகிறார். சினிமாவிற்கு புது முகம். ஆனால் நடிப்பில் எக்ஸ்பீரியன்ஸ் போல காட்டியிருக்கிறார். அவரின் நடிப்பு கதைக்கு ஈக்குவல்.

ஹீரோயின் வர்ஷாவை பார்த்தும் நமக்கு அடிக்கடி நஸ்ரியாவின் ஃபேஸ் வந்து போகும். இவ்வளவு ஏன், சிலருக்கு சாய்பல்லவி மாதிரியும் தோன்றலாம். அவரின் முகபாவனைகள் அப்படி தான் இருக்கிறது.

முதலில் ராஜூ சுந்தரம் தான் ஹீரோ போல தெரிவார். இவரின் சிறு வயது தோற்றத்திற்கு ஒரு இளைஞனை தேர்வு செய்திருப்பார் பாருங்கள். அவரை பார்த்தால் இளவயது ஷாருக் கான் போல இருக்கிறது. ராஜூ சில படங்களில் கேரக்டர் ரோல் பண்ணியிருந்தாலும் இப்படத்தில் வில்லனாக நடித்திருக்கிறார்.

பொன்வண்ணன் பற்றி சொல்லவே வேண்டாம். காவல் துறை அதிகாரிக்கு பொருத்தமான செலக்ஷன். ஜாங்கிரி மதுமிதா சில இடங்களில் வந்து போகிறார். இவருக்கு ஜோடியாக அருண்ராஜா காமராஜ்.

படத்திற்கேற்ற இசை போதுமான அளவில் பின்னணி இசையை பயன்படுத்தியிருக்கிறார். இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி உண்மையாக நடந்த சிறு சம்பவத்தை படமாக காட்டியிருக்கிறார் இயக்குனர் பிரசாந்த்.

ஹீரோ, ஹீரோயின் கெமிஸ்ட்ரி ஓகே. முதல் அட்டம்ட்டிலேயே ஹீரோ பாஸ். இயக்குனர் கதை நகர்த்தும் விதம் சரியான ரூட்.

ஒரே ஒரு ஸ்மைல் என்றால் விடிவி கணேஷால் தான். ஜாங்கிரி மதுமிதா, விடிவி கணேஷ் என காமெடி நடிகர்கள் இருந்தும் காமெடிக்கான பிளாட் ஃபார்ம் இல்லாமல் போய்விட்டது. எஞ்ஜாய்மெண்ட் மிஸ்ஸிங்.

அருண்ராஜா காமராஜ் காமெடி செய்ய முயற்சிக்கிறார். ஆனால் அதற்கான களம் இல்லை. கிளைமாக்ஸில் இன்னும் சற்று வேகம் காட்டியிருக்கலாம். மொத்தத்தில் யானும் தீயவன் ஓகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அந்தந்தப் பரதையில்

இறந்து போன ஒன்றுக்காகவே
காத்திருந்து...
என் இருப்பை
நிச்சயித்து கொள்கிறேன்
அன்றொரு நாள்
வாய்மை வாய்மையொன்று
வாய்மையை வழி மொழிந்தவனை
வழி மறித்துக் கொன்றார்களங்கே
வரலாற்றில்...
மற்றொரு நாள் அஹிம்சையென்று
அழுது கிடந்தவனை
ஆயுதத்தால் வென்றார்களங்கே
அன்னை பூமியில்...
பின்னொரு நாள்
பாசம் பாசமென்று
பார் சொல் வாழ்ந்தவனை
பதவிக்காய் கொன்றார்களங்கே
புராணத்தில்
இன்னொரு நாள்
காதல் காதலென்று
காத்துக் கிடந்தவனை
கல்லறையில் சிறையிட்டார்களங்கே
காவியத்தால்...
இறந்து போன ஒன்றுக்காகவே
காத்திருந்து
என் இருப்பை
நிச்சயித்துக் கொள்கிறேன்

**சி.சாமந்தி**
**பளை**

## பெண்மையின் விடுதலை என்று பிறக்கும்

அன்று போராடினார் பாரதி
பெண்களின் விடுதலைக்காக
இன்றும் போராட பாரதி வருவாரோ
என்று ஏங்குகின்றது பெண் மனம்
இந்தக் கொடிய மிருகங்களின்
வலையினில் சிக்குண்டு தவிப்பதை விட
அந்தப் போரின் ஆயுதத்திற்கு
இரையாகி மாய்ந்திருக்கலாமே
பெண் இனமாக பிறந்த பாவமோ
உலகில் வாழ வழியில்லையோ
என்று ஒழியும் இந்தக் கொடுமை
என்று பிறக்கும் எமக்கு விடுதலை

**எஸ்.லக்ஷனா**
**கிளி/ இராமநாதபுரம் ம.வி.**

## சமர்ப்பணம்

வித்யா எனும் வித்தகி
விதையாகினாள் மண்ணிடை
புங்குடுதீவு சோபை இழந்தது
புலரும் பொழுது விழிநீர் சொரிந்தது
பாலியல் சுகம் தேடும்
பரதேசிகள் கூட்டமொன்று
பச்சைக்குழந்தையிவளை
பசியாறி மகிழ்ந்தது
கள்ளிமரக் காட்டினில்
காட்சியாய் தொங்கினள்
காமக் காடையர்கள்
களிப்புற்று மகிழ்ந்தனர்
பெற்றவர்கள் கதறியழ
உற்றவர்கள் துடிதுடிக்க
உலகமே மௌனிக்க
உருக்குலைந்தனள் கள்ளிக்காட்டினில்
ஈராண்டு சென்றது
இன்னுமில்லை நீதியிங்கு
இரக்கமற்ற கயவர்கள்
இதயத்துடிப்போடு வாழ்கின்றனர்
தமிழர் நெஞ்சங்களில் உறையும்
தங்கமகள் இவளன்றோ
தாங்கொணாத சோகங்கள்
தங்கையிவளுக்கு சமர்ப்பணம்

**உடுவிலூர் கலா**

## வாழ்க்கைச் சக்கரம்

அலையும் இவ்வுலகில்
நிலையில்லாதது
வாழ்வொன்று மட்டும்தான்!

பஞ்சணையில்
படுத்திருக்கும் குழந்தை
பாற்சோறு உண்ணமறுத்து
அழுகிறது!

ஏழைக் குழந்தையோ
பழஞ்சோறேனும்
கிடைக்காதா என அழுகிறது

வாழ்வு இதுதான்...

பூமி வட்டம்தானே
சுற்றுகிறது...

இன்று பாற்சோற்றை
மறுக்கும் குழந்தை
நாளை பழஞ்சோற்றுக்கு அழும்

ஒருவரால் உதவாது என
உதாசீனம் செய்யப்படுவது
இன்னொருவருக்கு
உதவுவதாகிறது

கடதாசி பொறுக்கி
விற்றுப் பிழைப்பு நடத்தும்
குடும்பங்கள்
இன்னும் இருக்கின்றன

விதி வட்டமானது
இன்று ஒரு முனையில் நின்றால்
நாளை இன்னொரு
முனையை அடையும்

முடிவு என்பது
வெறும் முற்றுப்புள்ளியல்ல
சில நேரங்களில்
முற்றுப் புள்ளிகளும்
ஆரம்பத்தைச் சுட்டும்
இதுதான் வாழ்வு

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்- 359



## எது வதை

உலகம் உனைப் பார்த்து
ஒரு நொடி நெகிழுமடா
சிறுவர் வதை என்று
சினந்தும் கொள்ளுமடா
தந்தை தாய் பிதிர்
கடல் கரைத்து
சோதரர் உடல் எதிர்
தாண்டி
வந்த போர் அவலம்
போக்க வழியது
தேடிப்பூவும் பிஞ்சுமாய்
போர்க்களம் புகுந்தோம்– பாரீர்
வஞ்சக தேசத்துக்காய்
வட்டுவாகல் குழந்தை நானே

**யாழ் வாகீஷ்**
**ஒட்டுசுட்டான்**

## துர்ப்பாக்கிய நிலை

உனக்கான
சுதந்திரத்தைப் பெற
புத்தகப்பை சுமக்க
வேண்டிய– கைகளில்
துப்பாக்கியை சுமக்க வேண்டிய
துர்ப்பாக்கிய நிலை ஏன்– உனக்கு
உனக்கான வானமும்
ஒருநாள் விடியும்
இனத்துக்கான அரசியல்
என்று– சில
சாக்கடையில் முத்தெடுக்கும்
மூடர் கூட்டம்
அழியும் என்று...

**கஜானி**
**கொக்குவில்**

## உன்னை மாற்றுவாய்

சிறுவனே துப்பாக்கி
ஏந்தும் உன் கைகள்
எழுதுகோல் பிடித்தால்
சரித்திரம் உன்புகழ் போற்றிடும்
மன உறுதியுடன் எழுந்து வா

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## பிஞ்சு

உன் பார்வையும் உறுதியும்
வயதை விஞ்சிவிட்டதே!
எதிரியின் கொடுமை விளைவித்த
பச்சிளம் பாலகா–இது
நிர்ப்பந்தம்
உனக்கிட்ட கட்டளையோ

**தேன்நிலா**
**நல்லூர்**

## பொறுத்திரு தம்பி

எதற்காக துப்பாக்கி
ஏந்துகின்றேன்
என் இலக்கு எதுவோ
எனப்புரியாத பாலகனே!
பயிற்சிக்காக ஏந்துகிறாயா?
பருவம் வரும் வரை
பொறுத்திரு தம்பி!
இப்போ துப்பாக்கியைக்
கீழே போடு
புத்தகத்தை கையில் எடு
கல்விப் பின்னால்
சாதனைகள் ஏராளம்

**அபிகுலமாலினா**
**சங்கானை**

## ரணகளத்தில் இளவல்

பனுவல் கொண்டலைந்த
பையன் செந்நீரின் சிதறலால்
வெருவிய தமிழன் காதை காக்க
பட்டிலே மூண்ட பட்போடியாய்
கவந்தம் நிறைய, யுதம் ஏந்தி
பிரிந்த ஆத்தும பிராணம் காக்க
மரும நியம் தாமம்சூடி
ஏக தமிழனாய் இளவல் மலர்ந்து
துப்பாக்கியால் குசலம் காக்க
தவப்புதல்வன் செழித்துவிட்டான்
இதானே ஜாக்கிரதை!

**சு.சுருதிகா**
**யா.வ.ம.க.**

## வாரீர்

எல்லைக்கு அப்பா
போனார் என்னதான்
ஆச்சோ தெரியா
கொல்லையாய் அம்மா
போக கொன்றவன்
முகத்தைக் காணோம்
முல்லையாய் இருந்த
வீட்டில் முழு உயிர்
தின்றான் பகைவன்
என்தனை ஏனோ விட்டான்
எதிரியை அழிப்போம் வாரீர்


**வா.சாரங்கன்**
**முத்தையன்கட்டு**

## புரட்சித் தீ

சின்னஞ்சிறுவன் நீ
சிந்தையிலே புரட்சித் தீ
கொழுந்து விட்டெரிந்து
உன் உள்ளம் வெந்ததால்
உணர்வு பொங்கி
உறுதி கொண்டு
போராட என்று
பொல்லாத முடிவுடன்
ஆயுதம் ஏந்தி
அனைவரும் உன்வசம் திரும்பி
மீண்டும் இங்கே
போராட நினைக்கிறாய்
தமிழினம் உயர்வு பெற்று
தன்மானம் நிலைத்திட

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி.**

# மௌனத்தின் தேடல் –360



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.07.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமாற்றம்

அந்தக் காலத்திலே தனியார் கல்வி நிலையங்களில் பரமசிவம் ஆசிரியர் என்றால் தெரியாத மாணவர்களேயில்லை. அந்தளவிற்கு தமிழ், தமிழ் இலக்கியம், இந்து சமயம் ஆகிய பாடங்களைக் கரைச்சுக் குடிச்சது மட்டுமல்ல தன்னிடம் சென்ற மாணவர்களுக்கும் நன்றாகப் பருகவும் கொடுத்தவர். இவரிடம் படித்த மாணவர்கள் யாவரும் திறமைச்சித்தி பெறவும் தவறியதில்லை.

காலை, மாலை, இரவு என்று மாறிமாறி பல தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பித்த பரமசிவம் ஆசிரியருக்கு திருமண வயதும் தலைதூக்கி நின்றது.

"பருவத்திற் பயிர் செய்ய வேண்டும்" என்ற முதுமொழிக்கிணங்க பரமசிவத்தின் தகப்பனார் பல இடங்களிலும் பெண் பார்க்கலானார். ஒன்று இரண்டல்ல பத்து பதினைந்திற்குக் கிட்டப் பார்த்தாச்சு.

அது கறுப்பு... இது உயரம்... மற்றது குண்டு... அடுத்தது முடி கட்டை... கடைசியாய்ப் பார்த்தது மிதந்த பற்கள்... என்றே எல்லாம் தவிர்த்துக் கொண்டிருக்கையில் எங்கடை நாட்டிலை யுத்தம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். சிலர் காணாமற் போனார்கள். இதைக்கண்ட இளைஞர்கள் பலர் வெளிநாடுகளுக்கு ஓட்டம் பிடித்தார்கள். பரமசிவமும் இங்கிருப்பது ஆபத்தானதே என்பதை உணர்ந்து இரவோடு இரவாகக் கடல் வழியாக இந்தியா சென்றார்.

இந்தியா சென்ற பரமசிவம் அங்குள்ள பிரபல்யமான கோயிலொன்றில் தொண்டராக இணைந்து கொண்டார். அக்கோயிலின் பூசகர்களுக்கு உதவி செய்வதுடன் இடையிடையே ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துவதற்கான அனுமதியும் கிடைத்தது. இது பரமசிவத்தின் மதிப்பை உயர்த்தியதனால் மேலும் ஆன்மீக அறிவை வளர்க்க விரும்பி பல புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினார்.

காலங்கள் சீரான வேகத்தில் கடந்து கொண்டிருந்தன. பரமசிவம் உண்மையான இறை பக்தனாக மாறிக் கொண்டிருந்தார். உடை, நடை, பேச்சு, செயல் எல்லாவற்றிலும் மாற்றங்கள் காணப்பட்டன. அக் கோயிலுக்கு வரும் பக்தர்களிற் பலர் பரமசிவத்தை ஒரு இறை தூதன் மாதிரியே கணித்தனர்.

அன்றொரு வெள்ளிக்கிழமை. பூசகர்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகளை முடித்த பின் அக் கோயிலின் மடாலயத்தில் தூய்மையான உள்ளங்களிலேயே இறைவன் குடியிருப்பான் என்ற தலைப்பில் பிரசங்கம் ஒன்றையும் நிகழ்த்திவிட்டு வெளியே வந்தார்.

அங்கே ஏகாம்பரமும் வேறு இருவரும் ஏதோ கதைத்துக் கொண்டு நின்றார்கள். இவர்கள் ஏன் இங்கு வந்தார்கள்? என்று நினைத்தபடி அருகே சென்ற பரமசிவத்தார் கதைக்கத் தொடங்கினார்.

எப்போதுமே பார்த்திராத சாமியார் கோலத்துடன் நின்ற பரமசிவத்தாரை யாரென்று கண்டுகொள்ள முடியாமல் நின்ற ஏகாம்பரத்தைப் பார்த்து நான் தான் உங்களூர் பரமகுருவின் மகன் பரமசிவம் என்றார்.

ஏகாம்பரத்திற்கு நம்ப முடியவில்லை. கண்களும் கணீரென்ற குரலும் பரம்சிவம்தான் என்பதை உறுதிப்படுத்த ஏன் இப்பிடிக் கோலத்தை மாற்றினீர்? இப்போது எங்கே இருக்கிறீர்? என்ன செய்கிறீர்? திருமணம் முடிந்து விட்டதா? என்று பல கேள்விகளைக்கேட்டார்.

வாருங்கள் எனது அறைக்குச் செல்வோம் என்று ஏகாம்பரத்தையும் அவருடன் வந்த இருவரையும் அழைத்துச் சென்று தன் முன்னே இருத்தி உபசரித்ததுடன் தன் கதையையும் சொன்னார்.

நான் இந்தக் கோயிலின் தொண்டராக வேலை செய்கின்றேன். எனது தேவைகள் யாவற்றையும் கோயில் நிர்வாகமே பூர்த்தி செய்கிறது. நான் தினமும் தியானம் செய்வேன். என்னைப்போல வேறு பல தொண்டர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து பிரார்த்தனையும் செய்வேன். இச்செயற்பாடுகளினால் இல்லறமென்ற சிற்றின்ப வாழ்க்கையை மறந்து இறைவனுடன் இணைந்த பேரின்ப வாழ்வை அடைந்துள்ளேன். இந்நிலையில் என்னை எவ்விதமான துன்ப துயரங்களும் அணுகுவதில்லை என்றார் பரமசிவம்.

உண்மையில் நீரொரு புண்ணியம் செய்த பிறவிதான். நீர் இங்கே வராமல் அங்கே இருந்திருந்தால் காணாமற்போனோர் பட்டியலில் உமது பெயரும் இடம் பெற்றிருக்கும் என்ற ஏகாம்பரம் தான் இந்தியாவிற்கு வந்த காரணத்தையும் தற்போதைய எம் நாட்டு நிலைமைகளையும் தன் குடும்ப நிலையையும் சுருக்கமாகச் சொன்னார்.

எங்கடை கடைக்காரர் கந்தசாமியின் மகளுக்கு நேற்றுக் கல்யாணம் நடந்தது. கனடா மாப்பிள்ளை. அவர் இலங்கைக்கு வரமாட்டாராம். அதுதான் மதுரையில் கல்யாணம் வைச்சவை. கந்தசாமியார் என்னையும் வரவேணுமென்று விடாப்பிடியாய் நின்றதாலை நானும் வந்தனான். மதுரைக்கு வந்தனாங்கள் மீனாட்சி அம்பாளிட்டையும் வராமற்போறதே? வந்தோம்... அம்மனின் அருள் பொழியும் திருவுருவத்தைப் பார்த்தோம். மனங்கசிய வணங்கினோம். இதன் பின்னே நீரும் சந்தித்தீர். நீர் இங்கே வந்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகுமென்று நினைக்கிறேன்.

நீர் வந்தாற் பிறகும் கனபேர் காணாமற் போய்விட்டார்கள். பெருந் தொகையான காணிகளையும் படையினர் தமது பாவனைக்காக கைப்பற்றியுள்ளார்கள். இவைகளுக்காக இப்போ மக்களால் பல வகையான போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

எதைச் செய்தாலும் எங்கள் நாட்டுப் பிரச்சினைகள் இப்போதைக்கு ஒரு முடிவுக்கு வரும் போலத் தெரியவில்லை. இதைவிட எனது வீட்டுப் பிரச்சினையும் சொல்றேன் கேளும்.

எனது மகளை உமக்குத் தெரியும் தானே? நீர் எங்கடை ஊரிலை இருக்கும் போதே கல்யாணம் பேசத் தொடங்கினனான். இன்னும் ஒண்டுமே கைகூடவில்லை. இப்ப வயதும் நாற்பதை எட்டிப் பார்க்குது.

கொஞ்சக்காலம் உத்தியோக மாப்பிள்ளை தேடினம். அது எல்லாம் சரிவராமற்போக வசதி வாய்ப்புக்களோடை உள்ள மாப்பிள்ளையைப் பார்த்தம். அதுவும் ஒப்பேறாமல் போக நிரந்தரத் தொழிலுள்ள ஒருவரைத் தேடி அலைஞ்சம். ஒன்றிரண்டு சரி வந்ததையும் அவர் அந்தப் பக்கம் இவர் இந்தப் பக்கமென்று உயர்வு தாழ்வு பார்த்து தட்டிக் கழிச்சுப் போட்டன். இப்ப இதையெல்லாம் நினைக்கப் பெரிய கவலையாயி ருக்கு என்றார்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த பரமசிவம் எல்லாம் அவன் செயல் என்றவர் மேலும் தொடர்ந்தார்.

திருமணம் என்பது முற்பிறவியிற் செய்து கொண்ட நல்வினை, தீவினைக்கு ஏற்பவே நடக்கின்றது. நல்வினை செய்தவர்களுக்கு உரிய வயதில் திருமணம் அமைவதுடன் அவர்கள் வாழ்க்கையும் நன்றாகவே நகர்கின்றது. தீவினை செய்தவர்கள் தடைகளையும் தாமதங்களையும் சந்திக்கிறார்கள். இவர்கள் தினமும் இறைவனிடம் கையேந்தி நின்றால் அத்தடைகளையும் தாண்டிவிடலாம்.

நான் எங்களூரில் இருந்த காலத்தில் திருமணத்திற்காகப் பல பெண்பிள்ளைகளைப் பார்த்து ஒன்றுக்குமே சம்மதம் தெரிவிக்கவில்லை. என்னைப் போலவே நீங்களும் மகளுக்கு மாப்பிள்ளை தேடும் விடயத்தில் நடந்திருக்கிறீர்கள்.

இப்படி மணமக்கள் பார்த்துக் குழம்புவது போலவே எங்கள் நாட்டு இனப்பிரச்சினையும் நீண்டகாலமாக பல பேச்சுவார்த்தைகளையும் தீர்மானங்களையும் ஒப்பந்தங்களையும் செய்து கொண்டாலும் என்றுமே இணக்கத்திற்கு வரமுடியவில்லை.

இப்பிரச்சினை தீர வேண்டுமாயின் இரு இனத்தாரின் மனங்களிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும். எது எப்படியிருந்தாலும் நம் நாட்டிலுள்ள அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணம் எல்லோரின் மனங்களிலும் ஆழமாகப் பதியவேணும்.

இதற்காக இரு சாராரின் பேச்சும் செயலும் பகைமையை வளர்க்காமலிருக்குமாயின் வருங்காலத்தில் நம் நாட்டில் நிரந்தர சமாதானம் மலரக்கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம் என்றார்.

பரமசிவம் சொன்ன மனமாற்றத்தைப் பற்றிச் சிந்தித்தபடியே ஏகாம்பரமும் மற்றைய இருவரும் கைகூப்பியவாறு அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றனர்.

சி.காசிப்பிள்ளை
கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 92

## வாழ்வில் வெற்றி பெற்றிட .... 6



வெற்றிப்பாதையில் வாழ்வை அமைதியாக நகர்த்திச் செல்வதற்கு அடிப்படையாக அமைவது மனமகிழ்வு, மனஅமைதி, மனநிறைவு என்பவையே என்று ஆய்வுகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

ஒருவரின் வாழ்க்கைத் தராதரமும் இவற்றைக்கொண்டே மதிப்பிடப்படுகின்றது. இந்த அடிப்படை அம்சங்கள் அற்ற வாழ்வை ஒரு வெற்றிகரமான வாழ்வு என்று கொள்ளமுடியாது.

கோபமும் வெறுப்பும் பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்ச்சியையும் மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகிறது.

இந்தப் பொது எதிரி எம்மை பல தடவைகள் தோற்கடித்துவிடுகிறான். எமது சிந்தனையினதும் செயலினதும் பெரும் பகுதியை கோபத்திலும் பகை உணர்விலும் செலவிட்டு எமது பொன்னான நேரத்தை விரயமாக்குவது வெற்றிக்கு வழிவகுக்காது. உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்ததாக அமையாது.

இதற்கு மாறாக மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது எமக்கு அளவுகடந்த ஆறுதலும் அமைதியும் பேராற்றலும் துல்லியமாகச் செயற்படும் திறனும் ஏற்படுகிறது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இறைவன் அன்புமயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வவல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு, பாராட்டும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதேசமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மை பிறர் வெறுப்பதற்கு காரணம் என்ன? நாம் இன்னொருவரை வெறுப்பதற்கு காரணம் என்ன? நாம் எதிரியாகக் கருதிக்கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக் கொள்ள என்ன செய்யலாம்? என்பது போன்ற சிந்தனை ஓட்டங்கள் எம்மில் ஏற்படும் பொழுது பல சிக்கலான முடிச்சுகள் தானாக அவிழ்ந்து விடும்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மை பலர் வெறுப்பதற்கும் நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படைக் காரணங்கள் வேறுபடலாம். அவற்றை கண்டறிய முயற்சிப்பது பல வெற்றிகளுக்கு வழி சமைக்கும்.

மற்றவர்களின் மன ஓட்டத்தை உணர்ந்து தவறுகளிருப்பின் மன்னித்து எமது தவறுகளையும் திருத்த முயன்று அனைவரிலும் அன்பு கொண்டு தடம் மாறாது பயணிக்கும் பயிற்சி பயனுடையதாக அமையும்.

கோபம் , வெறுப்பு, பகை என்ற எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிக்கும் போரில் பலமுறை நாம் தோற்றுப் போகலாம். அந்தத் தோல்விகள் நிரந்தரமல்ல. எமது முயற்சிகளை சில சமயம் முடிக்க முடியாமல் போகலாம். ஆனால் முயற்சிக்க முடியாதவர்களாக நாம் இருந்து விட முடியாது.

எமது மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு நாமே பொறுப்பாளிகள். இவை எமக்கு பிறர் தர வருவதில்லை நாமே தான் உருவாக்கி கொள்ள வேண்டும்.

தொடரும்...

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

## ஒரு குழந்தைக்கு சுவாசிப்பதற்கு சிரமப்படுவதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்

சாதாரணமாக நாம் சுவாசிக்கும் போது யாராவது அதை உணருகிறோமா? இல்லை. ஆனால் பல்வேறு நோய் நிலைமைகளில், தேவையான அளவு பிராணவாயுவை (ஒட்சிசனை) எமது சுவாசப்பையானது, மூளை உட்பட உடலுறுப்புகளுக்கு வழங்கமுடியாவிடின் சுவாச விகிதம் அதிகரிப்பதுடன் மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்படுகின்றது. சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதற்கு பலவிதமான காரணங்கள் உள்ளன.

### சுவாசத் தொகுதியுடன் தொடர்பான காரணங்கள்

- நாசி தொடக்கம் சுவாசப்பையிலுள்ள குழாய்கள் வரை காற்று போய் வருவதில் தடைகள் ஏற்படின் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். உதாரணமாக அதிகளவு சீதம் (Mucons) சுவாசக்குழாய்களில் படிந்திருத்தல், சுவாசக்குழாய்களின் உட்பக்கம் வீங்கியிருத்தல் அல்லது சுவாசக் குழாய்கள் சுருங்குதல் இந்த நிலைமைகள் மிகப் பொதுவான அஸ்துமா **(Asthma)** வருத்தம் உள்ளவர்களில் காணப்படும். அதே போல் குழந்தைகளின் சுவாசக் குழாய்களில் கிருமித் தொற்றுக்கள் ஏற்படும் போதும் ஏற்படலாம். இதை விட, பிற பொருட்கள் **(Doreith Body)** சுவாசப்பாதை அடைப்பினும் மூச்சு விடுவதில் கஸ்டம் ஏற்படலாம். குறிப்பாக 1-3 வயதுக்குட்ப்பட்ட குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களிலுள்ள சிறு பகுதிகளை விழுங்கினாலும் அல்லது கடலை, பருப்பு போன்ற உணவுத் துணிக்கைகள் புரக்கேறினாலும் திடீரென மூச்சு விடுவதில் கஷ்டமும் ஏற்படலாம்.
- பிறப்பின் போதே ஏற்படும் சில குறைபாடுகளால் சுவாசப்பாதையினூடாக காற்று உட்சென்று வருவதில் தடைகள் ஏற்பட்டால் பிறப்பிலிருந்தே மூச்சு விடுவதில் சிரமம் காணப்படுவதுடன் அசாதாரண சத்தமும் சுவாசிக்கும் போது கேட்கலாம்.
- சுவாசப்பையினுள்ளே உள்ள காற்றறைகளில் கிருமித்தொற்று **(Pneumonia)** கடுமையாக ஏற்பட்டாலும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும்.
- நாம் சுவாசிப்பதற்கு தேவையான நெஞ்சறை தசைகள் என்பவற்றில் குறைபாடு ஏற்படினும் மூச்சு விட கஷ்டம் ஏற்படலாம்.



### குருதிச் சுற்றோட்டத் தொகுதியுடன் சார்பான காரணங்கள்

சுவாசிப்பதில் கஷ்டம், தனியே சுவாசத் தொகுதியில் ஏற்படும் பிரச்சினைகளால் மட்டுமன்றி இருதயத்திலும் அதனோடு தொடர்பான இரத்தக் குழாய்களிலும் பிறப்பின் போதே ஏற்படும் குறை பாடுகளாலும் ஏற்படலாம். ஏனெனில் இரு தொகுதிகளும் ஒட்சிசனை உடலுறுப்புக் களுக்கு வழங்குவதற்கும் காபனீரொட்சைட்டை அகற்றுவதற்கும் இன்றியமையாதவையாகும். அதே போல் சிறுவர்களில் ஏற்படும் மூட்டுவாதக் காய்ச்சலால் இருதய வால்வுகள் பாதிப் படைந்தாலும் ,சிறுநீர்த் தொகுதி நோய்களால் இரத்த அழுத்தம் அதிகரிப்பினும் சுவாசிப் பதில் சிரமம் ஏற்படலாம்.

- மேற்குறிப்பிட்ட இரு தொகுதிகளிலும் ஏற்படும் பாதிப்புக்களால் மட்டுமன்றி சலரோக கடுமையான வயிற்றோட்டத்தால் நீரிழிப்பு ஏற்பட்டாலும் சலரோக வருத்தம் கடுமையாயினும் அல்லது சிறுநீரகத் தொழிற்பாடு கடுமையாக பாதிப்படையினும் சுவாச விகிதம் அதிகரித்து சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

### இனி சுவாசிப்பதில் சிரமம் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பதை பார்ப்போம்.

- ஒரு நிமிடத்தில் சுவாசிக்கும் வீதம் அதிகரித்தல் குழந்தைகளில் அவர்களின் வயதிற் கேற்ப சுவாச விகிதம் மாறுபடும்.

| வயது | சுவாச விகிதம்(நிமிடத்திற்கு) |
|---|---|
| பிறந்த குழந்தைகளில் | 40-60 |
| 1மாதம் தொடக்கம் 1வருடம் வரை | 30-40 |
| 1வருடம் தொடக்கம் 2 வருடங்கள் | 25-35 |
| 2 வருடங்கள் தொடக்கம் 5 வருடங்கள் | 25-30 |
| 5 வருடங்கள் தொடக்கம் 12 வருடங்கள் | 20-25 |

மேற்குறிப்பிட்ட சுவாச விகிதத்தை விட அதிகரித்து காணப்படின் உடனடி வைத்திய சிகிச்சை தேவையாகும்.

- விலா எலும்புகளுக்கிடையேயான தசைகள் , வயிற்றுத் தசைகள் மற்றும் கழுத்துத் தசைகள் சவாசிக்கும் போது அதிகமாக உட்சென்று வெளிவரின் குழந்தைகளுக்கு மூச்சுவிடுவதில் சிரமம் உள்ளது எனலாம்.
- சுவாசிப்பதில் சிரமம் உள்ள குழந்தை சுவாசிக்கும் போது இழுப்பு **(Wheezing)** போன்ற சத்தங்கள் காணப்படலாம்.
- பாலருந்துவதில் அல்லது உணவு உட்கொள்வதில் சிரமப்படல்.
- சுவாசக் கஷ்டம் மிகமிக அதிகமாயின் குழந்தை அழ முடியாமலோ கதைக்க முடியாமலோ அவதிப்படுவதுடன் அதன் நிறம் வெளிறியோ **(Pallor)** அல்லது நீலம் பாரித்தோ **(Cyanosis)** காணப்படலாம். இந்த நிலைமை மிக அபாயகரமான கட்டத்தை குழந்தை அடைந்து விட்டது என்பதைக்காட்டும்.
- எனவே பல்வேறு காரணங்களால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டாலும் அதன் ஆரம்ப அறிகுறிகளை முன்னதாகவே கண்டறிந்து உரிய காலத்தில், தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குழந்தை களைப் பாதுகாக்க முடியும்.

Dr.ந.ஸ்ரீசரவணபவானந்தன்.
குழந்தை நல வைத்திய நிபுணர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org